அக்டோபர்- டிசம்பர் 1999
விலை ரூ. 10.

www.padippakam.com

# கவிதாசரண்

## கட்டுரை பற்றி:

இது முதலும் அல்ல
ஆயினும் ஆகத்தான் நீளம்
அனுமன் வால் மாதிரி—

அதனால் என்ன
அமர்ந்தால் அவனுக்கது சிம்மாசனம்

நுணுக்கம் தோய்வது
சிற்றிதழ் நோன்பு
துணுக்கில் வாழ்வது
வெகுமக்கள் பண்பு

பதிவிலென்ன இருக்கிறது
நம் பார்வையைத் தவிர

எழுத்தில்தானென்ன இருக்கிறது
நம் மொழியைத் தவிர

இரண்டும் நமக்கு
தமிழாய் தலித்தாய்
பின்னப் படாமல்—

படிப்பகம்

www.padippakam.com

# தாய்மையும் சேய்மையும்

குழந்தை—
தவறான உறவில் பிறந்ததாக இருக்கலாம் என்கிறார்கள்.

தாய்—
கொன்றுவிடாமல் குப்பையில் எறிந்திருக்கிறாள்.
குப்பம்மா, குப்பன்- எனப் பெயரிட்டாலும்
கொஞ்சி வளர்த்தார்கள்.
குப்பைகளாகவா நினைத்தார்கள்.
குப்பையில் மணிகளாக நினைத்தார்கள்.

இந்தத் தாய் ஒரு பெண்.
இவள் குழந்தையும் ஒரு பெண்.
முள்ளில் எறிந்திருக்கிறாள்.
உடம்பெங்கும் காயம்.
பிறந்து இருநாள்களே ஆனது.

வாழ்க்கை முள்ளாக இருக்கலாம்.
வீழத்தான் வேண்டும் என்பதில்லை.
வீசத்தான் வேண்டும் என்பதுமில்லை.
போராடுபவர்கள்தாம் இந்த வாழ்க்கையில்
பொருள் இருப்பதை உணர முடியும்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு
மறுவாழ்வுத் திட்டம்:
வீடு கட்டிக் கொள்ளக் கடன்.
வியாபாரக் கடன்.
மனைகளில் வீடுகள் இல்லை.
தகுதியற்றவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.
அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க
மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டிருக்கிறார்.

சிங்கள இராணுவம் சிறைப்பிடித்துப்போனதால்
காணாமல் போனோரைத் தேடும் தமிழர்களுக்கு
யாழ் கள்ளுகுழி பகுதியில்
ஒரு புதைகுழி பற்றித் தெரிய வந்திருக்கிறது.
எத்தனையோ புதைகுழிகளில் இதுவும் ஒன்று!
மாணவி கிரிசாந்தி, தாயார், சகோதரன்,
அண்டை வீட்டார்- என்று
300 முதல் 400 சடலங்கள்!

—இதன் தொடர்ச்சி பின் அட்டை உள் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# கவிதாசரண்

பத்து இதழ்களுக்கான
சந்தாத் தொகை ரூ. 100
வெளிநாடு: 16 US டாலர்
சந்தாவை M. O. செய்க.

படைப்பிலக்கிய இதழ் ★ ஆசிரியர்: கவிதாசரண்

முகவரி:
ஆசிரியர், "கவிதாசரண்", 31, டி.கே.எஸ். நகர், சென்னை-600 019.
Editor, KAVITHAASARAN, 31, T.K.S. Nagar, Chennai-600019.

**புதிய தொலைபேசி எண்: 573 44 99**

"மனித நேயப் பார்வையோடு, தமிழின்
கலாச்சார - பண்பாட்டு மதிப்பீடுகளை
இலக்கியத் தேடலாக்கும் இதழியக்கம்.

அக்டோபர் 21 - டிசம்பர் 1999 விலை ரூ. 10.

படிப்பகம்

www.padippakam.com

ஒரு நெடுங்கதையின் தொடக்கம்
காலம்: 1956

# சங்கர நோக்கி

கவிதாசரண்

## 1

அடைமழை இரவை அடர்த்தியாக்கிக் கொண்டிருந்தது. இரைச்சல் என்று சொல்லி விட முடியாதபடி அதன் பொழிவு ஓர் இசைவான தாளக்கட்டை இழைத்துக்கொண்டுவிட்டது. இடிமுழக்கமற்ற வானத்தில் அவ்வப்போது பிசிறுபிசிறாய் நுரைத்தடங்கும் மின்னொளியில் மழைநீர் சரம்சரமாய் தரையிறங்கும் சித்திரம் விழிப்புலனில் பட்டுச் சிதறியது. மழையோசையால் நெய்த திரைச்சீலைக்குக் கரைநூல் பிடித்தாற்போல சுவர்க்கோழி தன் ரொய்ங்காரத்தை வெகு ஒட்டாரமாக நூற்றுக் கொண்டிருந்தது.

சங்கரன் மழையின் பார்வையாளரைப் போலத் தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். கூரைவீட்டுத் திண்ணை பெரும்பாலும் குறுகலாய் இருக்கும். ஆனால் இது ஆளோடி மாதிரி அகலமாகவும் உயரமாகவும் இருந்தது. திண்ணை விளிம்பில் சாரல் தடுப்பாகச் சாக்குப் படுதா தொங்கியது. கூரை வாரி நீரால் நனைந்து கனத்த அதன் கீழ்க் கங்கு மழைக்காற்றைத் திண்ணையேற விடாமல் தடுத்து நின்றது.

சங்கரன் இவ்வாறு உட்கார்ந்திருப்பது மழையால் என்றில்லை. மனம் விழித்திருக்கும்போதெல்லாம் இதுபோல் உட்கார்ந்து கொள்வார்; ஊறிவரும் வாய்நீரை அவ்வப்போது 'க்ள்க்' என்னும் ஓசையோடு தொண்டைக்குள் இறக்கிக்கொள்வார்: வாய்க்குள் பிசுபிசுப்பு தட்டும்போது எச்சிலைத் துளித்துளியாய்த் துப்பிக்கொள்வார்; அப்படித் துப்ப நேரும்போது அதற்குரிய வசதியான இடத்தில் அமர்ந்துகொள்வார். இப்பழக்கங்களுக்காக அவரை யாரும் வேறுபடுத்திப் பார்த்ததில்லை. மாறாக, அவையே அவரை மதிப்பிடுவதற்கான சரியான அளவுகளாக இரண்டொரு நெகிழ்வான தருணங்களில் சித்தரிக்கப்பட்டதுண்டு. அதாவது, அவருக்குத் தன்

படிப்பகம்

www.padippakam.com



குடும்பப் பொறுப்புகள் ஞாபகம் வரும்போதெல்லாம் அவற்றை வாய்நீராக விழுங்கியோ, எச்சிலாகத் துப்பியோ தன்னை அனிச்சையாக மீட்டெடுத்துக்கொள்கிறார் என்பதாக.

மழையின் கடுமை திண்ணையைப் பாதிக்கவில்லை என்றாலும் உள்வீட்டைக் கூடுதலாகவே பாதித்தது. போன மழைக்குச் சொட்டுச் சொட்டாய்க் கசிந்த இடங்களிலெல்லாம் இப்போது 'தொர தொர'வென்று ஒழுகியது. ஒழுகிய இடங்களில் கும்பா, வட்டி, குண்டான், அருக்கஞ்சட்டி எனப் பாத்திரங்கள் நீர்க் கொடை ஏந்தி நின்றன. வரகு தாள் கொண்டு மூடப்பட்ட மேற்கூரை நாள்பட்டுப் போனதால் மட்கிவிட்டது. உடனே மாற்றாவிட்டால் அடுத்த மழைக்கே உட்கார்ந்து விடலாம். ஆனால் மாற்றுவது அப்படியொன்றும் எளிதாய் இல்லை. இதுமாதிரி சின்னச் சின்னச் சிதைவுகள் யாவும் சங்கரன் தன் அன்பான குடும்பத்துக்கு வரமாக வழங்கிய கொடைகள் என்று சொன்னால் தப்பில்லை. ஆனால் அந்த உண்மை அவருக்கெதிரான அவதூறல்ல என்பது தான் அதனினும் கூடுதலான உண்மை அறுபத்தாறு தலைக் கட்டுகள் கொண்ட, கூரைகள் அடர்ந்த அந்தச் சேரியில் சங்கரன் வீடு மட்டும் சராசரியைவிட உயர்ந்தும் பரந்தும் இருந்தது. ஓட்டு வில்லை வீடு கட்ட விழைந்து, கல்சுவர் எழுப்பி, அது கையெட்டும் உயரத்தைக் கடந்த பிறகு, விரித்த குடையை மடக்கி அடக்கினாற் போல, "வேணாம். கூரையே போட்டுக்குவம்," என்னும் புதிய முடிவெடுத்து கட்டி முடிக்கப்பட்ட வீடு. அதன் காரணம் என்னவாக இருப்பினும் வெளிப்படையாகச் சொல்லப்பட்டதென்னவோ, "சித்திரை வெக்கையில சீம ஓடு ஒடம்புத் தோல உறிச்செடுத்திடும்" என்பதுதான்.

"குடியானவத் தெருவுல காரை வூடு கட்ட வக்கிலாதவுக கடன ஒடனப் பட்டாவது ஓட்டு வில்லை போட்டுக்குறாகளே, அவுகளுக்கு வெக்கையடிக்காதா?"

"அடிக்குந்தான். ஆண்டைச் சாதிங்கிற கௌரதைக்கு அதைக் கூடத் தாங்கிக்கலன்னா எப்படி?"

சங்கரனின் தந்தை உயிரோடு இருந்தவரை அந்த வீடு சீரும் செழிப்புமாகச் செல்வாக்கோடுதான் இருந்தது. அவருக்கு மூன்று மகன்கள், ஒரே மகள். சங்கரன்தான் மூத்த பிள்ளை. அவருக்கும் அவருக்கடுத்தவருக்கும் திருமணம் முடிந்து பிள்ளைகள் பெற்றாயிற்று. கூட்டுக் குடும்பம். உழைக்கத்தயங்காத நான்கு ஆண்கள், நான்கு பெண்கள். விளைய மறுக்காத நிலங்கள். இரண்டு ஜோடி உழவு மாடுகள், மூன்று காராம் பசுக்கள், கன்றுகள், ஒரு

படிப்பகம்

www.padippakam.com



பட்டி ஆடுகள் எனப் பெருகியிருந்த கால்நடைச் செல்வம். சோறு பொங்கத் தனித் தாழ்வாரத்துடன் கூடிய பெரிய வீடு, தானியக் கிடங்கு, பிணையல் களமாய்ப் பயன்படும் பரந்த வாசல், எதிர் வரிசையில் வீட்டைவிட நீளமான தொழுவம், அதையொட்டி ஆடு களைக் கிடை மடக்கும் தோட்டம் – இவை யாவற்றையும் உள்ளடக் கிய சுற்றுச் சுவர்.

அது ஒரு பண்ணைவீடு என்பதற்குரிய எல்லா அம்சங்களும் பொருந்தியிருந்தாலும், பண்ணையார்களே பண்ணையாள்களாய் இருந்ததால் யாரும் அப்படிப் பெயரிட்டு அழைப்பதில்லை.

அவர்கள் இரண்டு வயல்களைக் குத்தகைக்கு எடுத்துப் பயிர் செய்தார்கள். அவ்வப்போது கரும்பு பயிரிட்டு, ஆலை போட்டு அச்சுவெல்லம் காய்ச்சினார்கள். ஆட்டுப்புழுக்கை நிலத்துக்கு அரிய உரம் என்பதால் கோடைக்காலங்களில் கேட்கிறவர் நிலங்க ளில் பட்டி மடக்கினார்கள். குத்தகைக்கு நெல் அளந்தது போக நெல்மூட்டைகள் வரிசையாக வண்டிகளில் வந்திறங்கும். மிகை நெல்லில் ஒரு பகுதியை விற்றுப் பணமாக்கினார்கள். மீதி நெல்லை அவ்வப்போது கலம்கலமாக அவித்து உலர்த்தி ஆள் வைத்துக் குத்தி அரிசியாக்கினார்கள். சந்தை விலையைவிடச் சற்றுக் குறைந்த விலைக்கே தங்களின் வளவு மக்களின் தேவைகளுக்கு அளந்துவிட்டார்கள். ஊரோடு ஒத்து வாழ்வதானது ஒருத்தருக் கொருத்தர் உதவிக்கொள்ளத்தான் என்பதை உள்ளீடாகப் பேணி வந்த குடும்பம்.

வீட்டுக்கு ஓடு மாட்டவில்லை என்றாலும், மற்ற கூரைகளைப் போல் அல்லாமல், ஆளுயர ஆற்காடு கிச்சிலி சம்பா நெல்லின் அரிதாள் கொண்டு கரைவெளியாட்களைக் கூப்பிட்டு வேயப்பட்ட கூரை. வைக்கோல் மட்குவதற்கு முன்பாகவே அவ்வப்போது மாற் றப்பட்டது. அப்படியொருமுறை புதுக்கூரை போட்டுக் கொண்டி ருந்த போது அந்த வழியாகப் போன ஊர் மணியம் பார்த்துவிட்டு "என்னலே தில்லையம்பலத்துக்கு பொன்னோடு பூட்டுனாப்ல நிகு நிகுன்னு" என்று திருவாய் மலர்ந்தார்.

"கல்லடி பட்டாலும் கண்ணடி படக்கூடாதுப்பாங்க. பட் டாச்சே. கரிநாக்குப் பாவி கண்ணுல கொள்ளி வைக்க. அந்தச் சொல்லுக்குப் பொறவு மாட்டுக்கே கூளமத்துப் போச்சுன்னா, அப்புறம் கூரை மேயறதுக்கு எங்க போவுறது?"

அந்த வசவு ஒரு ஆறுதலுக்குத்தானே தவிர காரணம் அது வல்ல என்பது அவரவரும் அறிந்ததுதான்.

படிப்பகம்

www.padippakam.com



சங்கரனின் தந்தை காலமான கையோடு கூட்டுக்குடும்பத்தின் வேலைப் பகிர்வில் கண்காணிப்பும் வழிகாட்டலும் திட்டமிடலும் குலைந்து போனதால், அடுத்த இரண்டு போகங்களிலேயே எல்லாம் தலைகீழாய் மாறின. குத்தகை வயல்கள் ஒவ்வொன்றாய் கைவிட்டுப் போயின. பட்டி ஆடுகள் வளவு மக்களுக்குக் கடனுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. கறவை மாடுகள் வைத்துக்கொள்வது மிகையாகிப் போனது. நீண்ட தொழுவத்தில் ஒரு ஜோடி உழவு மாடுகளும் ஒரு பசுவும் சில ஆடுகளுமே எஞ்சின. தானியக் குதிர்களில் பல குழந்தைகள் ஒளிந்து விளையாடும் இடங்களாயின. போதுமான அளவு வானம் பார்த்த விளைநிலமும் உழைக்கத் தயங்காத மனிதர்களும் இருந்ததால் அன்றாடச் சோற்றுக்குப் பஞ்சம் வரவில்லை என்றாலும், அந்தப் பழைய செழுமை பார்த்திருக்கும் போதே கைநழுவிப் போன வலி இருக்கத்தான் செய்தது.

அந்தக் குடும்பத்தைப் பொறுத்தவரை சங்கரனின் இருப்பு அதிகப்படியாகத் தொங்கிக்கொண்டிருந்த ஆறாவது விரல் என்பது அவர் தந்தை காலத்திலேயே அறிந்ததுதான். ஆனாலும் ஆறாவது விரலோடு பிறந்த குழந்தை அதிர்ஷ்டசாலியாயிருக்கும் என்று நம்பப்படுவதுபோல் அவருடைய இருப்பும் அந்தக் குடும்பத்திற்குப் பெருமை தரும் விஷயமாகவே புனையப்பட்டது. அதன் காரணமாகவே அவருடைய கடைசித் தம்பி அண்ணனின் நிழலாய் இருக்கத் தீர்மானித்துத் தனக்குக் கல்யாணமே வேண்டாம் என்று கூறிவிட்டான். அவன் எப்போதும் ஓர் இரகசியம் போலத் தன் மெல்லிய கள்ளக்குரலில் வெகு இனிமையாகப் பாடிக்கொண்டிருப்பான். இப்போது அந்தப் பாட்டு கேட்கவில்லை. ஆனாலும் அந்த முகத்தில் மானுடச் செவிப்புலனால் நுகர முடியாதபடி உச்சக் குரலெடுத்துப் பாடிக்கொண்டிருப்பதான பாவனைதான் எப்போதும் தளும்பிக் கொண்டிருந்தது.

சங்கரனின் தங்கைக்கு இடதுகால் சற்று ஊனம். அவள் அத்தைக்கு ஒரு மகன் உண்டு. கோலிக் குண்டுகள் மாதிரி நீரோட்டமின்றி நிலைத்து மின்னும் கண்களும் குறிப்பற்ற வெள்ளைச் சிரிப்புமாய் இருப்பான். அவன் சுண்டுவிரலைப் பற்றியிழுத்துக்கொண்டு கடலில் இறங்கினாலும் ஏன் என்று கேட்காமல் கூட வருவான். சங்கரனின் தங்கை தன் அண்ணன்களுக்குத் தொந்தரவு கொடுக்காமல், தானே முயன்று தன் அத்தை மகனைப் பற்றிக்கொண்டாள். குடும்பம் சார்ந்த இந்நிகழ்வுகள் சங்கரனை வில்லங்கமில்லாமல் விடுவிக்கவே மேற்கொள்ளப் பட்டதாகத் தோன்றியது. அவரை அவர் போக்கில் விடுவதொன்றே குடும்பம் அவரைத் தக்க வைத்துக்கொள்ளும் வழி என்பது அவரது தந்தையின் கணிப்பு.

படிப்பகம்

www.padippakam.com



குடும்பம் சார்ந்ததும் சமூகம் சார்ந்ததுமான பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சமச்சீர்மை பேணும் மனிதர்கள் அர்த்தமுள்ள இல்லற வாழ்வை வென்றெடுத்தவர்களாக இருக்கலாம். ஆனால் அது எல்லோருக்கும் ஆகிவந்து விடுவதில்லை. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இரண்டு வார்ப்புத் தடங்கள் இருக்கும்போல. ஒன்று காமுறும் வார்ப்பு மற்றொன்று கைவிடும் வார்ப்பு. தன்னைக் காமுறும் வார்ப்பில் பொருத்திக் கொண்டவன் 'தன் பெண்டு, தன் பிள்ளை, வீடு வாசல்' என்று தன்னலம் பேணுகிறவனாகவும், கைவிடும் வார்ப்பில் பொருந்திப் போகிறவன் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று தானற்றுப் போகிறவனாகவும் நிலைப்படக் கூடும். இதில் சங்கரன் இரண்டாம் வகையைச் சேர்ந்தவராய் இருக்கக் கூடும்.

சங்கரன் ஒருநாள், 'அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்று தொடங்கும் பாடலைப் படித்து, திடீரென்று தனக்கு மூன்றாவது கண் திறந்துகொண்டதாகக் கிளர்ச்சியுற்று, முதலில் அது பற்றித் தன் தந்தையிடமே விவாதம் செய்தார். அதைக் கேட்ட மாத்திரத்தில் தன் மகனைப்பற்றி இனி அச்சம் கொள்ளத் தேவையில்லை என்னும் முடிவுக்கு வந்துவிட்டார் பெரியவர். அதை உறுதிப்படுத்தும் விதமாகத் தன் மகனின் சிந்தனைப் போக்குக்குத் தான் தடைக்கல்லாயிருப்பதைத் தவிர்த்தார்.

'அரிதரிது...' என்னும் பாடலை முதன் முதலில் பொருள் அறிந்து வாசித்தபோது சங்கரன் புத்தியில் ஓர் அதிசயமான பொறி தட்டியது. அந்தப் பொறியின் காந்தத் தன்மைக்கு அவர் பிறந்த சாதியும் அவரைப் பாதித்த அதன் சாரமும் காரணமாயிருந்திருக்கக் கூடும்.

'பிறவிகளிலேயே அரிய பிறவி மானிடப் பிறவி. எவ்வித ஊனமும் இல்லாமல் வலிய உடலும் எளிய மனமும் உதவும் குணமும் கொண்டு அரிய பிறவிகளாய்ப் படைக்கப்பட்டவர்கள் எப்படி தாழ்த்தப்பட்டவர்கள் என்னும் பெயரில் இழி பிறவிகளாய் ஒதுக்கப்படுகிறார்கள்? படைத்தவன் என்று ஒருவன் இருந்தால் இது அவனையே அவமதிக்கிற செயல் அல்லவா? ஈனப் பிறவிகளாய்ப் படைக்க எண்ணியிருந்தால் அவர்களைப் பன்றிகளாகவோ நாய்களாகவோ அல்லது வேறெந்த விலங்குகளாகவோ படைத்திருக்கலாமே. மனிதர்களாய்ப் படைத்திருக்க வேண்டாமே. சாதிக்கிளைத்தவனாய் எவனும் விரும்பிப் பிறப்பதில்லை என்னும்போது சாகும் வரை அவன் தன் எண்சாண் உடம்பையும் ஒருசாணாய்க் குறுக்கி வாழவேண்டும் என்பது சதிதானே தவிர விதியாக இருக்க

படிப்பகம்

www.padippakam.com



முடியாது. இந்தச் சதியிலிருந்து மீள்வதற்குத் தாழ்த்தப்பட்டவர்கள் தங்களைத் தாங்களே மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்தத் தன்மானம் வந்த பிறகு சாதியோ, நீதியோ அவர்களை அவமானப்படுத்திவிடுவது அவ்வளவு எளிதல்ல.

"என்னாங்க? சின்னவுங்க பெரியவுங்கன்னு வேத்துமையில்லாம வளவு சனங்க எல்லாத்துக்கிட்டயும் நம்ம புள்ள என்னன்னமோ ஓதிக்கிட்டிருக்கான். நீங்களும் பாத்துக்கிட்டிருக்கீங்களே. ஊரு பொல்லாப்பு நமக்கெதுக்கு?" என்று சங்கரனின் தாய் தன் கணவரிடம் முறையிட்டார்.

"அட வுடு புள்ள. அவன் சரியாத்தான் சொல்றான். ஊருன்னு நீ எதைச் சொல்ற? மேச்சாதி சாதிக்காரங்க மாத்தரந்தான் ஊரா? நாமளுந்தான் ஊருன்னு சொல்றான். என்ன தப்பு?"

"என்னா நீங்களும் அவனோட சேர்ந்துக்கிட்டிய."

"ஆமா, சேர்ந்துக்கிட்டேன். சொரணையில்லாதவன சொறி நாய்கூட எகத்தாளம் பண்ணும். அதனால நமக்கு சொரணை வேணும்னு சொல்றான். அதை நாம ஏன் கார்வார் பண்ணணும்? அத்தோட, இன்னொரு வகையில சந்தோசமா இருக்கு புள்ள. எங்கே இவன் துண்டு துணியைக்கூடத் தூக்கிக் கெடாசிட்டுத் தேசாந்தரம் போயிடுவானோன்னு பயந்தேன். அந்த பயம் இப்ப தெளிஞ்சு போச்சு. இவன் மண்ணைக் கிளறப் பொறந்தவன் இல்ல புள்ள. மனசைக் கிளறப் பொறந்தவன். அரைக்க அரைக்க அரைச்ச கையையே மணக்க வைக்கிற சந்தனம் மாதிரி கரையப் பொறந்தவங்கிறதுதான் அவன் வாங்கி வந்த வரம்னா, அப்படியே நடக்கட்டும்."

இதில் சங்கரனின் ஆளுமை வார்ப்பாக வாய்க்கப் பெற்றது, அவரைப் பார்த்தமாத்திரத்தில் சிறியவர், பெரியவர், நல்லவர், கெட்டவர் என்ற வேற்றுமை கடந்து வளவு மக்கள் எல்லோரும் 'இந்தா, நம்ம சேக்காளி' என்னும் ஈர்ப்பு வட்டத்துக்குள் வந்துவிடுவது தான். பனி போர்த்திய கருக்கிருட்டு அடிவான வெளி வாங்கலில் சுவடற்றுப் போவது போல, சங்கரனுக்குச் செவிசாய்க்கும் போது மனிதர்களின் அச்சமும் அடிமைத்தனமும் சுவடற்றுப் போவதே போல் அனுமானிப்பது சாத்தியமாயிற்று. இந்தச் சாத்தியப்பாட்டிற்கான அகக் கூறுகளின் மொழிப்பாடுகள் ஒவ்வொரு மனசுக்குள்ளும் மூச்சுக் கொப்புளங்களாய் வெடித்துவரக் காத்திருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



# 2

சங்கரனின் சாதி மக்கள் ஆறு கோயில் வீட்டுக்காரர்களாய்த் தொகுக்கப்பட்டிருந்தனர். அவர்களில் மையப் பகுதியில் இருந்த இரண்டு கோயில் வீட்டுக்காரர்கள் பங்காளிகளாய் இணைந்திருந்தனர். ஒரு கோயில் வீட்டில் நடக்கும் எல்லாவிதச் சடங்குகளும் அடுத்த கோயில் வீட்டிலும் அப்படியே நடந்தேறும். கோயில் வீடுகளும் பூசாரிகளும்தான் வெவ்வேறு. இவ்விரு குழுக்களும் சகோதரர்களைப் போலப் பழகிய இரண்டு கூட்டாளிகளின் வழி வந்தவர்களாய் அறியப் படுகிறார்கள். இப்பங்காளிக் குழுக்களில் இருந்த எல்லா ஆண்களுக்கும் குறைந்தபட்சம் தட்டுத் தடுமாறியாவது கையெழுத்துப் போடவரும் என்பதைவிட கைநாட்டுப் பேர்வழிகளாயிருப்பது அவானம் என்னும் உணர்வு இருந்தது. அவர்களில் சிலருக்குப் புராணப் படிப்பெல்லாம் அத்துப்படி. சில சமயங்களில் "அவனுங்க என்னா கொம்பு மொளச்சவனுங்களா?" என்று மற்றவர்கள் காற்றுவாக்கில் கத்தியடங்கும்படி, புத்திசாலிகளாய் இருப்பதற்காக சூதுவாதுகளைப் பேணுகிறவர்களாய்த் தோற்றம் கொண்டவர்கள். இவர்கள் மாட்டுக்கறி உண்பதில்லை. கள், சாராயம் குடிப்பதில்லை. (அந்த ஊரில் கள்ளுக்கடையோ சாராயக்கடையோ, குறைந்தபட்சம் காபி, டீக்கடைகூட இல்லை என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய சிறப்பம்சம்.) 'குடித்து விட்டு மாடு தின்னச் சம்மதித்த பாவத்துக்காகப் பறையனாய்ச் சபிக்கப்பட்டவரின் வழி வந்தவர்கள் நாம்' என்னும் தீராத ஆதங்கம் அவர்களிடையே இன்னமும் உண்டு. அதன் சான்றாதாரமாக ஒரு சம்பவம் நினைவு கூரப்படுவதுண்டு. சரியாக எழுபது ஆண்டுகளுக்கு முன் அவர்களில் ஒருவர், மேல் சாதியில் தனக்குச் சகோதரியாக வேண்டியவளின் திருமணத்திற்கு அவள் ஆசைப்படி சீர் கொடுப்பதற்காகப் பெரிய அண்டா ஒன்று வாங்கி வந்தபோது, அதில் "மாடு தின்னி மாத்தரையான் கோத்திரத்துச் சின்னச்சடையன் தன் தங்கைக்குக் கொடுத்த சீர்" என்று பெயர் வெட்டிக் கொடுத்தால் தான் வாங்கிக் கொள்வதாகக் கூற, அதற்குச் சம்மதித்துப் பெயர் பொறித்துக் கொடுத்த அண்டா இன்னமும் அந்தப் பெண் வீட்டில் உள்ளதாம். அண்டாவில் பொறித்த வாசகம் கொடுத்தவரைவிடப் பெற்றவரையே அதிகம் தலை குனிய வைத்ததால் அது புழங்கப்படாமல் பரண்மேல் கிடக்கிறதாம். ஆனாலும் அந்தப் பெண்மணியைக் கடைசிவரை அண்டா கொடுத்தவரின் குழந்தைகள் 'அத்தை' என்றுதான் ரகசியமாக அழைப்பார்களாம். அந்த அம்மாளும் அவர்களை அன்போடு சீராட்டுவாராம். வளவு முழுதும் அறிந்த கதை இது.

படிப்பகம்

www.padippakam.com



'பறச்சாதின்னு ஆனபிறகு எதுக்காக இந்தப் பாப்பாரவேசம்' என்று சொல்லி இரண்டொரு இளைஞர்கள் மீற முயன்றதுண்டு. ஆனால் பார்ப்பனியத் தீர்வுகளே ஊடும் பாவுமாக நெய்யப்பட்ட சமூக நெறியாள்கையில் இவ்வகை மீறல்கள் மீட்சிகளாவதில்லை என்பதால் அவர்கள் அடங்கிப் போக நேர்ந்தது.

இந்தப் பங்காளிக் கோயில்காரர்களோடு பிரித்தறிய முடியாத தாயாதிகளைப் போல ஒட்டிக்கொண்டனர் மேலும் ஆறு குடும்பத்தினர். அந்தக் குடும்பங்களில் ஒன்றுதான் சங்கரனுடையது. அவர்களுக்கு இங்கே கோயில் வீடு இல்லை. அது எங்கோ மாவட்டத்தின் தென்கோடியில் உள்ள ஒரு சிற்றூரில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தத் தலைமுறையினர் அதைப் பார்த்ததுகூடக் கிடையாது. அவர்களுக்கான வேண்டுதல், படையல்கள் யாவும் சில காலம் பொட்டல் வெளியில் நடந்து வந்ததாகவும், அதுவும் ஒரு கட்டத்தில் வழக்கொழிய, அவர்கள் ஓர்மை காரணமாகப் பங்காளி கோயில் வீட்டுக்காரர்களோடு சிறப்புரிமை பெற்ற தாயாதிகளாய் இணைத்துக்கொள்ளப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இருப்பினும் அவர்களின் தனித்துவமாக, புத்திசாலியாய் இருக்க சூதுவாது தேவையில்லை என்பதற்கு நல்ல உதாரணமாகத் திகழ்ந்தார்கள். அவர்களில் ஒருவர்- அவர் பெயர் ஆனைகுட்டி- அடுத்த ஊருக்குக் கடந்த பத்து ஆண்டுகளாகத் தொடர்ந்து வெட்டியானாக இருந்து வருகிறார்.

இந்த மையக் குழுக்களை ஒட்டிக் கீழ்ப் பக்கம் இருந்த கோயில் வீட்டுக்காரர்கள் மற்றவர்களை விடச் சற்று மாறுபட்டவர்கள். அதாவது மற்றவர்கள் அவர்களை மூடர்கள் என்று வகைப்படுத்தி சகித்துக்கொள்ளும்படியாக முரடர்களாகவும் வம்பர்களாகவும் பெயரெடுத்திருந்தார்கள். அவ்வப்போது சில திருட்டுக் குற்றங்களும், மேல்சாதிப் பெண்களைத் தீண்டிவிடும் குற்றங்களும் அவர்கள் மேல் சுமத்தப்படுவதும் தண்டிக்கப்படுவதும் உண்டு. சேரியில் 'கூ... கொள்ளை' என்று கூச்சல் எழுந்தால் அது இவர்களிடமிருந்துதான் பிறந்ததாக இருக்கும்.

இவர்களுக்கு முற்றும் மாறுபட்டவர்களாயிருந்தார்கள் மேல் பக்கத்தில் இருந்த கோயில் வீட்டுக்காரர்கள். எந்த வம்பு தும்புக்கும் போகாதவர்கள். வஞ்சனையில்லாமல் உழைக்கக்கூடியவர்கள். மற்ற குழுக்களைவிடவும், இக்குழுவில் வீட்டுக்கொரு பிள்ளையாவது பண்ணையடிக்கிறவனாக இருப்பான். அவன் நள்ளிரவு நெருங்கும் போது படுத்துக்கொள்ள மட்டுமே தன் வீட்டுக்கு வருவான். மற்றபடி முழுநேரமும் பண்ணைவீடுதான் கதி. அவனு

படிப்பகம்

www.padippakam.com



டைய உண் கலமாக ஒரு கும்பா அல்லது மண்சட்டி தொழுவத்து எரவானத்தில் வைக்கப்பட்டிருக்கும். மாதம் பிறந்தால் சில மரக் கால் தானியம் கூலியாக அவன் வீட்டுக்குக் கிடைக்கும். பெரும் பாலும் ஊரைவிட்டுச் சொல்லிக் கொள்ளாமல் ஓடிவிடுகிறவர்கள் இந்தப் பண்ணையடிக்கிற பையன்களாகத்தான் இருப்பார்கள்.

சேரியின் சனி மூலைப் பகுதியில் சச்சதுர நிலப்பரப்பில் பர வியிருந்தவர்கள் ஆறாவது கோயில் வீட்டுக்காரர்கள். அவர்களும் சற்று மாறானவர்கள் அல்லது நேரானவர்கள் என்று குறிக்கப்பட வேண்டும். பறைச் சாதியில் பிறந்துவிட்டு முரடர்களாகவும், வெகு ளிகளாகவும், மூளையுள்ளவர்களாகவும் காட்டிக்கொள்வதுபோன்ற முட்டாள்தனம் வேறொன்றுமில்லை என நம்புகிற, நயந்தும் பயந் தும் வாழ்வதே நாம் செய்யும் சாகசம் என்று மகிழ்கிற வயசாளி களைக் கொண்ட குழு இது. (ஆனால் இளைஞர்கள் இந்த நடை முறை ஞானத்திற்கு அடங்குகிறவர்களாய் இல்லை. 'அடங்கிப் போதல்' என்பதில் உள்ள தலைமுறை இடைவெளி ஒன்றும் கடக்க முடியாததல்ல என்பதைத சங்கரஞானம் பொதுப்பண்பாக்கியிருந் ததும் அதற்குக் காரணம்.) அவர்களது கோயில் வீடு ஒன்றுதான் அந்தச் சேரியில் உள்ள ஒரே காரைக் கட்டிடம். அக் குழுவைச் சேர்ந்த ஒற்றைக்கண் பேர்வழியான வன்னி என்பவர்தான் ஊர் வெட்டியான்.

நுணுகி நுணுகிப் பார்க்கும்போது சேரி மக்களிடையே இவை போலும் சில வேறுபாடுகள் பளிச்செனத் தென்பட்டாலும் அடிப் படையில் அவர்கள் எல்லாருக்கும் ஒரே சேரியார் கோயில்தான்; ஒரே சங்கரன்தான்.

மேல் சாதிக்காரர்களில் பன்னிரண்டு குறும்பக் கௌண்டர் குடும்பங்களும், பன்றி வளர்க்கும் ஐந்து ஒட்டர் குடும்பங்களும் கணக்குப்பிள்ளை வேலை பார்க்கும் ஒரு ஐயரும் தவிர, மற்ற நானூறுக்கு மேற்பட்ட தலைக்கட்டுகளும் ஒரே வகுப்பைச் சேர்ந்த வர்கள்தான்.

"ஒட்டருங்க பன்னி வளக்குறாங்க; திங்கிறாங்க. பன்னி விட்டை பொறுக்குறாங்க. நம்மளைவிடவும் நலிஞ்சு கெடக்கு றாங்க. அவுங்க எப்படி ஒசந்த சாதியானாங்க?"

"அவுங்க மாடு திங்கிறதில்ல."

"நாமக்கூடத்தான் திங்கிறதில்ல. சொல்லப்போனா பீத்திங் கிற பன்னியைவிட புல்லு மேயிற மாட்டைத் திங்கிறது ஒன்னும் அசிங்கமில்ல."

படிப்பகம்

www.padippakam.com



"இருக்கலாம். ஆனா அவுங்க மானங்கெட்டவுங்க இல்ல."

"அப்படின்னா நாம மானங்கெட்டவுங்களா?"

"ஆண்டை வீட்டுல கல்யாணம்-கருமாதின்னா சேரியில இருக்கிற குஞ்சு குளுவானெல்லாம் கையில ஒன்னு, கக்கத்துல ஒன்னுன்னு சட்டிப் பானையைத் தூக்கிக்கிட்டு ஓடி, நிக்கச் சொன்ன எடத்துல நின்னு, சோத்துப் பானை நெறயறதுக்காக மடங்கி மடங்கி வரிச புடுச்சு நின்னு, நெல்லுச்சோறும் பருப்புக்கொழம்பும் வாங்கிவந்து நெறச்சிக்கறதும், அவுங்க அப்பம்மாருங்க வேத்து விறுவிறுத்து, வேலை முடிச்சதும் அவுங்களோட முண்டாசுத் துணிய விரிச்சு, மிஞ்சிப்போன சோறு குழம்பை வாங்கி மூட்டை கட்டிக்கிட்டு வர்றதும், "மவராசன் நல்லாருக்க. வயிறு காயாம, அடுப்பு பொகையாம மூனு நாளை ஓட்டியாச்சி"ன்னு சொல்லிக் கொண்டாடுறதும் மாதிரி அவுங்க கொண்டாடுறதில்ல. அவுங்களுக்கு தின்னச் சோறில்லன்னா பன்னிவிட்டையை வித்துட்டு பல சமயம் நம்மகிட்டயே தானியம் வாங்கிக் குத்தி சோறு பொங்கித் திங்கிறாங்க. அந்தத் தன்மானம் நமக்கில்ல. நாமல்லாம் பாடு பட்டதுக்கு கூலி வாங்கிக்கிறதில்ல. மானங் கெட்டதுக்தான் தானம் வாங்கிக்கிறம். தானம்னா என்னா? வெறும் பிச்சை."

கிட்டிப்புள்ளும் கிச்சுகிச்சுத் தாம்பாளமும் சிறுவர் சிறுமிகளைப் பிரித்துப் பார்க்கலாம். ஆனால் சங்கர நேர்த்தி எல்லார்க்கும் ஒன்றுதான். நேர்த்தி என்றால் வேண்டுதல், பக்குவம் இரண்டும்தான். தன்மானம் பெறும் பக்குவத்திற்கான வேண்டுதல்.

ஆண்டைச் சாதியில் ஒரு பத்துப்பதினைந்து பேர் இலங்கையிலும் வெளி நகரங்களிலும் பெரு முதலாளிகளாயிருந்தார்கள். மற்றவர்களில் பெரும்பாலோர் வீடுவாசல், நிலம்நீச்சு என்று ஓச்சமாகவே இருந்தார்கள். ஒரு நாற்பது ஐம்பது குடும்பங்கள் பொருளாதார வசதியில் சற்று பின்னடைந்திருந்தாலும், சுயசாதித் செல்வந்தர்களுக்குத் தாங்கள் சளைத்தவர்கள் அல்லர் என்னும் வீம்பும் வைராக்கியமும் சற்றுத் தூக்கலாகவே அவர்களை ஆட்டுவித்தன.

நிலபுலன்களில் பயனீட்டும் எல்லாருக்கும் சேரி மக்களின் ஒத்துழைப்பு இன்றியமையததாய் இருந்தது. ஆனால் தொண்டூழியம் செய்யப் பிறந்தவர்களோடு எதுபற்றியும் சரிசமமாய் விவாதிப்பது அவர்களுக்குக் கற்பனைக்கப்பாற்பட்ட விஷயமாகவும், அதே சமயம் ஊழியர்கள் மேல் மிகுந்த அக்கறை கொண்டவர்களைப் போலக் காட்டிக்கொள்வது தங்களைக் காவல் தெய்வங்களாகத் தற்காத்துக்கொள்ளும் எளிய வழியாகவும் பட்டது. ஒரு அடிமைக்கு

படிப்பகம்

www.padippakam.com



எசமானனாய் இருக்கத் தெரிந்தவன் தன்னால் புதை சேற்றில் தள்ளிவிடப்பட்டவனைக் கைதூக்கிக் கரையேற்றிவிடும் மனிதனாய் உயர்ந்துவிட முடிவதில்லை. மாறாக, முழுகுகிறவனுக்கு ஆசி வழங்கும் தெய்வமாய் இருந்துவிட முடிகிறது. தெய்வங்கள் இந்த உலகத்தில் எசமான வடிவத்தில்தான் தோன்ற முடியும் என்பது அவர்களின் உவப்பான கற்பிதம். இந்த ஆண்டைகள் அண்டிப் பிழைப்பவர்களின் ஊழியங்களைத் தட்டுகளாகத் தொங்கவிட்டுக் கொண்ட நியாயத் தராசை ஏந்தும் செல்வந்தர்களாய் வெளிப்படுகிறவர்கள்; வெறும் சாதிமேலாண்மையை நிலைப்படுத்தும் கோவணாண்டிகள் அல்லர் என்னும் நுண்தளமே சங்கர நேர்த்திக்கான நாற்றாங்கால் ஆனது. இந்தப் பறையர்கள் காலால் எத்திவிட்டுப் போகும் மண்ணுருண்டைகள் அல்லர் என்னும்போது ஆண்டைகளின் நியாயத் தராசில் தட்டுகள் காணாமல் போகும்தான். அப்போது அவர்களுக்கான நியாயத்தை வெளிப்படையாக நிறுத்துக் காட்டுவது சாத்தியமில்லாமல் போகலாம். அதற்காகத் தங்கள் நியாயத்தையே விட்டுக்கொடுத்துவிடும் முட்டாள்தனத்தைச் செய்துவிட மாட்டார்கள்.

ஊருக்கு ஒரு நாட்டாண்மை இருக்க வேண்டுமே. இருந்தார் சொல்லுக்கு இளைத்தவர்களிடம் அகட விகடம் பண்ணத் தெரிந்த ஒரு காரணத்துக்காகவே ஊர் நாட்டாண்மையாகப் பல ஆண்டுகள் குப்பை கொட்டிக்கொண்டிருந்தவர் நடுத்தரமான வசதிக்காரரான மாச்ச பிள்ளை.

"புள்ளை என்னா புள்ளை... மா...ச்...ச புள்ளை. கவுண்டம்பா. மாச்ச கவுண்டன். எங்க காலம் பூரா கவுண்டன் பட்டம் கட்டிக்கிட்டு ஆடுனவுனுக இப்ப எப்புடி திடுதிப்புனு புள்ளைப் பட்டம் கட்டிக்கிட்டானுவ?

"சொத்து சேர்ந்தா கட்டிக்க வேண்டியதுதானே ஆத்தா."

"இவுனுக சொத்து சேத்த கதை தெரியாதாக்கும். பண்ணை அடிக்கவும் பயிர்ப் பண்ணாட்டு பாக்கவும் பறச் சாதி முறி எழுதிக் கொடுத்திட்டா கவுண்டன் வூட்டுக் களஞ்சியம் இந்தா இந்தான்னு ரொம்பி வழியாதா. களத்து மேட்டுல நெல்லு சொணையில நாள் பூரா கெடந்து மாஞ்சா, கூலி நெல்லா ஒரு மரக்கா குடுப்பானுங்க. அத வாங்கி வந்துதான் பொழப்பு நடத்தணும். முடியுமா?"

"கூடக் கொடுக்கச் சொல்லிக் கேக்கிறதில்லியா?"

"கேட்டா குடுத்துருவானுங்களா?

படிப்பகம்

www.padippakam.com



"பின்ன?"

"நாங்களும் அப்படி இப்படி கொஞ்சம் பீறாஞ்சிக்கறதுதான். கூலிதான் கூட்டிக் குடுக்க மாட்டிய. கருக்கா நெல்லையாவது அள்ளிக்கவுடுங்கன்னு கெஞ்சுவம். சரின்னா, ஆண்டை அசந்து மறந்து இருக்கிறப்ப அவுங்க கண்ணை மறச்சு நல்ல நெல்ல நாலு மொறம் கருக்காவோட தூத்திவுடறதுதான். மாட்டிக்கிட்டா நாக்கப் புடுங்கிக்கிற மாதிரி கேப்பானுவ. நாண்டுக்கலாம்னு வெறுத்துப் போவும். தப்பிச்சிக்கிட்டா அந்த கெக்கலிப்புலயே மரக்கா நெல்லுக்காவ மாடா ஒழைச்சதையெல்லாம் மறந்துடறதுதான். உலகம் பூரா பஞ்சை பனாதிங்க இப்படித்தான் உசுரு வளத்தாவணும். என்னா செய்ய. நூத்துக்கொரு மவராசன் பாவம் ஏழை பாழைங்க பொழச்சுப் போட்டும்னு கண்டும் காணாம போறதுண்டு. கூடவே மவராசன் பட்டம் கெடைக்கும்னு மனசுக்குள்ளியே ஒரு கணக்கு. ஆனா இந்த மாச்ச கவுண்டன் இருக்கானே, பதறக்கூட அள்ள வுடமாட்டான். மாட்டுக்கு அரைச்சி தவுடாக்கிப் போடணும்பான். ஆகமொத்தத்துல இவனுங்க சொத்து சேக்கறதுக்காக என்ன வேணும்னாலும் செய்வானுக."

"சொத்து சேக்கிறவுங்க எல்லாரும் செய்யிறதுதானே ஆத்தா. நம்மளப் பாரு, பறச் சனமா இருக்கிறதுக்காகவே கவட்டிக்குள்ள தலையை வுட்டுக்கிட்டு கண்டவனுக்கும் கூழக் கும்புடு போட்டுக்கிட்டிருக்கோம்."

"ஏ ராசா. அப்புடி சொல்லாதையா. நம்ம கையில பாடு இருக்குது. ஒழச்சாத்தான் சோறு. ஊழக்கும்புடு போட்டு பொழைக்கிற சாதியில்ல நாம. நீங்கள்லாம் மீசை வச்சிருக்கீங்களே, எதுக்கு? வேசத்துக்கு இல்லய்யா. அது ரோசத்துக்கு. கவுண்டமாருங்களப் பாரு. ஒதட்டு மேல ஒரு மசுரு இருக்காது. 'என்னா கவுண்டரே'ன்னு நீ நிமுந்தா, எதுக்க ஒரு காக்கா குருவிகூடக் கண்ணுல தெம்புடாதுய்யா."

அவர்கள் சாதியில் ஆர்நாடு வேளாளர். நடைமுறைப்பேச்சில் மொட்டை வெள்ளாளன் என்று அறியப்படுகிறவர்கள். அவர்கள் மீசை வைத்துக்கொள்வதில்லை என்பதால் சண்டைக்குப் பயந்தவர்கள் என்றொரு கருத்து பறையர் மத்தியில் படிந்திருப்பதாகப் பட்டது. சுற்றுப்பட்ட ஏழெட்டு ஊர்களில் பரவியிருந்த இவர்கள் அந்தக் காலத்தில் புதுக்கோட்டை சமஸ்தானத்திலிருந்து வந்தவர்கள் என்றொரு செவிவழி வரலாறு சொல்லப்படுவதுண்டு.

படிப்பகம்

www.padippakam.com



# 3

மேலுக்கு வெகு அமைதியாகத் தெரிந்த அந்த ஊரில் சங்கர நேர்த்தியின் அடர்முளையில் ஒன்று சற்றும் எதிர்பாராதவிதமாக ஒருநாள் தன் வீரியத்தை வெளிப்படுத்தியது.

ஊர்வெட்டியான் ஒவ்வொரு இரவும் ஆண்டைமார் தெருக்களில் வீடுவீடாகச் சென்று சோறெடுக்கிற உரிமையுள்ளவர். ஒவ்வொரு வீட்டிலும் கையளவு சோறும் அதற்கேற்ற குழம்பும் கிடைக்கும். வெட்டியான் வேலை பார்க்கும் போது அந்தக் கதம்பச் சோற்றைக் கொண்டே காலம் தள்ளிவிட முடியும். ஆண்டைச் சாதியினரில் கம்பு, கேழ்வரகு, சோளம், சாமை, திணை முதலிய நவதானியங்களை ஆக்கித் தின்கிவர்கள்கூடத் தங்கள் கௌரவம் கெட்டுவிடக் கூடாதென்பதற்காக ஒரு கைப்பிடியரிசி எடுத்துப் பொங்கி, வெட்டியானுக்கு நெல்லுச்சோறு போடுகிறவர்கள் உண்டு. வெட்டியானே விரும்பிக் கேட்டு களியுருண்டையும் காடித்தண்ணியும் வாங்கிக் கொள்வதுமுண்டு. எனினும் இச்சலுகை தங்களை இளக்காரப் படுத்திவிடக்கூடாது என்பதில் அவர்கள் முன்னெச்சரிக்கையாயிருப்பார்கள்.

ஒருநாள் வெட்டியான் வன்னியின் பதினோரு வயது மகள் சின்னப்பொண்ணு சோறெடுக்கச் சென்றாள். அவள் கொண்டு சென்ற சோற்றுப் பாத்திரமும் குழம்புப் போவனியும் நிரம்புகிற நேரத்தில், ஒரு பெண்மணி – தீண்டாமையை வெகு ஆடம்பரமாகப் பேணி மகிழ்கிற துடிப்பான பெண்மணி – தான் தின்று கொண்டிருந்த எச்சில் சோற்றில் ஒரு கையளவு கொண்டு வந்து போட்டதோடு, "கழிசடை, வுட்டா வூட்டுக்குள்ளியே ஓணான் குட்டியாட்டம் பூந்துடுவியே. வெளி செவுத்தத் தாண்டக் கூடாதுன்னு எத்தனை தடவைடி சொல்றது நாயே" என்று அருவருப்பாய் வக்கரித்தாள். சின்னப்பொண்ணுவின் தாடை இறுகியது. அந்தப் பெண் தொழுநோய் பிடித்த அம்மணக்குண்டியாக அவள் கண்ணுக்குத் தோன்றினாள். உடனே அவளை நோக்கி, "இந்தா, ஒன் சோறு. எல்லாத்தையும் நீயே தின்னு" என்று சொல்லிச் சோற்றுப் பாத்திரத்தை 'போத்'தென்று அங்கேயே போட்டுக் கவிழ்த்து விட்டு, குழம்புப் போவனியோடு வீட்டுக்கு வந்துவிட்டாள். வீட்டில் தன் தந்தையிடம் சோற்றுப் பாத்திரம் கைதவறி விழுந்துவிட்டதாகவும் அள்ளுவதற்குள் அந்த ஆண்டை வீட்டம்மாள் அடிக்க வந்ததால் அப்படியே போட்டுவிட்டு ஓடி வந்துவிட்டதாகவும் பொய் சொன்னாள். அவளை நாலு சாத்து சாத்திவிட்டு பாத்திரத்தை

படிப்பகம்

www.padippakam.com



எடுத்துவர ஓடியவரிடம் அந்தப் பெண் பெருங் குரலெடுத்துக் கத்தி, ''ஊரைக்கூட்டி உன்னையும் உன் பொண்ணையும் என்ன செய்யிறேன் பார்'' என்று சபதமிட்டாள். வன்னி அவளைக் கையெடுத்துக் கும்பிட்டு, ''மாப்பு தாயி. நான் புள்ளகுட்டிக்காரன். என் பொழப்புல மண்ணு வுளுந்துடும். காப்பாத்துங்க தாயி,'' என்று கெஞ்சியவராய், தரையில் கொட்டிய சோற்றைச் சுத்தம் செய்து, தண்ணீர் தெளிக்கச் சொல்லி அந்த இடத்தைத் தன் துண்டால் துடைத்துவிட்டு வந்தார். ஆனாலும் அப் பெண் ஊர் நாட்டாண்மையிடம் வழக்குத் தொடுத்துவிட்டாள்.

ஊர் கூடியது. சாவடியில் பெரிய மனிதர்கள் அமர்ந்திருக்க அதன் வெளிப் புறத்தில் இருபக்கத்து மக்களும் திரண்டிருந்தனர். வன்னிக்கு பெருந்தொகை தண்டம் விதிக்கப்பட்டது. சிறப்பு அனுமதியாக வன்னியுடன் சின்னப்பொண்ணுவும் சேர்ந்து 'தாங்காது சாமி, தாங்காது சாமி' என்று விழுந்து கும்பிட்டபடியே இருந்தனர். மூன்று கும்பிடுகளுக்கு மாறாக ஏழு கும்பிடுகளாக நீண்டது. ஒவ்வொரு கும்பிடுக்கும் சிறிது சிறிதாகத் தண்டத் தொகை குறைக்கப்பட்டது. இனி குறைப்பதில்லை என்னும் முடிவுக்கு வந்த பின் வன்னியிடம் சில வாக்குறுதிகள் பெறப்பட்டன. பறைப் பஞ்சாயத்து கூட்டி அவர் தன் மகளைத் தண்டனைக்குள்ளாக்க வேண்டும். இனி ராச்சோறு எடுக்க வன்னி அல்லது அவர் மனைவி மட்டுமே வர வேண்டும். இந்த ஆண்டு வெட்டியான் படியில் பாதி குறைக்கப்படும்.

அதுவரை எல்லோராலும் சபிக்கப்பட்டவளாய் நைந்த நூலாக நின்றுகொண்டிருந்த சின்னப்பொண்ணு ஒரு கணத்தில் கல் மாதிரி விறைத்தவளாய், ''சாமிகளுக்கு இப்ப குளுந்துருச்சா?'' என்றாள்.

அதுபோன்றதொரு வரம்பு மீறிய கேள்வியை ஒரு சின்னஞ்சிறு பறக்குட்டியிடமிருந்து கேட்க நேர்ந்ததில் அதிர்ச்சியடைந்தவர்கள் தங்கள் உறைநிலையிலிருந்து மீள்வதற்குள் அவளே மீண்டும் தொடர்ந்தாள்:

''நானு இதுவரைக்கும் பொய் சொன்னேன், சாமி. இப்ப நடந்தத சொல்லிப்புடுறேன்.''

''சொல்லு,'' என்று அனிச்சையாக ஒரு குரல் ஒலித்தது.

''நானு சோத்தை வேணுமின்னுதான் சாமி கொட்டுனேன். நான்தான் பறக்குட்டியாச்சே. கூறு கெட்டுப் போயி கொட்டிப்புட்டேன். ஆனா அந்தக் காணிக்காரம்மா தான் தின்னுக்கிட்டிருந்த

படிப்பகம்

www.padippakam.com



எச்சி சோத்தைக் கொண்டாந்து எஞ் சோத்துப் பானையில போட்டாங்களே, நாயமா சாமி?''

''ஏன், போட்டா என்ன?'' என்று அந்தக் காணிக்காரியின் குரல் எங்கோ ஒரு மூலையிலிந்து முணுமுணுப்பாகக் கேட்டது.

''நாங்க என்ன எச்சிச் சோறு திங்கிற நாயா?'' என்று பெரிய மனிதர்களைப் பார்த்துக் கேட்டாள் சின்னப்பொண்ணு.

''நாயில்லாம என்னடி?'' என்று எங்கிருந்தோ ஒரு குரல் இரகசியம் போலக் கசிந்தது.

''சாமிகளுக்கு வெட்டியான் வேல பாக்க ஒரு நாயி போதும்னா எங்க ஐயன் எதுக்கு சாமி?''

கூட்டம் கொஞ்ச நேரம் கல்லாய்ச் சமைந்திருந்தது. மெள்ள மெள்ள இரண்டொரு காது கடிப்புகள் சிற்றலைகளாய் எழுந்தன.

''அடி ஆத்தா. அவ சின்னப்பொண்ணு இல்லடி. மாரியாத்தா அவ உடம்புல பூந்துகிட்டு நாயம் கேக்குறாடி.''

''இந்தக் குட்டிக்கு உருவேத்தி விட்டிருக்கானுங்கையா.''

''காணிக்காரம்மாளுக்குக் குத்தம் போட்டு, 'தாங்காது சாமி, தாங்காது சாமி'ன்னு வுழுந்து கும்புடச் சொல்லுவாங்களா இப்ப?''

வன்னிக்குத் தன் மகள் பேச்சைக் கேட்டு உடம்பு சில்லிட்டுப் போனாலும், வரப்போகும் ஆபத்தை அப்போதுதான் உணர்ந்தாற் போல, ''ஏட்டி புள்ள, வாயை மூடப்போறியா, இல்ல ஒன் கழுத்தை நெறிச்சுக் கொல்லவா?'' என்று கத்தியபடி தன் மகள் மேல் பாய்ந்தார்.

''நிறுத்துடா வன்னி. அவ மேல கை வைக்காதே,'' என்று அடக்கினார் அரவாண்டியா பிள்ளை. நாட்டாண்மையைவிட நாலு மடங்கு சொத்து கூடியவர். நல்ல மனிதரென்று பெயரெடுத்தவர். சாதாரணமாக இதுபோன்ற கூட்டங்களில் தலை காட்ட விரும்பாதவர். அவர் செய்யும் குற்றங்கள்கூட மக்களுக்கு வெறும் குறைகளாகத் தெரியும்படியான கமுக்கமுள்ளவர்.

சத்தியம் கத்தி முனையில் தொங்கிக்கொண்டிருப்பதாகப் பட்டது. எந்தப் பக்கத்திலிருந்து காற்றடித்தாலும் பற்றிக்கொள்ளும் போலொரு இறுக்கம். சிறிது நேரத்தில் சிறுசிறு முணுமுணுப்புகள் வரிவடிவம் பெற்றெழுந்து சளசளக்கத் தொடங்கின .

படிப்பகம்

www.padippakam.com



அவற்றை அர்த்தமற்ற வெற்றோசைகளாகத் துடைத்துவிடும் முனைப்போடு, "இந்தா... எல்லாரும் வாயை மூடுங்க," என்று அவரே அதட்டினார். பின்னர் நாட்டாண்மைக்காரரிடம் கருத்து பரிமாறிக்கொண்டுவிட்டுச் சொன்னார்:

"எல்லாம் நல்லா கேட்டுக்கங்க. இந்தக் கூட்டம் வன்னி மேலயும் அவன் மகள் மேலயும் எந்த வழக்கும் இல்லன்னு முடிச்சு வைக்குது. எல்லாரும் எப்பவும் போலத் தாயா புள்ளையா இருந்துக்கணும்னு கேட்டுக்குது. நாட்டாமையோட முடிவு இது. எல்லாம் கலையலாம்."

அரவாண்டியா பிள்ளையோடு மாச்ச பிள்ளையும் எழுந்ததும் கூட்டம் கலைந்தது.

வன்னியும் அவரது மகளும் அதிரடியாக விடுவிக்கப்பட்டது பற்றிச் சங்கரனுக்குச் சந்தேகம் இருந்தது. அது ஒரு சமூகப் புறக்கணிப்பின் புழக்கடை வழித் திட்டமாகத் தோன்றியது. ஆனால் மற்றவர்கள் அதை நல்லவிதமாகவே பார்க்க விரும்பினர். அவர்களின் நொந்த இதயங்களுக்கு அந்த வகை நினைப்பே ஒத்தடம் தருவதாய் இருந்தது. சின்னப்பொண்ணுவின் அஞ்சாமையை ஒவ்வொருவரும் உள்ளூரத் தன்வயப்படுத்தி மகிழ்ந்தனர். இரண்டொரு மூதாட்டிகள் அவளை அழைத்து வைத்து, வீதி மண்ணெடுத்து 'திட்டி' சுற்றிப் போட்டனர். ஒவ்வொரு மனச்சிறைக்குள்ளும் உயிர்த்துவம் மிக்க விடுதலைத் தாகம் உறங்கிக்கொண்டிருக்கிறது என்னும் உண்மை அவளைச் சீராட்டுவதன் மூலம் வெளிப்பாய்ந்தது. ஆனால் அதிகார பீடங்களுக்குக் கடவுள் என்பதும் கூட வன்முறையைக் கட்டியெழுப்புவதற்கான கற்பிதம்தான் என்பது சங்கரனைக் கவலை கொள்ளச் செய்தது. வன்முறைக்கு அதி உன்னதப் பிறவியும்கூடத் துடைத்தெறியப்பட வேண்டிய தூசு தான் என்பதைத் தம் மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமே என்னும் ஆற்றாமை கூடியது. கூடவே விலக்க விலக்க சூழ்ந்து வந்து மூடிக்கொள்ளும் நீர்ப்பாசியைப்போல சின்னப்பொண்ணு பற்றிய ஏதோவொரு சொல்லற்ற தவிப்பு சங்கரனை மூச்சுத் திணற வைத்துக்கொண்டிருந்தது.

அவரை நத்தி வரும் பெண் குழந்தைகளில் சின்னப்பொண்ணு எப்போதும் முன்னிலை வகித்தாள். அவள் தன் விளையாட்டுப் பருவத்திற்கான கனவுகள் அற்றவளாய், தான் உள்வாங்கும் கருத்துகளைத் தர்க்கத்துக்குட்படுத்துகிற தீவிரக் குவியமுள்ள புத்திசாலியாய் வெளிப்பட்டாள். சங்கரனுக்கே சில சமயங்களில் அவள் பிஞ்சில் பழுக்கிறாளோ என்னும் ஈரொட்டான எண்ணம் குறுக்கிட்டாலும் அவள் வெம்பிப் பழுக்கவில்லை என்பதால் அவள் கேள்

படிப்பகம்

www.padippakam.com



விகளுக்கெல்லாம் தனக்குத் தெரிந்த அளவில் விடை தேட முயன்றார். அவளோடான அவர் பேச்சு அசாதாரண தருணங்களில் புரிதலின் எல்லைகளை மீறினாற்போன்ற ஏறுமுகம் காட்டும் போது, இதில் புரியாமை தனக்குத்தானோ என்று துணுக்குற வைப்பாள். அவள் முகம் எப்போதும் எதிர் வரும் பதில்களின் மேல் தீர்க்கம் பாய்ச்சி நிற்கும். ஒரு பெரிய மனுஷி பேச வேண்டிய பேச்சைத் தன் சின்ன உடம்பில் புகுந்துகொண்டு பேசுகிறவளாக வயசு மீறிய அறிவார்த்தம் காட்டும் முகம் அது. சிலசமயம் அவள் கேள்விகளே அவருக்கான புதிய தேடல்களாய் பரவசம் கொள்ள வைப்பதும் உண்டு. தேடத் தெரிந்த எளிய மனதுக்குக் கல்வியானது உறையாக இருக்கலாமே தவிர அதுவே அதன் தெளிவாகி விடுவதில்லை என்பதற்குப் படிப்பறிவற்ற சின்னப்பொண்ணு மகத்தான சாட்சியாக இருந்தாள். 'பிறவி வெட்டியானாய் இருக்கப் பிரியப்படுகிறவன் பெற்ற இந்தக் குழந்தைதான் என் ஞானத்தின் எல்லையோ' என்று சங்கரன் தன்னுள் சரண்பட்டு மகிழ்வதுண்டு.

கடைசியில் சங்கரனின் குரல்வளையை நெறித்த சொல்லற்ற தவிப்புக்கு காலம் கணித்துத் துப்பிய கொடிய அர்த்தம் போல அது நேர்ந்தது. ஊர் முழுவதையும் ஒரு புதிய கேள்விக்கு நகர்த்திய அந்த சாவடிக் கூட்டம் முடிந்த பத்தாம் நாள் அதிகாலை சின்னப்பொண்ணு இறந்து போனாள்.

"ஊரு கண்ணே அவளுக்கு ஒலை வச்சிருச்சு," என்று தப்பித்தலில் தற்காத்துக்கொள்ளும் சில மனங்கள் முணுமுணுத்தன.

"படியளக்கிற ஆண்டைகளையே நிக்க வச்சுல்ல கேட்டா. அதான் போயிட்டா," என்று ஒற்றைக்குரல் வக்கிரமும் காற்றை ஊடறுத்தது.

சங்கரன் அந்த வீட்டுக்குச் சென்றபோது, அதிகாலையிலிருந்து அடித்துப் புரண்டழுத பதற்றம் தணிந்திருந்தார் சின்னப்பொண்ணுவின் தாயார். அவரைப் பார்த்ததும் கட்டுடைத்துப் பொங்கும் கண்ணீரோடு தன் உள்ளக் குமுறலை ஒப்பாரியாய் உருக்கினார்:

"தேனா வளத்தேன் திரவியமா தேடி வச்சேன்
தேனும் திரவியமும் தீந்த கனவாச்சு
மானா வளத்தேன் மயிலிறகா பொத்தி வச்சேன்
மானும் மயிலிறகும் மாண்ட கனவாச்சு
ஆடு வளக்கிறவன் அறுத்துக் கறி சமைப்பான்
கோழி வளக்கிறவன் கொன்னு கறி சமைப்பான்
ஆடில்ல கோழியில்ல ஐயா நான் பெத்த பொண்ணு
ஆலைக் கரும்பா அரைச்சு நெரிச்சாச்சு."

படிப்பகம்

www.padippakam.com



அடக்க மாட்டாமல் உடைந்தவராய், "ஐயோ இந்த அழும்பை ஆருகிட்ட கொட்டியழுவேன்," என்று தலைதலையாய் அடித்துக் கொண்டு கதறினார். அழுது சிவந்த கண்களோடு நின்றிருந்த வன்னி மிகுந்த பதற்றத்தோடு "ஏ புள்ள, வாய மூட மாட்டே?" என்று அதட்டினார். அந்த அம்மாளின் வாய் மூடிக்கொண்டது.

சங்கரனை அந்த மரணம் தன் சொந்த மரணமாய்ப் பாதித்தது. ஈனாத குழந்தையின் தொப்புள் கொடி போல அவள் அவருள் ஓர் இன்றியமையாமையைப் பேணி வளர்ந்தாள். அவளின் பேச்சை விடவும் பேசாப் பொழுதின் பாவங்கள் அவரை இம்மண்ணோடு தளைக்கும் வேர்களாய்ப் பற்றியிருந்தன. அவள் இறப்புக்கு முன்னான அவரின் சொல்லற்ற தவிப்புக்குக் காரணம் இருந்தது. இறப்பதற்கு இரண்டு நாட்கள் முன்னதாகத்தான் அவரைத் தேடிக்கொண்டு வந்தாள். வெகு நேரம் அவரைப் பேச வைத்துக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவள் வந்த போது துடிப்புமிக்க ஐந்தாறு இளைஞர்களும் அங்கே குழுமியிருந்தார்கள். அவர்கள் புரிதலுக்குமான பேச்சாக அது நீண்டது. அவளுடைய தந்தை ஊரில்லாத இரவு அது. அவள் தாயார் இரண்டு முறை தேடிக்கொண்டு வந்துவிட்டார். "மாமங்கூட ஒக்காந்திருந்தா எனக்குத் தெம்பா இருக்குதும்மா," என்றாள். அதை அந்த அம்மாளும் அறிந்திருந்தாற்போலொரு பாவம் தெரிந்தது. எதற்கான தெம்பு என்பதில் அவருக்குச் சரியான தெளிவில்லாவிட்டாலும் அவள் அமைதியின்மையை ஊகித்தவராய், "நானே பொறவு கொண்டாந்து விடுறன். போக்கா" என்று அவரை அனுப்பி வைத்தார். நடுச் சாமம் கடந்த பிறகு அவளை அழைத்துக்கொண்டு நடந்தபோது, "ஒங்க கையப் புடிச்சிக்கிறன், மாமா. எனக்கு நெகாத் தெரியில" என்று சொல்லி, அவர் கையைக் கோர்த்துப் பிடித்துக்கொண்டு நடந்தாள். மெல்ல மெல்ல ஒரு சிலிர்ப்பு வந்து அவரை ஊடறுக்க, அவள் வீடு சேரும் வரை ஒரே கேள்வியைத் திரும்பத் திரும்பத் தன்வசமிழந்தாற்போல் கேட்டுக்கொண்டு நடந்தார்:

"இது குழந்தையா, இல்ல என்னோட ஆத்தாளா?"

அவளை விட்டுத் திரும்பும்போது, "எனக்கு ஒரேஒரு ஆசைதான் மாமா," என்றாள்.

"என்ன?"

"கடைசி வரைக்கும் நான் ஒங்க பேச்சா இருக்கணும்."

அது அவள் மரணவாக்குமூலம் என அப்போது அறியவில்லை.

தொடரும்...

படிப்பகம்

www.padippakam.com

# புனைவு தந்த கல்கியும் கல்கி என்னும் புனைவும்

குறிப்பும் தொகுப்பும்:
தெ. மதுசூதனன்

இருபதாம் நூற்றாண்டு முடிவுறும் தருவாய். இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியின் பின்னர் தமிழ்ச் சூழலில் பாரதியார், கல்கி இருவருக்குமான நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் பல்வேறு தரப்பினராலும் பலவாறு கொண்டாடப்பட்டுள்ளன.

தமிழ் நவீனமான வரலாற்றுத் தொடக்கத்தில் பாரதியின் படைப்பாக்கப் பாய்ச்சல்கள் தமிழ் இலக்கியத்தைப் புதிய பார்வையில் திசைதிருப்பி வளம் சேர்த்துள்ளன.

தமிழில் வளர்ந்து வந்த ஊடக வளர்ச்சியும் வாசிப்பின் பரவலும் இணைந்த ஒரு காலத்தில் கல்கி என்ற நபரின் உருவாக்கம் தமிழில் சாத்தியமாயிற்று. வெகுசன வாசிப்பு வன்மையாக நிலைபேறாக்கம் பெறும்பொழுது 'வாசிப்பு விசாலிப்பு'க்கு கல்கியின் எழுத்துகள் பெரிதும் உதவியுள்ளன.

கல்கி எனும் ரா. கிருஷ்ணமூர்த்தி (1899 1954)1920களில் இருந்து மறைவு வரை தனது பணிகளை சாத்தியமான துறைகளில் விரித்துள்ளார். எனினும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இதழியல் வளர்ச்சியில் கல்கியின் வகிபாகம் தனித்துவத்துடன் துலங்குகின்றது. தினசரிப் பத்திரிகைகளின் வாராந்திரப் பதிப்பின் வளர்ச்சிப்போக்கு சஞ்சிகைகளின் வளர்ச்சியுடன் தொடர்புபட்டதாகவும் இருந்தது. இது 'மகிழ்வளிப்பு வாசிப்பு'ச் சஞ்சிகைகளின் வளர்ச்சிப் போக்குடன் தொடர்புபட்டதாக, நாம் ஒரு புதிய கட்டத்துக்குள் வருகின்றோம். இக்கட்டத்தின் முதன்மைச் சின்னமாகவே 'கல்கி' வருகின்றார்.

அக்கால சமூகக் கருத்துநிலை மேலாட்சியும், அது சார்ந்த வெகுசன ஊடகப் பரவலும் கல்கிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தன. சமூக அங்கீகார மிக்க தலைவராகக் கருதப்படுமளவிற்குப் பின்னாளில் பல்வேறு புனைவுகள் கட்டப்பட்டன. இந்த நூற்றாண்டுக்கொண்டாட்டம் கல்கிக்கு மீண்டும் புத்தாக்

படிப்பகம்

www.padippakam.com



கம் கொடுத்துள்ளது. இன்னும் கல்கி சார்ந்த பின்புலம் பலமானதாக இருப்பதனால் மீண்டும் மீண்டும் இது சாத்தியமாயிற்று.

இந்தப்பின்னணியில் கல்கிமீதான பார்வைகள் சிலவற்றை எழுத்தாளர்கள், விமர்சகர்கள் என அறியப்பட்டவர்களிடமிருந்து கருத்துகளாகப் பெற்று இங்கே தொகுக்கப்பட்டுள்ளன. இவை அவரவர் தன்சார்ந்த நிலைப்பாடுகள், தேடல்கள் வயப்பட்டவை என்றே கூறலாம்.

நமக்கு கல்கி பற்றிய காய்தல் உவத்தல் அற்ற மதிப்பீட்டுக்கு, பார்வைக்கு உதவும். இவற்றிலிருந்து கல்கி பற்றிய நமது பார்வைகளை விரிவுபடுத்தித் தமிழ் இலக்கிய வரலாற்றில் கல்கியின் வலிபாகம் எத்தகையது என சிந்திப்பதுதான் ஆரோக்கியம். இன்றைய தேவையும் அதுதான்.

## அசோகமித்திரன்

என் தலைமுறை எழுத்தாளர்கள் அனைவரையும்போல நானும் 'கல்கி' எழுத்தால் மிகவும் கவரப்பட்டவன். அவர் 'ஆனந்தவிகடன்' பத்திரிகையில் பணி புரிந்த நாட்களிலிருந்தே அவருடைய 'கள்வனின் காதலி,' 'தியாக பூமி' மற்றும் 'தங்க ஒட்டியானம்,' 'பாழடைந்த பங்களா,' 'இடிந்த கோட்டை' ஆகிய படைப்புகளால், நான் அவர்பால் மிகவும் ஈர்க்கப்பட்டேன். எனக்கும் அவர் போலக் கதைகளைப் பின்னிப் பின்னி எழுத வேண்டும் போல ஆர்வம் ஏற்பட்டது. இதெல்லாம் என் பதின்மூன்று, பதின்நான்கு வயது வரை.

ஆனால், கல்லூரிக்கு வந்த பிறகு வேறு அயல்நாட்டு இலக்கியங்கள் நிறையப் படிக்கக் கிடைத்தபோது எனக்குள் கல்கி மீது இருந்த பற்று மிகவும் குறைந்துவிட்டது. நானே கதை எழுதத் தொடங்கிய பிறகு நான் அவருடைய பாதிப்புகளிலிருந்து அநேகமாகப் பூரணமாக விடுபட்டுவிட்டேன். ஆனால் நான் அவருடைய இடத்தைக் குறைத்து மதிப்பிட மாட்டேன். அவர் எல்லா வாசகர்களுக்கும் ஒரு காலகட்டத்தில் மிகவும் தேவைப்படுபவர்.

இன்று அவருடைய நினைவுகள் பலரிடமும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் பாதிப்பு அவரால் ஏற்படுமா என்பது சந்தேகம். அவர் பல சமூக தேசிய இலக்குகளைச் சுட்டிக்காட்டிய தலைவர் என்பதை மறுக்க முடியாது. அவரே பல இயக்கங்களில் நேரடியாக ஈடுபட்டு அவரால் இயன்ற சேவையை நன்கு புரிந்தார். அவருடைய சேவைகளில் மிக முக்கியமானது மிகுந்த சிரம

படிப்பகம்

www.padippakam.com



நிலையிலிருந்த பாரதியின் குடும்பத்துக்கு ரூ. 35/- கிடைக்கும்படி அவர் ஏற்பாடு செய்தது. இதற்கெல்லாம் ஒரு தொலைநோக்கு தேவைப்படும். அது அவரிடம் இருந்தது.

## பேராசிரியர் கா சிவத்தம்பி

"கல்கி 1920-களில் தமிழில் ஏற்படுகின்ற பெரிய மாற்றத்தினுடைய சின்னமாகவும், அந்த மாற்றத்தினுடைய பேறாகவும் வருகிறார். அந்த மாற்றம் இந்திய சுதந்திரப் போராட்டத்தில், இந்திய எழுத்துகள் குறிப்பாகப் பத்திரிகைதுறை நிலை நின்று இந்திய சுதந்திரப் போராட்டக் கொள்கைகளை மக்களிடையே கொண்டு செல்வதுமாகிய ஒரு பெரிய பணி ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அந்தப் பணியினைக் கல்கி தமிழ்நாட்டில் செய்கிறார்.

வேறு பலர் செய்தாலும்கூட கல்கி செய்த அளவுக்கு மற்றவர்கள் பரந்துபட்ட அள்விலும் ஒரு அசைவியக்க நிலையிலும் அரசியல் நுட்பத்தோடும் செய்தது இல்லை என்றே கூறலாம். அவ்வாறு செய்கின்றபொழுது கல்கி பத்திரிகைத்தொழிலின் தர்மத்தை, அதாவது குறிப்பாக அதன் வணிகமயமாக்குகின்ற போக்கினுடைய மூலப்பிதாவாகவும் அவர் கண்டிக்கப்பட்டு வந்துள்ளார்.

இதழியல் நிலை நின்று பார்க்கும்பொழுது கல்கி எழுதிய அரசியல் கட்டுரைகள், விமரிசனங்கள் முக்கியம். இவர் ராஜாஜியோடு சேர்ந்து நின்று ராஜாஜியின் கொள்கைகளைப் பரப்புவதில் ஒரு முக்கியமான இடம் வகித்தார் என்றே கூற வேண்டும்.

உண்மையில் கல்கியினுடைய இலக்கிய வரலாற்று நிலையினை நான் கல்கியின் புனைகதை கொண்டே பார்க்க முனைந்து நின்றாலும்கூட, உண்மையில் புனைகதை எழுத்துகள்கூட, மக்களிடையே கருத்துகளைக் கொண்டு செல்லல், வாசிப்பை ஊக்குவித்தல் என்கின்ற அடிப்படையில்தான் கல்கியின் புனைகதையைப் பார்க்க வேண்டும்.

கல்கி இங்கே இரண்டு விதத்தில் செயல்படுகிறார் எனலாம். ஒன்று, ஓர் பரந்துபட்ட வாசகக் கூட்டத்துக்கு எழுதுகிறார் எனலாம். மிக ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் எழுதுகிறார். உதாரணம் 'தியாகபூமி' தொடர். இதனை எழுதும் போது அதனை படத்தோடு போட்டு எழுதுகிறார். நன்கு நவீன ஒழுங்கமைக்கப்பட்ட ரீதியில் இதனை வெளியிட்டார்.

'சிவகாமியின் சபதம்' 'பொன்னியின் செல்வன்' இரண்டும் மிக முக்கியமானவை. இவருடைய நாவல் என்ற வகையில் 'சிவகாமியின்

படிப்பகம்

www.padippakam.com



சபதம்', 'அலைஓசை' போன்றவை கலைநயத்துடன் கூடியவை. இவை முக்கியமானவை என்றே கூறுவேன். கல்கியிடம் காணப் பட்ட முக்கியமான அம்சம் தமிழ் நிலைப்பட்ட இந்தியத் தேசியம் எனலாம். இதனை வளர்ப்பது அல்லது தமிழ்நாட்டை மறக்காத இந் தியத் தேசியத்தை வளர்ப்பதில் கல்கிக்கு முக்கிய இடம் இருந்தது என்றே கூற வேண்டும். ராஜாஜி இது சம்பந்தமாக மிகத்தெளிவாக இருந்தார்.

இந்தக் கதைகள் எல்லாம் பல்லவர் காலத்து, சோழர் காலத்துக் கதைகள்தான். இவை எல்லாம் அந்தத்தேசியத்தின் விழிப்புணர் வின் அம்சமாகவே கொள்ளப்பட வேண்டுமென்றே நான் கருதுகி றேன். ஏனென்றால் இவற்றை கல்கி ஓர் நாவலாசிரியராகப்பார்க்கும் போது இந்தப் பிரச்சினை வரும் எனக் கருதுகிறேன். ஆக, அவரு டைய நாவல்கள் பற்றிய மதிப்பீடுகள் இந்த வகையிலேயே செல்லும்.

அவருடைய இதழியல் துறையில் முதன் முதலாக ஆனந்தவிக டன் பதிப்பித்த பொழுது அதில் கல்கிக்கு மாத்திரமல்ல பங்கு, எஸ். எஸ்.வாசனுக்கும் பிரதான பாத்திரம் உண்டு.

முதற்தடவையாக நாங்கள் வாசிப்புக்காக வாசித்தல் அல்லது வாசிப்புக்காக எழுதுதல் என்ற போக்கு இங்கே உருவாயிற்று. அந்த வாசிப்பை ஓர் விற்பனைப் பொருளாக மாற்றி அதன் மூலம் பல விசயங்கள் சாதித்தல் என்பது எஸ். எஸ். வாசனுக்கு ஓர் நோக்க மாகவே இருந்தது. கல்கி, ஆனந்தவிகடன் மூலம் அதனைத் துரி தப் படுத்தினார்.

இதன் காரணமாக, அடிப்படையில் கல்கிக்கும், 'மணிக்கொடி' சார்பானவர்களுக்கும் இடையில் கருத்து வேறுபாடு நிலவியது. புது மைப்பித்தன் போன்றவர்கள் இங்கே குறிப்பிடத்தக்கவர்கள்.

அவர்கள் கல்கி வணிகமயப்பட்ட எழுத்தாளராக இருக்கிறார் என்றும், இதன்மூலம் பரவுகின்ற ரசனையானது ஓர் உண்மையான இலக்கிய ரசனைக்கு உதவுவதாக இல்லை என்றும் அவர்கள் கருதி னார்கள். எனவே, கல்கியின் சனநாயகமயப்படுத்துகை காரணமாக இந்தவொரு அச்சமும் இருந்தது என்பதையும் நாம் பதிவு செய்ய வேண்டும்.

கல்கிக்கு இன்னொரு அம்சமும் உண்டு. அதாவது, அவர் பிற் காலத்தில் தமிழ்நாட்டின் பொது விசயங்களில் கலை இலக்கியங்க ளில் ஆர்வம் காட்டினார். பாரதிக்கு மணிமண்டபம், புதுமைப்பித் தனுக்கு நிதி சேகரித்தல், தமிழிசை இயக்கம் போன்ற விடயங்களில் ஈடுபட்டு இருந்தார். இவ்வாறு பத்திரிகை மூலமாகப் பொதுவிடயங் களில் அதிகம் அக்கறை காட்டி செயற்பட்டுள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com



ஆரம்பத்தில் பாரதி மகாகவி இல்லையென்று வ.ரா.வுடன் சேர்ந்து ஓர் நிலைப்பாடு எடுத்திருந்து, அதற்காகக் காரசாரமாக எழுதியும்கூட, பிறகு பாரதிக்கு மணிமண்டபம் அமைப்பதில் தானே முன்னின்று செயல்படுகின்றார். அந்த வகையில் கல்கியிடம் ஓர்நெகிழ்ச்சி காணப்படுகிறது எனலாம்.

இறுதியாக, இலக்கிய வரலாற்றில் ஓர் முக்கியமான உண்மை என்னவென்றால், அது சம்பந்தப்பட்ட எழுத்தாளர்கள் பெரும் புலவர்களைப் பற்றிப் பேசும்போது அவர்களைப் பற்றி சகல அம்சங்களையும் பதிவு செய்யும் பொழுதுதான் முழுமையான பார்வை நமக்குக் கிடைக்கும். எனவே கல்கியைப் பொறுத்த வரையில் அவர் வாசகவட்டத்தைப் பெருக்குகின்றஒரு பணியைச்செய்தார். அதற்கு ஒரு சனநாயகமயப்பாடு இருந்தது. அதற்கு ஓர் அரசியல் கருத்தும் இருந்தது. அந்தளவில் அது வரவேற்கப்பட வேண்டிய விடயமாகவும், அதே வேளையில் அதனுடைய வரையறையை எங்கேபோடுவது என்ற ஒரு பிரச்சினை கல்கிக்கு இருந்தது.

அதனாலேயே ஆனந்தவிகடனில் இருந்து கல்கிக்குப் போனதற்கான முக்கியமான விடயங்கள் நமக்கு சரியாகத் தெரியாது. ஆனால் அது முக்கியமான விடயங்களாக மாறலாம்.

எனவே ஒட்டுமொத்தமாகச் சொல்வதானால் கல்கி பிரதானமாக பத்திரிகையாளர். அரசியல் கலாச்சார பத்தி எழுத்தாளர். சிறுகதை ஆக்கங்கள்கூட இந்தப் பத்திரிகை எழுத்து நிலைப்பட்டவைதான். கல்கி, தமிழ்நாட்டு வரலாற்றின் ஓர் முக்கியமான பொது விடயங்களின் தலைமைப் பதவியை வகித்தார்.

## சாரு நிவேதிதா

வயது அப்போது பதின்மூன்று அல்லது பதினான்கு இருக்கும்–நான் பொன்னியின் செல்வனைப் படித்தபோது. பிறகு ஒவ்வொரு கோடை விடுமுறையையும் பொன்னியின் செல்வனைப் படிப்பதற்காகவே ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்தேன்.

'குதிரை மனிதனுக்கு மிகவும் நெருக்கமான ஒரு விலங்கு' என்பது எவ்வளவு காலத்திற்கு உண்மையாக இருக்குமோ, அவ்வளவு காலத்திற்கு கல்கியின் எழுத்துக்கான தேவையும் இருந்துகொண்டிருக்கும். சாகசங்களின் மீது மனிதனுக்கு எப்போதுமே ஒரு மயக்கம் உண்டு. குதிரையில் ஏறி காற்றைக் கிழிக்கும் வேகத்தில் பறக்க யாருக்குத்தான் ஆசையிருக்காது?

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் கல்கி ஏன் புதுமைப்பித்தனைப் போல் எழுதவில்லை என்று சிறுபத்திரிகை இலக்கியவாதிகள் கோபிக்கிறார்கள். கல்கியின் எழுத்து (genre) வேறு. புதுமைப்பித்தனின் எழுத்து வேறு. ஃப்ரான்சில் அலெக்சாந்தர் துய்மாவைக் கொண்டாடுகிறார்கள். ஆனால் இங்கே கல்கியை இலக்கியவாதிகள் கண்டுகொள்வதில்லை. இலக்கியத்தையோ தமிழ்ச் சமூகமே கண்டுகொள்வதில்லை.

இன்றளவும் நாற்பது மணி நேரம் ஐம்பது மணி நேரம் என்று ஒரே அமர்வில் படிப்பதற்கான பயிற்சியைக் கல்கியின் எழுத்துகளை வாசித்ததன் மூலமே நான் பெற்றேன். கல்கிக்குப் பதிலாக அப்போது நான் ஒரு சீரியஸ் எழுத்தாளரைப் படித்திருந்தால் வாசிப்பு என்பதிலிருந்தே விலகி அந்நியமாகியிருப்பேன்.

கல்கி அவர் வாழ்ந்த காலத்தின் சீர்திருத்தவாதிகளில் ஒருவராக இருந்தார். 'ஹரிஜன ஆலயப்பிரவேசம்' என்ற பிரச்சினையில் சங்கராச்சாரியார் அதை எதிர்த்தபோது, "நீங்கள் லோக குருவும் அல்ல; இந்துக்களின் குருவும் அல்ல; பிராமணர்களின் குருவும்கூட அல்ல. ஒரு மடத்தின் அதிபர். அவ்வளவுதான்," என்று தலையங்கம் எழுதுகிற அளவுக்கு சமூக சீர்திருத்தத்தை ஆதரித்தவர் என்பதும் அவரைக் குறித்த விஷயங்களில் முக்கியமானது.

## பா. செயப்பிரகாசம்

எனக்கு கல்கியோடு பரிச்சயம் 1956–57 என நினைக்கிறேன். அப்போ எனக்கு பன்னிரண்டு பதின்மூன்று வயதாக இருக்கும். அப்போது அவருடைய 'பொன்னியின் செல்வன்,' 'சிவகாமியின் சபதம்' ஆகியவற்றை முழுமையாகப் படித்திருக்கிறேன்.

இந்த நூல்கள் எனக்குக் கிடைத்த விதம் என்பதுகூட சுவையானது. எங்கள் ஊரில் ஒரு நண்பர் இருந்தார். அவர் பணக்கார விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர். அவர்தான் இந்த நூல்களை எனக்குத் தந்து உதவினார். அவர் சுகவீனமாக இருந்தமையால் அவரைத் தேற்றவும் உளவியல் ரீதியான நம்பிக்கையைக் கொடுக்கவும் இந்த நூல்களை அவருக்கு வாங்கிக் கொடுப்பாங்க. அதை எனக்கு அவர் தந்துதவுவார்.

ஆக நான் இலக்கிய நூல்களை விரும்பி வாசிக்கத் தொடங்கும் பொழுதுதான் எனக்கு கல்கி அறிமுகமானார்.

ஆனால், எனக்கு முன்னோடியான எழுத்தாளர்கள் சிலர் கொடுத்த கருத்துகள் காரணமாக வரலாற்று நாவல்கள் குறித்தும்

படிப்பகம்

www.padippakam.com



கல்கி குறித்தும் எனக்குள் சில கருத்துகளை உருவாக்கிக்கொண்டேன். ஒன்று, 'அனுபவமில்லாத ஆதாரங்களைத் தேடி குழிவெட்டுகிற தமிழ் வெட்டியான் வேலை'—இது எழுத்தாளர் விந்தன் கூறியது. 'தமிழில் எழுதப்படும் சரித்திரக்கதைகள் எல்லாம் சரித்திரமும் இல்லாத கதையும் இல்லாத கயிறு திரித்தல் ஆகும். எனக்கு இதைவிட அம்புலிமாமா கதைகள் சிறப்பாக இருக்கின்றன.' இதைக் கூறியவர் ஜெயகாந்தன்.

'எனக்கு சரித்திரக் கதைகளில் மதிப்பே கிடையாது. சரித்திர நாவல்கள் என்ற பெயரில் வரலாற்றில் காணப்படும் பெயர்களை மட்டும் வைத்துக் கொண்டு எழுத்தாளர்கள் தங்கள் கற்பனை வளத்துக்கு ஏற்பக் கதை அளக்கிறார்கள். இவர்கள் ராஜா ராணி கதை மட்டும் சொல்கிறார்கள். இவர்கள் அந்தக் காலத்து மக்களின் வாழ்க்கையை எழுதவில்லை.'- இதைக் கூறியவர் வல்லிக்கண்ணன்.

இப்போ எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. வரலாற்றுக் கதைகள் என்ற பெயரில் எத்தகைய மோசடிகள் இடம் பெற்றுள்ளன என்பது தெளிவாகிறது. மக்கள் இலக்கியம் தோன்றவில்லை. மக்கள் வாழ்க்கை சொல்லப்படவில்லை. 'பொன்னியின் செல்வன்', 'சிவகாமியின் சபதம்' போன்ற நாவல்களில் மக்கள் வாழ்க்கை இல்லை.

'இன்றைய வாழ்க்கை அனுபவத்தை எழுத முடியாமல் எந்தக் காலத்தின் சாயலும் எந்த மண்ணின் வாடையும் இல்லாமல் எதார்த்தத்துக்குப் பொருந்தாத பாத்திரங்களை நடமாடவிட்டு, நடக்க முடியாத நிகழ்ச்சிகளைக் கோர்த்துக்கொண்டிருப்பவர்கள்'— என வரலாற்று நாவலாசிரியர்கள் குறித்து கு. அழகிரிசாமி கூறுவார்.

ஆக, எனக்கு வரலாற்று நாவலாசிரியர்கள் பற்றி முன்னவர்கள் கூறிய கருத்துகள் அடிப்படையில் தான் பார்க்கப் பழகிக்கொண்டேன். கல்கி பற்றிய என் மதிப்பீடும் இத்தகைய பின்புலங்களைக் கொண்டே அமைந்திருந்தது.

சமகால நிகழ்வுகளைக் கேலியும் கிண்டலுமாக விமரிசனம் செய்யும் போக்கு கவனத்திற்குரியது. ஆக, பத்திரிகையாளர் என்ற ரீதியில் அவரின் பங்களிப்பு பாராட்டுக்குரியது. பத்திரிகையாளர் என்ற ரீதியில் அவர் வெற்றி பெற்றுள்ளார்; ஆனால் நாவலாசிரியர் என்ற ரீதியில் வெற்றி பெறவில்லை என்றே கூறுவேன்.

படிப்பகம்

www.padippakam.com



## ஓவியர் நாகராஜன்

எனக்கு கல்கி மூலம்தான் இலக்கியம் அறிமுகமானது. எங்கள் வீட்டில் கல்கிக்கு மரியாதை உண்டு. பரவலான பாராட்டுகளும் உண்டு. ராஜாஜி, டி.கே.சி., கல்கி, கி.வா. ஜகந்நாதன் போன்றோரின் எழுத்துகளை வீட்டில் நிறையவே படிப்பாங்க. அதனால் எனக்கு சிறுவயதிலேயே கல்கி அறிமுகமாயிட்டாரு.

கல்கியினுடைய 'சிவகாமியின் சபதம்' படிச்ச பிறகு கல்கி எழுதினதுதான் சரியான சரித்திரம், உண்மையான சரித்திரம்கூட சரியல்ல என்றெல்லாம் நான் நினைச்சிருக்கேன். பின்னால் 1965-66களில் பரவலான இலக்கியப் பரிச்சயம் ஏற்பட்ட பிறகு கல்கிக்கு எத்தகைய இடம் என நானே படிப்படியாகப் புரிஞ்சுக்க முடிஞ்சுது.

ஆனாலும், தமிழ் இலக்கியத்தில் கல்கியின் பங்களிப்பு என்றைக்கும் இன்றியமையாத விஷயம். புறக்கணிக்க முடியாத விஷயம். எப்படி ஆங்கில இலக்கியத்தில் வால்டர் ஸ்காட், பிரான்சில் அலெக்சாந்தர் துய்மாவைச் சொல்கிறோமோ, அந்த இடத்தில் வைத்துத்தான் தமிழில் கல்கியைச் சொல்ல வேண்டும். கல்கியின் எழுத்தில் பல முரண்பாடுகள் இருந்தன. கல்கியைப் பலருக்குப் பிடிக்காமல் இருந்தது. ஆனாலும், அவருடைய வாழ்க்கையில் எழுத்தாளர் என்ற முறையில் இன்னும் பல துறைகளில் சிறந்தவராகக் காட்டியிருக்கிறார். அரசியல் துறையில்கூட தன்னை முக்கியமானவராகக் காட்டியிருக்கிறார்.

இதில் உள்ள பின்னணியையும் நாம் மறந்துவிடக் கூடாது. அவர் தொடக்க காலத்தில் இருந்து சதாசிவம், எம். எஸ். சுப்புலட்சுமி போன்றவர்களின் பணபலத்தினால் சிறப்பாக வளர முடிந்தது. அந்தப் பணபலமோ அந்தப் பின்னணியோ இன்றுவரை தொடர்வது முக்கிய விஷயம். அவரது நூற்றாண்டு விழா என்று சொல்லி கல்கி சார்ந்தவர்கள், பத்திரிகையைச் சார்ந்தவர்கள் ஒரு பெரிய தேர்தல் பிரசாரம் மாதிரி ஏற்பாடு செய்து பல இடங்களுக்கும் போய் அவருடைய சேவைகளைப் பறைசாற்றி யாரும் கல்கியை மறந்துவிடக்கூடாது என்கிற மாதிரியான ஓர் திட்டமிட்ட பிரசாரம் செய்கிறார்கள்.

ஆனால் அந்தளவிற்கு அவரது சமகாலத்து எழுத்தாளர்கள் பலருடைய பெயர்கள்கூட பலருக்கு ஞாபகம் இல்லை. 'தேவன்' என்பவர் ஆனந்தவிகடனில் ரொம்ப வருஷம் கல்கியோடு இருந்தவர். 'ஆதிரை' என்பவர் கலைமகளில் ரொம்ப காலம் இருந்தவர். ஆனால் இவர்கள் பற்றியெல்லாம் யாரும் பேசுவது இல்லை. இவர்க

படிப்பகம்

www.padippakam.com



ளின் நினைவுகூட யாருக்கும் இருக்குமா என்பதுகூட சந்தேகமாக இருக்கு. ஆனால் இவர்களும் கல்கியளவுக்கு அதே காலத்தில் தமிழுக்குப் பணிபுரிந்தவர்கள். இதனைக் குறைத்து மதிப்பிட முடியாது.

கல்கியின் பல புதினங்களை நாடகங்களாக ஆக்கி நிகழ்த்தியுள்ளார்கள். இதனை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

'அமரந்தா,' 'மகுடபதி,' 'வீணை பவானி' போன்ற புதினங்களை நாடகமாக்கி 'கல்கி பைன் ஆர்ட்ஸ் கிளப்' எனும் அமெச்சூர் நாடகக் குழு நாடகங்களை நிகழ்த்தி வந்தது. 1950களின் கடைசி 1960 களில் கல்கியின் புதினங்களை மட்டுமே நாடகமாக நிகழ்த்தும் குறிக்கோளை மையப்படுத்தி நாடகங்கள் நிகழ்த்தி வந்தனர். இப்ப சினிமா உலகில் பிரபலமாக இருக்கும் நடிகர்களான ஜெயசங்கர், ஸ்ரீகாந்த் போன்றவர்கள் இந்த கிளப்பில் நடிகர்களாக இருந்தவர்கள்தான்.

இவர்கள் பல ஊர்களில் கல்கியின் புதினங்களை நாடகங்களாகப் போட்டு வந்தவர்கள். இந்த நூற்றாண்டு விழாவில் இதனை யாரும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை.

## பேராசிரியர் வீ. அரசு

கல்கியை மூன்று அடிப்படைகளில் வைத்து நோக்கலாமெனக் கருதுகிறேன்.

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கும் கல்கிக்கும் உள்ள உறவு முதலாவது. இந்திய விடுதலைப் போராட்டம் 1920க்கு முன்னர் உள்ள காலப்பகுதி மிகக் கொடுமையான அடக்குமுறைகளைக் கொண்ட காலமாகும்.

ஆனால், அதற்குப் பிறகு விடுதலைப் போராட்டம் என்பது படிப்படியாக கட்சி சார்ந்த போராட்டமாக மாறிவிட்டது. அப்போது சிறைச்சாலைக்குச் செல்வது, சிறைச்சாலைக் கொடுமைகள் என்பதை முன்னர் வ. உ. சி., சுப்பிரமணிய சிவா போன்றவர்கள் முகங்கொடுத்தது போல் அத்தனை கொடுமையாக இல்லை. கல்கி சிறைச்சாலைக்குப் போனதைக்கட்சி சார்ந்த நோக்கிலேயே புரிந்து கொள்ள வேணும். 1920க்குப் பிறகு இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட தலைவர்கள் பணிகளை சாதாரணமாகவே கருதுகிறேன். ஆக, கல்கியையும் காங்கிரசுக்காரராகவே நோக்கலாம். அவர் அவ்வாறுதான் செயற்பட்டுள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்நாட்டு வரலாற்றில் பாரதி பற்றி, புதுமைப்பித்தன் பற்றி ஒருவர் என்ன நிலைப்பாடு வைத்திருந்தார் எனப் பார்ப்பது தற்போது மரபாகி வருகிறது. எனவே, கல்கி இந்த இருவர் பற்றி என்ன பார்வை கொண்டிருந்தார் என்றும் பார்க்க வேண்டியுள்ளது.

பாரதி 1930களில் வ. ரா., ஜீ. வா. போன்றவர்களால் புதிதாகக் கண்டுபிடிக்கப்படுகிறார். அந்தக் காலத்தில் காங்கிரஸ் கட்சி சார்ந்தவர்கள் மட்டத்தில் பாரதி பெரிதாக மதிக்கப்படவில்லை. இலக்கியவாதிகள் மத்தியிலும் பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்தவர்கள் மத்தியிலும்தான் பாரதி பெரிதாகப் படிக்கப்பட்டான்; மதிக்கப்பட்டான். ஆனால், 1940களின் கடைசியில் பாரதி குறித்த மதிப்பீடு வெகுசனத் தளத்தில் வேறுவிதமாக வரத் தொடங்கிவிட்டது. அதாவது தவிர்க்க முடியாமல் எல்லோரும் பாரதியை அங்கீகரித்தனர். குறிப்பாக பாரதியாருடைய பாடல்களை ஏ. வி. மெய்யப்ப செட்டியார் தேசிய உடமையாக்க முற்படுகின்றார். தனிப்பட்ட சொத்தாக இருந்த போக்கிலிருந்து பாரதி தேசச் சொத்தாக போற்றப்படும் சூழல் உருவாகிறது. வெகுசனத் தளத்தில் பாரதி ஏற்றுக் கொள்ளப்படும் சூழல் உருவாகிவிட்டது.

பாரதியாரை மிகச் சாதாரண கவிஞராக ஏற்றுக் கொண்ட கல்கி 1947இல் மகாகவியாக ஏற்றுக் கொள்ள வேண்டிய சமூக நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதுதான் பாரதிக்கு மணிமண்டபம் கட்ட வேண்டிய நிர்ப்பந்தத்தைக் கல்கிக்கு கொடுத்தது என்பேன். பாரதியை மகாகவி என ஏற்றுக்கொண்ட செயல்பாடாக இதனைக் கருத முடியாது. இவ்விதம் செயல்படுவதற்கு நிறைய உதாரணங்கள் உண்டு. மு. கருணாநிதி எம். ஜி. ஆரைப் போற்றுவது நல்ல உதாரணம்.

அடுத்து, புதுமைப்பித்தன். கல்கி மீது நேர்மையான கடும் விமர்சனத்தை முன் வைத்தவர் புதுமைப்பித்தன் என்பது முக்கியம். 1930களில் 'மணிக்கொடி' சார்ந்த எழுத்தாளர்கள் மிகச் சிரத்தையான எழுத்தாளர்களாகவும், கல்கி போன்றவர்கள் பத்திரிகைகளுக்காக எழுதும் எழுத்தாளர்களாகவும் (அதாவது வடுவூர் துரைசாமி ஐயங்கார், தி. ஜ. ரங்கநாதன் போன்ற எழுத்தாளர்களின் அடுத்த கட்ட இன்னொரு வளர்ச்சியாக) உருவாகி வருகிறார்கள்.

பத்திரிகைத் தேவைக்காக வேறு மொழிகளில் உள்ள தழுவல்களை எழுத வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதனைக் கல்கியின் வரலாற்றை எழுதிய சுந்தா போன்றவர்களே ஒத்துக் கொள்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com


கல்கியும் வெகுசன வாசிப்புத் தளத்துக்குத் தேவையான எழுத்தையே சமுதாயத்தின்முன் வைக்கிறார் ஐரோப்பிய இலக்கியங்களின் கதைகளை நம்மூர் கதைகளாகத் திருப்பங்கள், திகில்கள் நிறைந்தவையாக முன் வைக்கின்றார். வாசிப்புக்குத் தீனி போடுகின்றார். அவ்வளவே!

புதுமைப்பித்தன் இவரைக் கடுமையாக விமர்சனம் செய்தபொழுது இவரும் மிகவும் மோசமாகப் புதுமைப்பித்தனை விமர்சனம் செய்தே வந்துள்ளார். புதுமைப்பித்தன் இறந்த பிறகு அவருக்கு நிதி திரட்டவும் உதவியுள்ளார்.

ஆக, பாரதி மற்றும் புதுமைப்பித்தனை அவர்களுடைய ஆளுமைகளின் வழியாகக் கல்கி ஏற்றுக்கொண்டவர் எனக் கூற முடியாது. வெகுசன ரீதியில் இவர்கள் தவிர்க்க முடியாதவர்களாக வரும்பொழுது இவரும் ஏற்றுக்கொண்டதாகத்தான் பார்க்க வேண்டுமென்று கருதுகிறேன். இன்று பலரும் இதனை மறந்து அல்லது இருட்டடிப்பு செய்யும் போக்கு உள்ளது. இது சரியல்ல.

கல்கிக்கும் தமிழிசை இயக்கத்துக்கும் உள்ள தொடர்பு என்று பார்க்கும்பொழுது தமிழ்நாட்டில் தமிழிசை இயக்கம் என்பதைத் தமிழ்ப்பாட்டு இயக்கத்திலிருந்து வேறுப்படுத்திப் பார்க்க வேண்டும். தமிழிசை இயக்கம் என்று சொன்னால் நமது சங்க இலக்கியத்தில் தோன்றி தேவாரத்தின் ஊடாகப் பிற்காலத்தில் உருவாகி வந்த பண் மரபு சார்ந்தது தமிழிசை. இந்த மரபை மீட்டு எடுப்பது மீட்டு வளர்ப்பது என்பது தமிழிசை இயக்கம். ஆப்ரகாம் பண்டிதரின் கருணாகரசாகரம் தொடங்கி விபுலானந்தர், குடந்தை ப. சுந்தரேசனார், வீ. பா. க. சுந்தரம் என்று இந்த இயக்கத்திற்கு ஒரு பெரிய மரபு உண்டு. இவர்கள் நமது தமிழிசை, தமிழ்ப்பண் மரபின் நீட்சியாகப் பணியாற்றியவர்கள். இந்தப் பெரியவர்கள் செய்த வேலைக்கும் வெறுமனே கர்நாடக சங்கீதத் தெலுங்கு கீர்த்தனைகளைத் தமிழ்ப் படுத்தக் கோரியவர்களுக்கும் வேறுபாடு உண்டு.

தமிழ்நாட்டு அரசியல்வாதிகளாக இருந்த ராஜாஜி, கல்கி, டி.கே சி. போனறவர்கள் சென்னையில் உள்ள சபாக்களில் தெலுங்கு மொழியிலான பாடல்களுக்குப் பதிலாகத் தமிழ்ப்பாட்டை வலியுறுத்தினர். தமிழ்ப் பாட்டை வலியுறுத்துபவர்களாக இருந்தனர். இது தமிழிசை இயக்கமல்ல. தமிழ்ப் பாட்டைக் கர்நாடக சங்கீதத்தில் பாடுவது தமிழிசை இயக்கமாகாது.

அடுத்து கல்கி பற்றி விவாதிக்க வேண்டியது, கல்கி படைப்பாளியா? இது பற்றிப் பலரும் கருத்து தெரிவிக்கின்றனர். கல்கி பற்றி

படிப்பகம்

www.padippakam.com



அதிகம் பார்க்கப்படாமலே கல்கி முக்கியமான படைப்பாளி என கருத்து தெரிவிக்கின்றனர்.

தமிழக அச்சு ஊடக வளர்ச்சி, வெகுசன வாசிப்பு, பத்திரிகைத் தொழில் என்ற போக்கில் ம.பொ.சி. வழிப்பட்ட தமிழ்த் தேசியம் பேசுபவராகக் கல்கி இருந்தார். பல்லவ, சோழ மன்னர்கள் பற்றிய கற்பனைக் கதைகளை வெகுசனத் தளத்தில் வாசிக்கும் திராவிட இயக்கம் சார்ந்த வாசிப்புச் சூழலும், இந்தியத் தேசியத்தோடு சேர்ந்த தமிழ்த் தேசியம் பேசுதலும் நிகழ்ந்தது. இந்தத் தளத்தில் கல்கியின் பாத்திரங்கள் வாசிப்பதற்கு ரசமாக இருந்தன. இதனைப் புரிந்துகொள்ளாமல், ஜெயமோகன் போன்றவர்கள் கல்கியைக் காவிய ஆசிரியராகக் காட்டுவதும், நண்பர் சாரு நிவேதிதா, சிறுபத்திரிகைக்காரர்கள் கல்கியை கவனிக்காமல் விட்டது தவறு என்று கருதுவதும் நல்ல நகைச்சுவையாக உள்ளது. வெகுசன அங்கீகாரம் என்பதும் வெகுசன உளவியல் புரிதல் என்பதும் ஒன்றல்ல.

## கிருஷாங்கினி

நான் கல்கியைச் சின்ன வயதில் படிக்கவில்லை. என்னுடைய வீட்டுச் சூழல் வேறு ரீதியாக இருந்தமையால் படிக்கவில்லை. எங்க அண்ணா 'கீதாஞ்சலி'யை எப்பவும் படிப்பாங்க. அதைப் பற்றியே நிறையப் பேசுவாங்க. வீட்ல பிச்சமூர்த்தி, லா.ச.ரா., பி எஸ்.ராமையா, மௌனி இந்த மாதிரியான எழுத்தாளர்கள் பற்றிய பேச்சுகள், விவாதங்கள்தான் அதிகமாக இருக்கும். நான் மொழி பெயர்ப்புக் கதைகள் அதிகம் படிச்சிருக்கிறேன். அதிலும் குறிப்பாக ரஷ்யன் கதைகள் அதிகம். விபூதிபூஷண் பந்தோபாத்யாயா, காண்டேகர் போன்றோரின் நாவல்கள் அதிகம் படிச்சிருக்கேன். சிறு வயதுச் சூழல் இப்படியாக அமைந்தமையால் கல்கி பற்றிப் படிக்கவில்லை. அத்துடன் எழுத்து பற்றிய தீவிர சிந்தனைத் தேடல்தான் அதிகமாக இருந்தது. உண்மையை நோக்கிய எழுத்துகள்தான் இவை என்ற அபிப்பிராயம் சின்ன வயதிலேயே எனக்கு ஆழமாகப் பதிஞ்சிருச்சி.

அப்புறம் கொஞ்சம் வயதான பின்புதான் கல்கியைப் படிச்சன். கல்கியின் இசை விமரிசனங்கள் ரொம்ப மனதில் நின்றன. கல்கியின் நாவல்களுடைய பிரமாண்டம் எனக்கு அதிசயத்தை

—இதன் தொடர்ச்சி 69ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

முன் இதழ்த் தொடர்ச்சி

# தன்மையம் II

கவிதாசரண்

என்னைத்தமிழ் அன்னை பெற்றாள்
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்
இன்னுயிரைத் தோற்றபின்னே
என்குழியில் பூத்திருப்பேன்

சட்டத்துக்குக் கட்டுப்படுவதைத் தம் இரத்த ஓட்டமாகக் கொண்ட மக்களிடம் சிக்கல்கள் முளைப்பது, அரசு தான் செய்ய வேண்டியதைச் செய்யத் தவறுவதால்தானே தவிர மக்களால் அல்ல.

நடைமுறை அம்சத்தில் இன்னொரு நெருடலும் நம் கவனத்துக்கு வருகிறது:

வேற்றுமொழிகளை வீட்டு மொழிகளாகக் கொண்டவர்களில் பெரும்பான்மையினர் தங்களைத் தமிழர்களோடு தமிழர்களாய் இணைத்துக் கொள்வதில் தயக்கம் காட்டியதில்லை எனினும், தமிழர்கள் தங்கள் மொழியின் பழம்பெருமைபற்றிப் பரவசம்கொள்ளும் போது, மொழிப்பண்டிதர் மு. கு. ஜகன்னாத ராஜா முதல், புத்திலக்கியம் கற்று, பின் நவீனத்துவத்தை வாழ்க்கையாகப் பாவிப்பதாய்க் காட்டிக்கொள்வதோடு நியதிகளைக் கலைத்துப்போட்டு, மரபு வாழ்க்கையாளர்களை அதிரக் கலக்கும் படைப்பாளி சாரு நிவேதிதா வரை அங்கொருவர் இங்கொருவராக உளவியல் சிக்கலுக்கு ஆட்பட்டாற் போலத் தங்கள்

படிப்பகம்

www.padippakam.com



மனப்பிளவைக் கடை பரப்பத்தான் செய்கிறார்கள். (சாரு நிவேதிதாவின் இச்சிக்கல் பற்றிப் பின்னொரு சந்தர்ப்பத்தில் விரிவாய்ப் பேசுவோம்.)

கலைஞருக்கு இதுபோன்ற உளவியல் சிக்கல் ஒருபோதும் வந்ததில்லை என்பதோடு, அவருடைய 'தமிழ்ப் போற்றல்' பிறரை மனப்பிளவுக்குட்படுத்தினால்தான் உண்டு. கலைஞர் போன்றவர்களைத் தமிழர்தான் என்று மெய்ப்பிக்க இப்படிக் காரணங்காட்டிப் பேசுவதே அருவருப்பூட்டும் கொச்சைத்தனமாக நமக்குப் பட்டாலும், அவர் என்னவோ குணாவைத் தீர்க்கதரிசியாக்கிக்கொண்டிருப்பதுதான் இதிலுள்ள துயரம்.

கலைஞரிடமிருந்து தமிழைக் கழித்துவிட்டால் என்னாகும்? முதலில் 'கலைஞர்' என்னும் பெயர் போகும். அவருக்கு நூறு பெயர்கள் இருக்கலாம். ஆனால் 'கலைஞர்' தான் அவருக்கான, அவரேயான இயற்பெயராகிவிட்ட காரணப்பெயர். அதை நீக்கிவிட்டால் வெற்றுச் சொற்களாலான கருணையும் நிதியும் சேர்ந்த முரண்தொகுப்பாய் இருப்பார். இப்போதும் அப்படித்தான் இருக்கிறார் என்றாலும் 'கலைஞர்' எனும் பெயர் அதற்கொரு இலக்கியப் பரிமாணத்தைக் கொடுக்கிறது. கலைஞர் என்பது அவரது மொழியின் மறுபெயர்; அவரின் எல்லா ஏறுமுகங்களுக்கும் அடி எடுத்துக் கொடுத்த முதல் படி.

ஐம்புலன்களுக்குள் அடங்கிப்போகிறவனுக்கு மொழி ஒரு கருவியாக மட்டும் சுருங்கிப் போகலாம் — ஓணான் அடிக்கிறவன் கையிலுள்ள உண்டிவில் மாதிரி, கம்பூன்றித் தாண்டுகிறவன் கையிலுள்ள நெகிழ்ந்தேத்தும் நெடிய கழி மாதிரி. கொஞ்சம் இதிகாசத்தனமாகச் சொன்னால் கர்ணனோடு கூடப் பிறந்த கவசகுண்டலம் மாதிரி. ஆனால் ஆறாவது புலனை ஆளத்தெரிந்தவனுக்குத் தெரியும் மொழிக்குள் இருக்கும் வெளியும் அது தனக்குள் வளர்க்கும் மனமும். ஆணைப் பெண்ணும் பெண்ணை ஆணும் தின்னுவதாகப் பாவிப்பதெல்லாம் தின்னப்படுவதற்குத்தான் போல, மொழியும் மனமும் சுடர் பொருந்தும் சுடராய்ப் பற்றிப் படர்ந்து கசிதலே வாழ்வின் சாரம். இதை யார் அறியத் தவறினாலும் அறியத் தருபவனே கலைஞன். அல்லாமற்போனால் அவன் எரிந்த கற்பூரத்தின் மெலிந்த கரித்தடமாய்க் கரைந்து போகக் கடவன்.

படிப்பகம்

www.padippakam.com



ஆட்சிக்கு வருமுன் கலைஞரும் கட்சியினரும் சங்க காலத் தமிழ் மன்னர்களின் 'பொற்காலம்' பற்றிச் சலிக்கச் சலிக்கப் பேசித் தங்கள் நெஞ்சில் மாமன்னக் கனவுத் தோற்றங்களைப் படிமம் செய்துகொண்டனர். ஆட்சிக்கு வந்ததும், அந்தக் காலத்து நவாப் ராஜமாணிக்கத்தின் நாடக மேடையில் தோன்றும் வெள்ளிச்சரிகை வேந்தர்களைப்போல் விழாமேடைகளில் ஏறி, சிம்மாசனம் போட்டு அமர்ந்து, செங்கோல் பிடித்து, மலர்க்கிரீடம் தரித்து, வீரவாள் ஏந்தி, கேடயம் தாங்கி, ஆளுயர மாலை அணிந்து கொண்டு, மலர்ச் செண்டு சுமந்து, மறந்துபோன முடியரசர் கனவை நடித்து மகிழ்ந்தனர். இன்று நடிப்பை மரபாக்கியும் கொண்டனர்.

பாண்டியன் நெடுஞ்செழியன் மானம் பிழைக்க வந்த ஒரு சாதாரண பெண்ணுக்கு இழைத்த அநீதிக்காகத் தன் உயிரை விட்டதன்மூலமும், சேரன்செங்குட்டுவன் அந்தப் பெயர் தெரியாத குடிமகளுக்குச் சிலை எடுத்ததன்மூலமும், இராசஇராச சோழன் சமஸ்கிருத வழிபட்ட சமூக அறங்களையும் தேவதாசி மரபேற்ற பெருந்தெய்வ வழிப்பாட்டையும் அரச முத்திரையோடு தமிழ்க்களத்தில் பாய்ச்சிவிட்டவன் என்ற கசப்பு சுரந்தாலும், கட்டிடக் கலையின் பொறியியல் அற்புதம் பேசும் தஞ்சை பெருவுடையார் கோவிலை எழுப்பியதன் மூலமும் வரலாறு படைத்தவர்களாகிறார்கள்.

அவர்களைவிடப் பன்மடங்கு சிறப்பான, பன்முகத் தமிழ் வரலாறு படைக்கக்கூடுமான காலகட்டம் கலைஞருக்கு வாய்த்தது. பல நூறு ஆண்டுகளாய் அந்நியத் தாக்குதல்களுக்கும் ஆட்சிகளுக்கும் முகம்கொடுத்து, நலிவுற்றும் கலைவுற்றும் ஒதுக்கமுற்றுக் கிடந்த தமிழ்ச் சமூகமும் அதன் மொழியும் புத்துயிர்ப்புக்கும் மறுமலர்ச்சிக்கும் ஏங்கி நின்ற நேரம் அது. சுயமரியாதை இயக்கம் தொடுத்த கலகத் தாக்குதலும், அது தன் இதழ்கள் மூலமாகவும் உரைகள் மூலமாகவும் வடித்துக் கொடுத்த உலகளாவிய அரசியல் விழிப்புணர்வும், தகுதியுள்ள எவரும் தலைமை ஏற்கலாம் என்னும்– 'இந்தியப் புனித மரபு'க் கெதிரான – குடியாட்சிப் பண்பும் தமிழ் மண்ணைப் பண்படுத்திக்கொண்டிருந்த நேரம்.

பாலை நடுவில் பாறையும் சரளையுமாகச் சின்னஞ்சிறு துண்டு நிலத்தைத் தங்கள் தாயக மண்ணாகப் பெற்றதும் உல

படிப்பகம்

www.padippakam.com



கெங்கும் சிதறிக்கிடந்த யூதமக்கள் ஒன்றிணைந்து குடியேறி, தங்கள் மொழியை மீட்டெடுத்து, வெல்லற்கரிய வல்லவர்களாய் நிமிர்ந்தெழுந்தார்கள். அதுபோன்றதொரு நிமிர்வு தமிழுக்கும் தமிழருக்கும் தேவை என்று உணரப்பட்ட நேரம். நல்ல காலம் தமிழுக்கு நிலம் தேடும் அவலம் நேரவில்லை. மற்றபடி தன் சொந்த மண்ணிலேயே மந்தப்பட்டுக்கிடந்த தமிழ்ச் சமுதாயத்தைத் துள்ளியெழ வைத்திட ஒரு மின் தொடுகை தேவைப்பட்டது.

அப்படியொரு கட்டத்தில், அரசு எந்திரத்தில் பங்கேற்பதிலிருந்து அதுவரை விலக்கப்பட்டிருந்த அடிநிலை மக்கள் திரளிலிருந்து துடிப்பும் துள்ளலும் மிக்க பாய்ச்சல்காரராய்த் தோன்றியவர்தான் கலைஞர். (அடிநிலை மக்கள் திரளைச் சேர்ந்தவர் என்பதை இன்று கலைஞரே ரசனைக் குறைவான விஷயமாக அல்லது மறுதலிக்கிற புள்ளியாகக் கருதலாம். அதனாலெல்லாம் அதன் உண்மைத் தன்மைக்குப் பழுதொன்றும் நேர்ந்துவிடாது. அடிநிலை மக்கள் என்போர் இருபிரிவுகளாகத் தாழ்ந்து கிடந்தனர். ஒன்று தீண்டத்தகுந்த பிரிவு; மற்றொன்று தீண்டத்தகாத பிரிவு. கலைஞர் முதல் பிரிவைச் சேர்ந்தவர். சாதியாச்சார சந்தோஷத்துக்காக வேண்டுமானால் மிகமிகப் பிற்படுத்தப்பட்ட பிரிவென்று சொல்லிக் கொள்ளலாம். சுயமரியாதைக்காரனையே மரியாதை கெட்ட கழுதையாக்கிவிட்ட அந்தச் சாதி யாரைத்தான் இன்று விட்டு வைத்துள்ளது? அப்படி விட்டுவைக்காமல் கொத்திக் குதறிக் கொண்டிருக்கும் இந்தக் கொடுஞ் சூழலில் கலைஞருக்கும் கணிசமான பங்குண்டு என்பதுதான் உண்மை.)

அரசர் காலத்து தமிழகத்தில் அடிநிலை மக்களின் எழுச்சி காரணமாக நடந்த இடங்கை, வலங்கை போராட்டத்துக்குப் பின்னர், அப்படியொரு வெளிப்படையான போராட்டம் இன்றியே கலைஞரால் தமிழக அரசுக்குத் தலைமை ஏற்க முடிந்தது. அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு தன் மொழியும், இனமும், நாடும் முந்தியிருப்பச் செய்தலுக்குத் தன்னை அர்பணித்துக்கொள்வார், அதன் மூலம் ஒரு மகத்தான வரலாறு படைப்பார், ‘உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு’ என்னும் தனக்குப் பிடித்த வாசகத்தை மெய்ப்பித்து ஒரு சகாப்தமாகத் திகழ்வார் என்று

படிப்பகம்

www.padippakam.com



எதிர்பார்க்கப்பட்டது. எதிர்பார்க்கும்படியான சவடால்களின் கருவூலம் அவர். அது பொய்த்துப்போன கொடுமைதான் எல்லா இசைகேடுகளைவிடவும் பொல்லாக் குணக்கேடாய்த் தமிழகத்தைப் பிடித்தாட்டுகிறது.

திரிந்துபோன இந்தச் சூழலிலும் கலைஞர் ஓர் அரசியல் சகாப்தம்தான். 'ஆனால் பொதுவாழ்வைக் கொச்சைப்படுத்திய சகாப்தம்; கொச்சைப்படுத்துவதை அறிவியல் பூர்வமான மரபாக்கிய சகாப்தம்' என்பது மக்களுக்கான அரசியலில் மாண்புறு விழுமியங்களை எதிர்பார்க்கிறவர்களின் மதிப்பீடு.

'கலைஞர் நம்ம ஆள்; சாமானியர்களின் சாமானியர்' என்பது போன்ற சரிபார்க்கப் படாத அபிப்பிராயங்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, சற்று நிதானமாக யோசித்தால், அவரை அவராகவே அளவிடுதல் ஒரு சராசரி மனிதனுக்கும் சாத்தியப்படக்கூடிய விஷயம்தான். ஓர் அரசியல்வாதியாக அவர் ஒரே சமயத்தில் பிரமிப்புக்கும் கழிவிரக்கத்துக்கும் உரியவாகிறார் என்பதே அந்த அளவீடு.

பொதுவாழ்வில் இரண்டு வகை சராசரிகள் உண்டு. ஒருவர் பிறருக்குச் செய்வதன் மூலம் தனக்கும் செய்துகொள்கிறவர். மற்றவர் தனக்குச் செய்துகொள்வதற்காகப் பிறருக்குச் செய்து தீர வேண்டியவர். கலைஞர் இரண்டாவது வகை மனிதர். எப்போதும் முதல்வராயிருக்கப் பிரியப்படுகிறவரை இப்படித்தான் இரண்டாவதாக வகைப்படுத்தல் கூடும். இவ்வகை மனிதர்களுக்கு மொழி, இனம், நாடு என்பதெல்லாம் பிரமிக்க வைக்கும் பேச்சுக்கான கச்சாப் பொருள்கள்; கண்ணாமூச்சி சமாச்சாரங்கள். அவை ஒன்றும் வரலாற்றுக் கடமைகளாய் அவர்களை வசீகரிப்பதில்லை. கலைஞருக்கும் அப்படியே.

அரசியல் தளத்தில் கலைஞர் ஒரு யுக புருஷராக வளர்ந்திருக்க வேண்டியவர் என்று சொல்வது சற்று மிகையாகத் தோன்றினாலும் சரியான மதிப்பீடாகவே இருக்கும். ஆனால் அவரோ நுண்ணரசியல் சுரணையைப் பொருட்ப்படுத்த மறுக்கும் பகட்டுத்தனமான பேரரசியல் புனைவாளராகவே தன்னை மலினப்படுத்திக்கொண்டுவிட்டார். சித்தனாகும் யோகமுள்ளவன் வீதிமுனை வித்தைக்காரனாகவும், காயகல்பத்தைப் பண்டுகம் செய்யத்தெரிந்தவன் மூத்திரச் சந்தில் சிட்டுக்குருவி

படிப்பகம்

www.padippakam.com



லேகியம் விற்றுப் பிழைக்கிறவனாகவும், 'வெளி'யெங்கும் விரியத் தெரிந்தவன் கஞ்ச மனத்தை ஆண்டு அடங்குகிறவனாகவும் திசை மாறிப்போனால் எப்படியோ, அப்படித்தான் கலைஞரின் ஆளுகையும் அரசியலும்கூட.

பிழைக்கத் தெரிவது பிழை பண்ணத் தெரிவதுதான் என்பதே அவர் ஆட்சிக் காலத்தின் அரசியல் சூத்திரமானது.

இப்படியானதற்குக் காரணம் அவர் தன்னை மட்டுமே பொருட்படுத்துகின்ற ஒரு தன்மையக்காரராய் உருப்பெற்றது தான். தன்னை மையப்படுத்தல், தன்னை நிலைப்படுத்தல், தன்னை வளப்படுத்தல் என்பதே அவரின் நெடிய அரசியல் பயணத்தின் ஒற்றை இலக்கு- வேதியரின் முப்புரிநூல் மாதிரி. வேதியருக்கு முதுகு சொரியப் பயன்பட்டாலும் அது மேலாண்மையின் சின்னம். கலைஞருக்கும் அதுவே தன்மூப்புச் சின்னம். தன் ஒற்றை இலக்கை வென்றெடுக்கத் திட்டமிடப் பட்டவையே அவரின் எல்லாச் செயல்பாடுகளும்.

எந்தக் கன்றும் கொம்போடு பிறப்பதில்லை. கொம்பு முளைக்கிற விஷயம் காளையாகும் போதுதான். கொம்பு காளையில் ஓர் அங்கமாய் இருக்கும் வரைதான் அது அழகு. அப்படியில்லாமல் கொம்பாகவே காளை ஆகிவிட்டால்?

கலைஞரின் தன்மையமானது கொம்பே காளையாக வியாபித்து மூர்க்கமாகிப்போன கதைதான்.

ஒரு கருத்தாகட்டும், அல்லது செயலாகட்டும், தான் முன்னெடுக்காத, அல்லது தான் முன்னிலைப்படாத எதையும் பொருட்படுத்த மறுப்பது கலைஞரின் தவிர்க்கமுடியாத அம்சம். தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகமும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் நிதி நெருக்கடியிலிருந்தும் நிர்வாகக் குளறுபடியிலிருந்தும் மீண்டு, தம் ஆக்கப்பணிகளை வேகத்தோடும் விவேகத்தோடும் ஆற்றும் என்பதற்கு ஒரு நம்பிக்கையும் இல்லை. கலைஞர்தான் ஆள்கிறார். ஆனால் அவை எம்ஜியாரால் தோற்றுவிக்கப்பட்டவை (அரசியல் காரணங்களுக்காகவே எனினும்). எம்ஜியாரால் அரசாணை மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட பெரியார் எழுத்துச் சீர்திருத்தத்தை கலைஞரும் முரசொலியும் புறக்கணித்த காலம் ஒன்றும் மறந்துவிடக்கூடியதல்ல.

படிப்பகம்

www.padippakam.com



கொஞ்சம் தீர யோசித்தோமானால் இன்னொன்றும்கூட 'சுருக்'கெனத் தைக்கிறது. அதாவது, மொழி, இன ஒப்பனைகளோடு ஆட்சியதிகார அரசியல் களத்தில் இறங்கிய கழகத்தின் வாழ்நாள் தலைவரான கலைஞர் இன, மொழி மேம்பாட்டுக்காக இதுவரை சொல்லிக்கொள்ளும்படியாக எதனையும் முன்னெடுத்ததில்லை. எம்ஜியாரும் ஜெயலலிதாவும் முறையே மதுரையிலும் தஞ்சையிலும் நிகழ்த்திக்காட்டிய உலகத் தமிழ் மாநாட்டுத் திருநாள் கூத்துகளுக்கிணையாகக்கூட இவர் ஒன்றும் இயங்கிவிடவில்லை.

பெருஞ்சித்திரனார் நினைவேந்தல் கூட்டத்தில் ஆட்சியதிகாரத்தைத் தொலைத்திருந்த கலைஞர் சொன்னார்: "நான் இன்னொருமுறை ஆட்சிக்கட்டில் ஏற விரும்புகிறேன். எதற்கெனில் பெருஞ்சித்திரனார் கனவை நனவாக்க; தமிழை ஆட்சி பீடத்தில் அமர்த்த." (சொற்கள் கட்டுரையாளருடையவை.)

கலைஞர் ஆட்சிக்கட்டில் ஏறி மூன்றாண்டுகளுக்கும் மேல் ஓடிவிட்டன. தமிழ் அரியணை ஏறுவது இருக்கட்டும். அது தள்ளாடாமலாவது நிற்க அனுமதிக்கப்பட்டுள்ளதா?

'தத்தளிக்கும் தமிழ் மாணவர்கள்' என்னும் தலைப்பிட்டு 17-9-'99 ஆம் நாள் தினமணி வெளியிட்ட ஒரு கடிதம் இதோ:

> சென்னை சைதாப்பேட்டை கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்திலும் வெலிங்டன் சீமாட்டிக் கல்லூரியிலும் 430 தமிழ் இலக்கிய மாணவர்களுக்கு ஆண்டுக்கு இருமுறை என பல ஆண்டுகளாக நடந்துவந்த ஐந்து மாத கால தமிழாசிரியர் பயிற்சியை, பொருத்தமற்ற காரணங்களைக் கூறி நிறுத்திவிட்டனர். பிறகு பலரின் கோரிக்கைகளை ஏற்று, எந்த அடிப்படை வசதியும் இல்லாத தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரிக்கு மாற்றினர். அங்கு 50 பெண்களுக்கும் 50 ஆண்களுக்கும் என 100 மாணவர்களுக்கு மட்டும் 16-12-98 அன்று வகுப்பு தொடங்கியது. ஆனால் தமிழாசிரியர் பயிற்சிக்கென ஓர் ஆசிரியரைக்கூட நியமனம் செய்யவில்லை. தற்காலிக ஆசிரியர்களையும் நூலகரையும் கொண்டு ஒரு பாடத்தை ஐந்து ஆசிரியர் வீதம் கடமைக்கு நடத்தி முடித்தனர்.
>
> இவ்வாறு படித்து முடித்து மே மாதம் தேர்வு எழுதியும் இன்று வரை தேர்வு முடிவு வரவில்லை. கல்லூரி முதல்வரிடம் இது குறித்துக் கேட்டபோது, "நானும் அரசுத்துறைக்குக் கடிதங்

படிப்பகம்

www.padippakam.com



கள் எழுதிக்கொண்டுதான் இருக்கிறேன். பதில் இல்லை'' என்கிறார். மாணவர்கள் சார்பாக தமிழக முதல்வருக்கும் அரசுத்துறை இயக்குநருக்கும் தந்தி கொடுத்தும் பதில் இல்லை. தமிழுக்கெனத் தனித்துறையே தமிழக அரசு ஏற்படுத்தியுள்ள கூறிக்கொள்ளும் இக்கால கட்டத்தில் தமிழ் மாணவர்களாகிய நாங்கள் படும் துயர் நீக்க முன்வருவார் எவருமிருப்பதாகத் தெரியவில்லை.

ஜூன் 15இல் மீண்டும் தொடங்கவேண்டிய தமிழாசிரியர் பயிற்சி போதிய ஆசிரியர்கள் இல்லாமையால் தொடங்கவில்லை என்று கூறுகிறார்கள். மருத்துவக் கல்லூரியிலோ, பொறியியல் கல்லூரியிலோ ஆசிரியர் இல்லை. எனவே இந்த ஆண்டு சேர்க்கை நடைபெறாது என்று கூறுவார்களா? இதற்குப் பெயர்தான் தமிழ்நாடோ!

ஈ. சங்கரநாராயணன்,
செயலாளர், தமிழாசிரியர் மாணவர் மன்றம், பொட்டலூரணி,
தூத்துக்குடி மாவட்டம்.

'தமிழ் வேண்டும்' என்று கோரும் தமிழர்கள் கலைஞர் அரசில் எவ்வாறு கண்டு கொள்ளப்படுகின்றனர், தமிழ் நிலத்தை முற்றுகையிட்டுக் கொண்டிருக்கும் 'தமிழ்ப்பகை' ஊடகங்கள் அவர்களை எவ்வாறு சித்தரிக்கின்றன என்பதற்கு ஒரு நேரடி களப்பணி சான்றாகக் கீழ்க்கண்டவற்றையும் சொல்லலாம்:

நீதியரசர் மோகன் தலைமையிலான தமிழ்வழிக் கல்விக் குழுவின் பொதுமக்கள் கருத்தறியும் (தேவையற்ற) கூட்டம் பள்ளிக்கல்வி இயக்கக வளாகத்தில் இந்த ஆண்டு மே மாதம் 20, 21, 22 ஆகிய மூன்று நாட்கள் நடந்தது. அப்போது ஆங்கில வழிக் கல்வி நிறுவன உரிமையாளர்கள் அடியாட்களுடன் கலந்து கொண்டனர். பேரணி நடத்தி வளாகத்தைச் சுற்றி வந்து 'ஆங்கிலம் வாழ்க, தமிழ் ஒழிக' என்று முழக்கமிட்டுத் தொழிற் பிரச்சினையாக்கினர். அதைச் சகித்துக்கொள்ள முடியாத தமிழுணர்வாளர்கள் தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்க எதிர் முழக்கமிட்டு, கருத்து மோதலுக்காட்பட்டதில் இருவர் கைது செய்யப்பட்டுப் பின்னர் மாலையில் பிணையில் விடுவிக்கப்பட்டனர். கல்வித்துறையினர் ஆங்கில வழிக் கல்வி ஆதரவாளர்களுக்குக் கேடயமாய் நின்று சிறப்பித்தனர். அடியாட்களைக் கண்முன்னர் கண்டும் அரசுத்துறையும் காவல்

படிப்பகம்

www.padippakam.com



துறையும் வேடிக்கை பார்த்துக்கொண்டு வாளாவிருந்தன. இந் நிகழ்வுகளைச் செய்தியாக்கிய 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' தமிழ் உணர்வாளர்களைக் குற்றவாளிகளாகச் சித்தரித்தது. மொழி வெறி தலை தூக்குவதாக வர்ணித்தது. தமிழ் வேண்டுவோரை ஆங்கில மோகிகளின் கார் கண்ணாடிகளை நொறுக்கிய பொறுக்கிக் கும்பலாகக் கொச்சைப்படுத்தியது. 'தினமலர்' தமிழ் உணர்வாளர்களைப் பெண்களின் சேலையைப் பிடித் திழுக்கும் சமூக விரோதிகளாகச் சித்தரிக்கும் இதழியல் சாமர்த்தியத்தை உரசிப் பார்த்துக் கொண்டது. இம்மோத லுக்கான நியாய அநியாயங்களின் மூலமான 'தமிழ் ஒழிக!' என்னும் முழக்கம் சுரணையற்ற மனிதர்களுக்கும் கழுதைகள் தின்னும் காகிதங்களுக்கும் பொருட்டற்றுப் போனதுதான் கலைஞர் ஆளும் தமிழ்நாடு பேணும் கழிசடைத்தனம்.

இப்படியெல்லாம் தமிழும் தமிழரும் 'சீ'ப்பட வேண்டும் என்பது பெருஞ்சித்திரனார் கண்ட கனவல்ல; இவ்வாறெல் லாம் தமிழ் விழைவாளர்கள் திக்கற்றுத் தேம்பித் தவிக்கும் நிலை கலைஞர் அரசில்தான் நடக்கும் என்பது கௌரவமும் அல்ல. சத்தியப் பிரமாணங்களாய் இருக்க வேண்டிய வாக்கு றுதிகளைக் கலைநயங் கூடிய பச்சைப் பொய்களால் தீட்டப் பட்ட குட்டிச்சுவர் குறளோவியங்களாக்கி, அவற்றைக் கழு தைகள் தின்னக் கொடுப்பதென்பது நவீன அரசியலுக்குக் கலைஞர் வழங்கிய நன்கொடையாய் இருக்கலாம். ஆனால் நமக்கோ அது நாற்சந்தியில் நிற்கவைத்துக் கோவணத்தை உருவக் கொடுக்கும் மானக்கேடான கதைதான்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கலைஞர் தன் பன் முக சமயோசித அவதானங்களால் கட்டிக் காப்பதாகச் சொல் வது கவனத்துக்குரிய விஷயமே. ஆதாயமில்லாமல் செட்டி ஆற்றோடு போகமாட்டார் என்பார்கள். கலைஞர் ஆற்றோடு போகிறவர் அல்ல. ஆற்றின் குறுக்கே அணையாகக் கிடந்து அரண் செய்கிறவர். கட்சியாற்றுக்குக் கிடைத்த இந்தப் பேறு காவிரியாற்றுக்குக் கிடைக்காமல் போனது கர்நாடகம் பெற்ற நற்பேறு என்றே மதிப்பிடப்பட வேண்டும்.

கலைஞர் கட்சியைக் காக்கமட்டும் செய்யவில்லை. அதைத் 'தான்'ஆகவே கண்டடைந்து வென்றெடுத்தவரும் ஆகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



தி(ருக்குவளை) மு(த்து வேலர்) க(ருணாநிதி) எனத் தொடக்கத்தில் ஓர் தற்செயல் ஒற்றுமையாகக் கண்டு பரவசப்பட்டதெல்லாம் போய் இன்று அதுதான் உண்மை என்று அடித்தெழுதியாகிவிட்டது. இல்லை என்றால், ராமருக்கு செருப்பு மாலை போட்டு ஊர்வலம் நடத்திய ஓர் இயக்கத்திலிருந்து வந்த கழகம், இந்திய ஒருமைப்பாட்டை இந்து ஒருமைப்பாடாக்கும் சர்ச்சைக்குரிய முயற்சிகளில் ஒன்றான பாபர் மசூதி இருந்த இடத்தில் (ராமர் அந்த இடத்தில்தான் பிறப்பேன் என்று அடம் பிடித்ததால் கோசலை இடுப்புவலி கண்டு துள்ளத்துடிக்கப் பனிக்குடம் உடைந்து, மாசி தள்ளிய இடம் என்பதால்) ராமர் கோயில் கட்டுவதைக் கொள்கையாகக் கொண்ட பா.ஜ.க. வுடன் கூட்டணி வைத்துக் கொள்வதைக் கழகத்தின் பொதுக் குழு, செயற்குழு எல்லாம் சின்ன முணுமுணுப்புகூட இல்லாமல் ஏற்றுக்கொண்டு, ஓராண்டுக்கு முன்தான் அக்கட்சிக்கெதிராகக் கதண்டுகதண்டாய்க் காறிக்காறித்துப்பியதையெல்லாம் இப்பொழுது புனிதப் பிரசாதமாக விழுங்கிக்கொண்டிருக்குமா?

1998இல் ப.ஜ.க. பற்றி தி.மு.க. சொன்ன முரசொலி வாசகங்களைத் திரட்டி விளம்பரமாகக் கொடுத்தது த.மா.கா. அதைப் பார்த்து, "த.மா.கா. காரர்கள் கழகத்தை மிகவும் அநாகரிமாகத் தாக்குகிறார்கள். இருப்பினும் நாங்கள் திருப்பித் தாக்கமாட்டோம்," என்றார் கலைஞர். இதிலுள்ள மெய் சிலிர்க்க வைக்கிற உண்மை என்னவென்றால், கழகம் நேற்று எதை நாகரிகம் என்று கருதியதோ, அது இன்று அநாகரிகமாகிவிடுகிறது. அதாவது, கழகம் அன்றன்றைக்கான நாகரிகத்தை மட்டுமே அனுசரிக்கும்.

கழகம் வகுத்தளித்துள்ள எத்தனையோ சித்தாந்தங்களில் ஒன்றாக 'அரசியலில் நிரந்தர நாகரிகம் ஏதும் இல்லை' என்பதும் இருக்கக் கூடும்.

கலைஞர் ஒரு நல்ல சர்வாதிகாரி. ஆனால் அவர் வெற்றி அதிலில்லை. ஒரு நல்ல ஜனநாயகவாதி போலக் கண்ணடக்கம் காட்டும் சர்வாதிகாரியாய் இருக்கிறாரே, அதிலிருக்கிறது. 'கழகத்தை இவர் கட்டிக் காத்த லட்சணம், கழகத்திலிருந்து விலக்கப்பட்டவர்களோடு மோதி மோதி, தோற்பது இயல்பாகவும், வெல்வது விலக்கப்பட்டவர்களின் தவறுகளாலும் என்ப

படிப்பகம்

www.padippakam.com



தாக இழுபறி யுத்தமாகிப் போனதுதானே மிச்சம்' என்று எதிர்நிலையாளர்கள் சாடக்கூடும். பொதுவாழ்வு என்று வந்துவிட்டால் பேச்சுக்காளாகாமல் முடியுமா?

இந்த சர்வாதிகாரத்தனத்தில் கலைஞர் தனது குருவான பெரியாரைவிடப் பெரியாள்தான். பெரியார், தான் சேர்த்த சொத்தையெல்லாம் பொதுக்காரியத்துக்குத்தான் விட்டுச்சென்றார் என்றாலும், அடிப்படையில் அதைத் தன் சொத்தாகப் பாவித்து, அதற்கான அறங்காவலராகத் தன் சொந்த நபரே இருக்க வேண்டும் என்றெண்ணி, மணியம்மையை மணந்து கொண்டார். கலைஞர் அப்படிச் செய்ய முயலவில்லை. கழகத்தின் தோன்றாத் தலைவர் பெரியார் என்பதை மாற்றித் தன்னையே கழகத்தின் சொத்து பத்து அனைத்துக்குமான பொறுப்புள்ள தலைவராக்கிக்கொண்டதன் மூலம் அவர்காலம் வரை கழகம் என்றால் கலைஞர்தான் என்பதை நிலைநாட்டியுள்ளார். அவருக்குப் பின்னால், திறமையிருந்தால் மட்டுமே அவரது மனிதர்கள் தொடர முடியும் என்பது அடுத்த கட்ட அதிகாரப் பங்கீடு.

மொழி பற்றிய நிலைப்பாட்டிலும்கூட ஆசானை விஞ்சிய சீடராகவே கலைஞர் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறார். ஒரு சமயம் பெரியாரின் கணிப்பில் தமிழானது சமூக நீதிக்கெதிரான சகல ரோகங்களுக்கும் சொந்தம் கொண்டாடும் மொழியாகத் தெரிந்தது. ஆகவே, அந்தக் 'காட்டுமிராண்டி' மொழிக்கு மாற்றாகத் தமிழர்கள் அனைவரும் ஆங்கிலத்தைத் தங்கள் மொழியாக்கிக் கொள்ளவேண்டும் என்று கோரினார்.

தமிழர்களிடையே எப்பாடு பட்டாயினும், என்ன விலை கொடுத்தாயினும் சமத்துவத்தை நிலைப்படுத்தத் துடித்த நல்ல உள்ளத்தின் கள்ளமற்ற வெள்ளைக் கனவாகவே அந்தக் கோரிக்கையைப் பார்க்க வேண்டும். ஏனெனில் தமிழ் மீது பெரியார் தொடுத்த குற்றச்சாட்டிலிருந்து ஆங்கிலமோ அல்லது உலகின் வேறெந்த மொழியோ தப்பிக்கும் சாத்தியமே இல்லை. இந்த வெளிப்படையான உண்மையை ஒரு சராசரி மனிதனும் அறிந்திருக்க முடியும் என்பதாலேயே அதைப் பரிசீலிக்கும் வீண் வேலையை அவர் ஒருபோதும் செய்ததில்லை. மேலும், தமிழை அறிவார்ந்த எழுத்துச் சீர்மைக்குட்படுத்திச்

படிப்பகம்

www.padippakam.com



செப்பம் செய்வதில் அவருக்கிருந்த அக்கறையும், அதை நடைமுறைப்படுத்திய வேகமும் அம்மொழியை (வேறு எம்மொழியையும்) நிராகரிப்பது எளிதெனக் கருதித் தன்னை ஏமாற்றிக் கொள்பவரல்ல அவர் என்பதைத் தெள்ளெனக் காட்டியது.

முப்பதுகளிலிருந்து எழுபதுகளின் தொடக்கம்வரை சமூக நீதிக்கான சாத்தியப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதில் ஆட்சியாளர்களை வேண்டியும், விரட்டியும் நெருக்குதல் தருவதையே தன் போராட்ட உத்தியாகக்கொண்டு செயல்பட்டவர் பெரியார். அதே நேரத்தில் அவர் ஒருபோதும் தமிழுக்குப் பங்கம் உண்டாகும்படியான ஆளும் வர்க்கத்தின் எந்த முயற்சியையும் சகித்துக்கொண்டதேயில்லை. அந்தச் சிகிப்பின்மையில் தமிழகம் கொண்டிருந்த நம்பிக்கைதான் தமிழையும் தமிழரையும் விட்டுப் பிரிக்க முடியாதவராய் அவரை இயக்கப்படுத்தியது.

1938இல் தமிழுக்காதரவான இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைத் தமிழ் சைவர்கள்–சனாதனிகளோடெல்லாம் ஒருங்கிணைந்து நின்று நாடு தழுவிய போராட்டமாக்கி வெற்றி கண்டவர் அவர். (அதே பெரியார் 1965இல் வெடித்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில், அதற்கு வெளியே மௌனப்பட்டிருந்தமைக்குக் காரணம், அப்போராட்ட நெறிமுறைகள் அவர் போக்குக்குப் பொருந்தாமையாலோ அல்லது மூத்த போராளி என்ற வகையில் அவர் முன்னிலை வேண்டப்படாமையாலோ தானேதவிர, தமிழோடு முரண்பட்ட பேச்சுக்கே இடமில்லை. அவர் முரண்பட்டதெல்லாம் மொழி பற்றி (வேறு எது பற்றியும்) புனையப்படும் புனிதக் கற்பிதங்களுக்குச் செவிசாய்ப்பது பற்றித்தான். மற்றபடி அவர் இன்று வரை தமிழால்தான் பெரியாராய் நிமிர்ந்து நிற்கிறார். வேறு மொழிகளாலும் நிமிர்ந்து நின்றிருக்கலாம் என்றாலும் அந்த மொழிக்காரர்களுக்கு அவரை ஏற்கின்ற கற்பூர குணமும் இருக்கவில்லை; அவர் வேரோடி நின்ற தளமும் அவர்களுடே இல்லை.

ஒரு மனிதன் எந்த மண்ணில் வேரோடியிருக்கிறானோ, அந்த மண்ணில்தான் அவன் செயலும் மொழியும் உயிர்த்துவம் கொண்டிருக்கும்.

பெரியாரைப் பொறுத்தவரை, வைதிகத்தில் அடங்க மறுத்த வக்கணைப் பேச்சுக்காரராய் தொடங்கி, எதிர்ப்புகளின் தகிப்

படிப்பகம்

www.padippakam.com



புகளை ஊடுருவும் கலகச் சிந்தனையாளராக முதிர்ந்தவர். இந்தியச் சூழலில் ஒரு மனிதன் 'விட்டு விடுதலையாகி' நிற்க விழைகிறான் எனில் அது காஷாயம் தரித்துக்கொள்ளத்தான் என்பதை மாற்றி, சக மனிதர்களிடம் கருத்துப் பணியாற்று வதைக் களப்பணியாக்கவும்தான் என்பதைத் தன் வாழ்வின் அடிநிலை இழையாகப் பற்றிக்கொண்டவர்.

அவர் ஒரு வணிகக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால் தன் வீட்டு மொழியான கன்னடத்தைவிடவும் வணிக மொழி யாய்த் தெலுங்கைப் புழங்குவதில் தேர்ந்தவராய் இருந்தார். (தமிழ் பேசும் தமிழ் வணிகர்கள் அப்போதே அருகியிருந்த மைக்கு அவரைப் பொறுப்பாக்க முடியாதுதானே. ஆனால், அவர் சிந்தனையின் சொல்லாக்கத்துக்குத் தமிழையே தேர்ந்து கொண்டார் என்பது அவர் தேர்ந்து கொண்ட அடையாளம் அல்லாமல் வேறென்னவாய் இருக்கமுடியும்?) அவரது தெலுங்கு தேர்ச்சி, அவர் காங்கிரசை விட்டொதுங்கி சுயமரியாதை இயக் கம் கட்டிய காலத்தில், சென்னையை மையமாகக் கொண்ட தெலுங்கர்கள் நிறைந்த நீதிக்கட்சியில் தனது செல்வாக்கை ஊடுருவச் செய்ய உதவியது. சிந்தனை வீச்சில் தமிழரணியா கக் கட்டமைத்த தன் பொது வாழ்வுத் தளத்தை அர்த்தமுள்ள கலகச் செயல்பாடுகளால் நிறைத்து, தமிழ் எல்லைக்குள்ளே பெரியாராகப் பேருரு தரித்த பெருந்தலைவர் அவர்.

அவரை வடுகர் என்றும் தெலுங்கு முதலாளிகளின் தரகர் என்றும் புது வரலாறு படைப்பது சிரங்கு பிடித்த கைக்குச் சொரிந்துகொண்டால் சுகமாக இருக்கும் போல்தான். மொழி வழி மாநில பிரிவினைக்கு முன்னர் 'மதராஸ் மனதே' என்று உரிமை கோருமளவுக்கு சென்னை மாநகரம் தெலுங்கர்க ளின் மையமாகத்தான் இருந்தது என்பதை மறந்துவிடக் கூடாது. அன்று சென்னை மாகாணத்தின் அரசியல்வாதிகள் தமிழர்களா, அல்லாதவர்களா என்று பார்க்கப்படவில்லை. காங்கிரசுக்காரரா, அல்லாதவரா என்றுதான் பாகுபடுத்தப்பட் டனர். பெரியாருடைய சுயமரியாதை இயக்கம் பார்ப்பன மே லாண்மைக்கும், (இந்து) மதப் பழமைவாதத்துக்கும் பகையா னதாகத்தான் முத்திரை குத்தப்பட்டதே தவிர, தமிழுக்கோ தமிழர் நலன்களுக்கோ முரணானது என்று அன்றைய தமி ழர்களோ, தமிழின் காவலர்கள் தாங்கள்தான் என்று நம்பிக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டிருந்த சைவ மடங்களோ வேளாளர்களோ சொன்ன தில்லை. இந்தி ஆதிக்கத்தால் தமிழுக்கு அச்சுறுத்தல் நேர்ந்த போது பெரியாரோடு துணை நின்றுதான் அதை முறியடிக்க முனைப்பு காட்டினர். மேலும் திராவிட இயக்கத்லைதத் தோற் றுவித்தவர்களே தாங்கள்தான் என்று உரிமை கொண்டா டக் கூடியவர்கள்தாம் வேளாளர்கள். பெரியாரோடு ஆசார சைவர்களுக்கும் இறையன்பர்களுக்கும் இருந்த ஒவ்வாமையா னது அவருடைய கடவுள் மறுப்புக்கொள்கை பற்றியதே. இதில் சைவனைத் திட்டினால் வைணவனும் வைணவனைத் திட்டி னால் சைவனும் மகிழ்ந்து போகும் சமயச் சில்லறைத் தனங் களும் பெரியாருக்கு உதவியாயிருந்ததுண்டு. எப்படியிருப்பி னும் பெரியாரை ஒரு தமிழ்க் காவலராக மதித்துத்தான் தமிழ் வித்தகர்கள் பலர் அவருடைய நட்புக்கும் விமர்சனத்துக்கும் உரிய தோழர்களாய் அவரது கடைசிக் காலம் வரை துணை நின்றார்கள்.

இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்றுதான் பெரியாரின் கட வுள் மறுப்புக் கொள்கையை அறுவகைச் சமய நெறிகள் போல அதுவும் ஒரு வாழ்க்கை நெறிதான் என்னும் பொதுப் புத்தி யோடு- ஏதோ பாதகம் பண்ணிவிட்டாற்போல் பயந்துமிரண்டு போகாமல்- மிகுந்த ஒத்திசைவோடு ஏற்றுக்கொண்டது. உள் ளூர அக்கொள்கையானது பதினென் சித்தர் மரபின் நீட்சியா கவே இங்கே படிந்து நின்றது. பிற திராவிட மொழி நிலங் கள் இம்மரபைத் தவறவிட்டு, அந்நியப்பட்டுப் போனதும்கூட பெரியார் அங்கே புகமுடியாமல் போனதற்கான ஒரு காரண மாயிருக்கலாம்.

பெரியாரைப் போலப் பேருருக் கொண்டவர்களால்தான் சலிப்பான சந்தர்ப்பங்களில்தானென்றாலும் தமிழை விமர்சித் துவிட்டு வில்லங்கமில்லாமல் இங்கே நிமிர்ந்து நிற்க முடியும். பொதுவுக்கென்று தன்னைத் தத்தம் செய்துகொண்டவனுக் குத்தான் அந்தப் பேருரு சித்தியாகும்.

கலைஞர் அதை விரும்பியே தவிர்த்துவிட்டார். மாறாக தமிழை நேசிப்பதும் பூசிப்பதுமாக அலம்பல் பண்ணுவதே புதிய பொதுவாழ்வுச் சூத்திரமாய்க் கண்டடைந்த முன்னோடி களில் கலைஞர் தன்னை நீடித்த செலாவணிக்காரராய்த் தக்க வைத்துக் கொண்டுவிட்டார். ஆயினும், அதன் ஊடாகவே,

படிப்பகம்

www.padippakam.com



பெரியாரைப் பின்பற்றுகின்ற பிரமையே போலத் தமிழ்நாட்டில் ஆங்கிலம் வாழவும் தமிழ் தாழவும் மனங்கோணாமல் அனுமதித்துக் கொண்டிருக்கிறார். ஒரு படத்தில் என்.எஸ். கிருஷ்ணன், "நான் என்ன செய்யட்டும் தாத்தா?" என்று கேட்கும் சிறுவனிடம், "என் தலையில் தீயை வை" என்று சொல்லிவிட்டு வேலையைப் பார்ப்பார். சிறுவன் மெய்யாகவே தீ வைத்து, அவர் தலைப்பாகை எரியும். பெரியாரும் கலைஞரும் தாத்தாவும் பேரனுமல்லர். ஆனால் தலைப்பாகையைப் பற்றிய தீ தலையையும் பற்றிவிடாமல் காத்துக் கரை சேர்ப்பது யாருடைய கடமை?

கழகத்தில் தன்னை நோக்கிக் கேள்வி எழுப்புகிறவர்களையும் நியாயம் கேட்கிறவர்களையும் கலைஞரின் தன்முனைப்பு சகித்துக்கொண்டதே இல்லை. அவர்கள் பகைக்கப்பட்டார்கள்; தூக்கியெறியப்பட்டார்கள்; பாதகர்களாகப் பழிக்கப்பட்டார்கள். இதன் பலனாகத் தமிழகம் பங்காளிக் கட்சிகளின் சண்டைக் களமாக மாறிப் போனது. மற்ற மாநிலங்களில் பொதுப் பிரச்சினைகளை எதிர்கொள்ளப் பல கட்சித் தலைவர்களும் ஒன்றிணைவதும் தனிப்பட்ட முறையில் சகமனிதர்களாக முகமன் கூறிக்கொள்வதும் நல்லதொரு நாகரிகமாகப் பேணப்படுகிறது. தமிழகத்தில் கலைஞரின் கருணையால் அது அந்நியப்பட்டுப்போனது. இதனால் காவிரி போன்ற பொதுப் பிரச்சினைகளில் தமிழகம் முகம் கொடுத்த இழப்பு ஒரு நாகரிக சமுதாயத்தின் தேசத் துரோகக் குற்றத்துக்கு ஒப்பானது. நமக்கந்த சுரணை இல்லாதது நம்மை அவலப் படுத்தப் பிறந்த தலைவர்கள் நமக்களித்த நன்கொடை.

உதயசூரியன் சின்னத்தில் ஒரு கழுதையை நிறுத்தினாலும் வெல்லும் என்னும் நம்பிக்கை ஒருகாலத்தில் கொடிகட்டிப் பறந்தது. (அதற்கோர் உதாரணம் காமராசருடைய தேர்தல் தோல்வி. அத்தோல்வியில் வி.வி. ராமசாமி நாடார் என்னும் பெயரில் சுய சாதிப் பகை விளையாடியதுகூடக் கழகத்தின் வெற்றியாகவே கனிந்தது. கழகத்தின் கனபரிமாணத்தைக் கணிக்கத் தவறிய அசட்டு மதர்ப்பிலும் 'தான்' என்னும் அகங்காரத்திலும் 'படுத்துக்கொண்டே ஜெயிப்பேன்' என்று, சிறு விபத்தில் சிக்கிப் படுத்துக்கொண்டே சொன்ன பாவத்துக்கு கடைசிவரை விமோசனம் பெறாமலேயே- அதாவது ஆட்சியதிகாரத்தைத் திரும்பப் பெறாமலேயே கண் மூடினார் அவர்.)

படிப்பகம்

www.padippakam.com



கழுதை தானாகவே வென்றுவிடுவதில்லை. வென்றெடுப்பதற்கான உத்திகளாகக் கழகம் நிகழ்த்திக் காட்டிய சாகசங்களும் கூடவே அகட விகடங்களும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையே. அந்தக் காலகட்டத்தில் எந்தச் செயலிலும் தன் பங்கு தூக்கலாயிருக்க வேண்டும் என்று எண்ணிச் செயல்பட்டவர் கலைஞர்.

'வெற்றி- அது எல்லா விபச்சாரங்களையும் புனிதப்படுத்திவிடும்' என்பது அரசியலின் ஆதிசூத்திரமாயிருக்க வேண்டும். எல்லாக் கட்சிகளுக்கும் அதுதான் தாரக மந்திரம். கழகத்திற்கும் அதுவே கற்பொழுக்கமாயிற்று. உதாரணமாக, திருமலைப் பிள்ளைத் தெருவில் காமராசர் குடியிருந்த வாடகை வீட்டைப் படம் பிடித்து, 'படிக்காத மேதையின்- ஏழை பங்காளரின் பங்களாவைப் பாரீர்' என்று விளம்பரம் செய்தது வெற்றிக்கான விளையாட்டில் அற்ப விஷயம்தான். வெற்றி வாய்ப்பு நழுவும் போலிருந்தால் நம்பகமான ஒரு தொண்டனைக் கொன்று, இரத்த வெள்ளத்தில் மிதக்கும் அவன் பிணத்தை வண்ணச் சுவரொட்டியாக்கி ஒரே நாளில் மக்களைத் தங்கள் பக்கம் சாய்த்துவிடலாம் என்று சினிமாப் படம் எடுக்கும் 'கற்பனை'யே தமிழக அரசியல் தந்த கொடைதான். 'பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லணும்' என்றொரு பொய் விதி உண்டு. அதை எழுத்துப் பிசகாமல் இசைத்துப் பழகியவர்கள் 'தமிழ் வாழ்க' முழக்கத்தினர். நாம் கண்டோமா அந்த முழக்கமே அப்படியொரு பொய்தான் என்று. அது தெரியாமல் நம் வீரியமிக்க பருவத்தையெல்லாம் அதற்குத் தின்னக் கொடுத்தோமே- நினைத்தால் மனசு ஆற மறுக்கிறது.

'கழுதையும் வெல்லும்' என்னும் நம்பிக்கை காலத்தால் நீர்த்துப்போகும் என்றாலும் கலைஞரும் தன் பங்குக்கு நீர் விட்டுப்போன பழஞ் சோறாக்கினார். அடுத்தடுத்த தேர்தல்களில் தொகுதி வேட்பாளராக அத்தொகுதியில் பெரும்பான்மையாக உள்ள சாதிக்காரரை நிறுத்தும் வழக்கத்தை கலைஞரும் எழுதாத சட்டமாக ஏற்றுக்கொண்டுவிட்டார். ஒரு வேளை பெரியாரைப் பின்பற்றுகிற ஒரு வழிமுறையாகவே இதையும்கூட அவர் வியாக்கியானப்படுத்தக் கூடும். தமிழ் மக்களை அவரவர் சாதிச் சங்கங்கள் அமைக்குமாறு பெரியார் கோரியது உண்மை. எதற்காக? சாதிகளோடு கோர்த்

படிப்பகம்

www.padippakam.com



துக்கொண்ட வர்ணாசிரம அடையாளங்களையும், பெயர்களோடு சேர்த்துக்கொண்ட சாதிப் பட்டங்களையும் விட்டொழித்துவிட ஒற்றைக் குரலில் உறுதி ஏற்பதற்காக. ஒவ்வொரு குழுவும் தங்கள் சாதிச் சழக்குகளைப் போக்கிக் கொண்டு மானமும் அறிவுமுள்ள மனிதர்களாக ஒருங்கிணைவதற்காக. ஆனால் தேர்தல் களத்தின் சாதிச் சாய்மானம் அவற்றைக் கூர்மைப்படுத்தவே செய்கிறது; பெரியாரின் நோக்கத்தைக் குழிதோண்டிப் புதைக்கவே செய்துள்ளது.

இந்த சாதிச் சாய்மானத்திலுள்ள அபத்தத்தைப் பரிசீலிக்கும் குறைந்தபட்ச நிதானமும் நேர்மையும் எந்த ஒரு கட்சிக்கும் இல்லை. குறிப்பாகக் கலைஞருக்கும் இல்லை என்பது தான் கவலை தரும் விஷயம். இன்றைய கூட்டணி சகாப்தத்தில் ஒவ்வொரு கட்சியும் தனக்குப் பாதுகாப்பான தொகுதி என்று தேர்வு செய்வதே தங்கள் சாதி ஆதரவாளர்களை நம்பித்தான் என்றாகிவிட்டது.

இந்தச் சாதி அம்சம் வெளிப்படையாகப் பின்பற்றப்படுவதில் கழகத்திற்கு எந்தவித உறுத்தலும் இல்லை. தேர்தல் அரசியலின் பொதுக்குணம் அப்படி. அடிப்படையில் சாதி எதிர்ப்பு இயக்கமாகத்தான் கழகம் களத்திற்கு வந்தது (பின்னர் எப்படி கழுதை ஜெயிக்க முடியும்?) ‘இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?’ என்பது நிச்சயமாக சாதிப்படையைப் பார்த்துச் சொன்னதல்ல. இதைச் சுட்டிக்காட்டினால் காலத்தையும் களத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாத காட்டானாய் நாம் நகைக்கப்படுவோமோ, என்னவோ. புத்தரிலிருந்து பூலே வரை, அயோத்திதாசப் பண்டிதரிலிருந்து அம்பேத்கர் வரை, நாராயணகுருவிலிருந்து பெரியார் வரை எவையெல்லாம் சமூக நீதிகளாகக் கலகக் குரலெடுத்துக் கட்டப்பட்டனவோ, அவையெல்லாம் தேர்தல் களத்தில் அநாகரிகங்களாகிவிடும் எனில், இவர்கள் வென்று நிலைப்படுத்தப் போகும் நாகரிகந்தான் என்ன? சாதி மறுப்பைத் தக்கவைத்துக்கொள்ள முடியாதபோது, கழகத்திற்கும் ஒரு கருமாந்தரக் கட்சிக்கும் என்ன வேறுபாடு?

ஒரு வேட்பாளரின் வெற்றிக்கான பல காரணிகளில் சாதியும் ஒன்று எனினும், உண்மையில் கட்சிதான் இன்னமும் முழுமுதற்காரணியாயிருக்கிறது. இல்லையேல் கட்சி சாராத

படிப்பகம்

www.padippakam.com



சாதி வேட்பாளர்கள் பலர் களத்திற்கு வருவதும் பொதுவாழ்வுக்கேற்ற நற்பெயராலும் நன்னடத்தையாலும் வெற்றி பெறுவதும் சாத்தியப்படும். அப்படி நடந்துவிடாதபடி, கட்சி அரசியல் நம் குடலுக்குள்ளேயே புழுத்த நரகலாய் நம்மை ஆட்டுவிக்கிறது. தேர்தல் வெற்றிகளை அதிகம் நிர்ணயிப்பது கட்சி அரசியல்தான் என்பதற்கு 13ஆம் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளையே சொல்லலாம். பா.ஜ.க. அணியில் அதிகக் கட்சிகள் பங்கெடுத்துக்கொண்டதால் அதிக இடங்களைப் பிடிக்க முடிந்தது –அதாவது அந்தக் கூட்டணி வேட்பாளர் வெல்ல அதிக வாய்ப்பு கிட்டியது. அதே நேரத்தில் காங்கிரஸ் தோல்விக்கு அது மாநிலக் கட்சிகளை இணைத்துக்கொள்வதில் காட்டிய தயக்கமும் அதன் ஒற்றைக் கட்சி ஆட்சிக் கனவும்தான் என்பது வெளிப்படை. மற்றபடி வாஜ்பேயி அலை, சோனியா நிராகரிப்பு என்பதெல்லாம் வேலையற்ற வல்லுநர்களின் ஆய்வுக்கான பொருள்கள்தாம்.

சாதி அரசியல்தான் சர்வ நிச்சய வெற்றிக் காரணி எனில் கலைஞரும் அவர் மனிதர்களும் தேர்தல்களத்திலிருந்து துடைக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் அவரோ நின்றபோதெல்லாம் வென்ற வரலாறு படைத்தவர். அவருடைய அங்கத்தின் அங்கமான ஒரே மருமகன் மாறன், டில்லி ஆட்சி மன்றங்களிலும் அமைச்சரவைகளிலும் கழகம் பங்கு பற்ற வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் அவரே முதல் பங்காளியாக– அவருக்குப் பிறகே அடுத்தவர் எனும் கேள்விக்கப்பாற்பட்ட வரலாறு கண்டவர். இவ்வரலாற்று நிகழ்வுகளுக்குக் கலைஞரின் சாதுரியங்களும் சாகசங்களும் நிறைந்த அரசியல் சாணக்கியத்தனமே காரணம் என்றாலும், அதற்கு உதவுபடியாய் அமைந்திருப்பது தமிழர்களின், சாதி கடந்த, மதம் கடந்த, தன்னலத் தலைமைகளைச் சகித்தேற்கும் தன்மை கொண்ட சுமைதாங்கிப் பண்பும்தான். கலைஞரின் சாணக்கியக் கணப்பில் அது இவ்வாறு தர்க்கப்படக் கூடும்: அதாவது, அரசியல் பங்கேற்பில் அவரவர்க்குரிய சாதி வீதாச்சாரத்தைக் கேட்காமலே அளித்திடக் கூடிய தலைவர் என்னும் நற்பெயரைக் கொண்டே தனக்கும் தன் மனிதர்களுக்குமான அனைத்துத் தரப்பு ஆதரவினையும் தன்னெழுச்சியாக உறுதி செய்துகொள்வது என்பதாக.

கலைஞரிடம் ஒரு குறை சுட்டப்பட்டால் அவர் உடனே தன் அரசியல் பங்காளிகள் செய்ததையெல்லாம் ஆதியோடந்த

படிப்பகம்

www.padippakam.com



மாகப் பட்டியலிட்டு, தன்னை அவரினும் உயர்வாக நியாயப் படுத்திக்கொள்வார். இது ஒரு சாரசரிக்கும் கீழான அரசியல்வாதியின் சாபக்கேடான சறுக்கல் உத்தி. ஒரு வியாக்கியானத்தைத் தேடிக்கொண்டு வீழ்ந்து காட்டும் விளையாட்டு. சுயபதிவுகளை வரலாற்றுக் கண்ணிகளாகக் கோர்க்கத் தெரிந்த ஒருவன் இடைவெளி நிரப்பிகளோடு மல்லுக்கு நின்றால் எப்படியோ, அப்படித்தான் கலைஞரின் பல்முனை நியாயத்தேடல்களும். அவரின் மலின நங்கூரங்களில் இதுவும் ஒன்று.

சமூக அக்கறை சார்ந்த விஷயங்களில் கலைஞர் எவ்வளவு உன்னதமாகச் செயல்பட்டிருக்க முடியும் என்பதற்கு அவரின் இரண்டு சுயபதிவுகள் முன்னுதாரணங்களாய்த் திகழ்கின்றன. ஒன்று, சென்னை மாநகரில் புழக்கத்தில் இருந்த மனிதனை மனிதன் இழுக்கும் கைரிக்ஷாவை ஒழித்தது– மேற்கு வங்கத்தில் உள்ள தொழிலாளர் நலம் பேணும் கம்யூனிஸ்ட் அரசு இன்றுவரை செய்ய மறந்த செயல். மற்றொன்று, பெண்களுக்குச் சொத்துரிமை வழங்குவது. இந்திய அரசுக்கே அப்படியொரு முறையான சட்டம் கொண்டுவர இன்னும் துணிச்சல் வராத விஷயம். இதற்கு முன்பாகவே பெரியாருக்கு நன்றி செலுத்தும் முகமாக, சுயமரியாதை திருமண ஏற்புச் சட்டம் அண்ணா காலத்திலேயே கொண்டுவரப்பட்டது. நடைமுறை சாத்தியப்பாடுகளையும் உறுதி செய்யக்கூடிய இவை போலும் பல நூறு சாதனைகளைக் கலைஞரிடம் எதிர்ப்பார்த்தது நாம் செய்த பாவம் அல்ல. ஆனால் அது அப்படித்தான் ஆகிவிட்டது. ‘உனக்குப் பிடித்த மாதிரியும் போற்றும்படியுமாக நடந்துள்ள ஒன்றிரண்டு செயல்கள் கலைஞர் தன் கட்டுப்பாட்டை மீறிய தருணங்களில் நிகழ்ந்தேறியவை மட்டுமே’ என நமக்கு அறிவுறுத்தப்படுமானால் அது நாம் செய்த பாவம்தானே.

கலைஞருக்கு ‘நீரில் கண்டம்’ என்று கணிக்கும்படியாக காவேரி, வீராணம், சாராயம், கூவம் ஆகிய நான்கும் தமிழ் நாட்டின் விமோசனமற்றுப் போன வரலாற்றுப் பதிவுகளாகி விட்டன. இதில், இன்றைக்கும் சிதறிக் கிடக்கும் வீராணம் குழாய்கள் இனி வரும் யுகங்களைச் சேர்ந்தவர்களுக்குக் காலப் பெட்டகம் போலக் கதை சொல்லக் கூடும். கழகம் ஆட்சிக்கு வந்த புதிதில் கூவத்தின் நாற்றம் குடலைப் பிடுங்குவதாக உணரப்பட்டது. இப்போதும் நாறத்தான் செய்கிறது. ஆனால் காலம் பழகிக்கொள்ளக் கற்றுக் கொடுத்துவிட்டது. தங்கள்

படிப்பகம்

www.padippakam.com



விடிவுக்காகப் போராடும் தலித்துகளைப் பார்த்து, 'காந்தியார் இப்படியா போராடக் கற்றுக் கொடுத்திருக்கிறார்?' என்று கேட்கிறார் கலைஞர். 1971இல் காந்தியாருக்குப் பிரியமான மதுவிலக்கை ஒற்றைவரியில் கைவிட்டாரே, 'இந்தக் குல நாசத் தைச் செய்யாதீர்கள்' என்று கெஞ்சிநின்றாரே ராஜாஜி, அப் போது அந்தப் பொக்கை வாய்க் கிழவர் வெறும் 'விகடன் பத் திரிகை சின்னமாகச்' சிரிப்பு மூட்டியிருப்பார். பொருளியல் ரீதியாகத் 'துணிச்சலான முடிவு' என்று துறை நிபுணர்கள் அதைப் புகழக் கூடும். பொருளை ஆதாரமாக்கிப் பேசுகிற வர்கள் மனிதர்கள் சேதாரப்படுவதைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை- பொருளியல் நிபுணர்களும் சரி, பொருள் வேட்டைக்காரர்களும் சரி. எதற்கும் கால மாற்றத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது சரியானால், வெடிகுண்டுக் கலாச்சார யுகத்தில் வெற்றுக் கையோடு (மாஞ் சோலை- மரணக்களத்தில்) ஊர்வலம் போனவர்களை 'வேல் கம்புகளோடு கலகம் செய்கிறவர்களை எப்படிக் கையாள்வ தென்று எங்களுக்குத் தெரியும்' என்பதாகக் கலைஞர் அச்சு றுத்தியது காந்தியப் பொய்யாகாதா?

எழுபதுகளில் இந்திராவின் துணையோடு காவிரிக்குத் தீர்வு காணக் கழகத்திற்கு கிடைத்த வாய்ப்பு கை நழுவிப்போனது. வி. பி. சிங்கால்கூடத் தீர்க்க முடியாத காவிரிப் பிரச்சினையை வாஜ்பேயி தீர்த்துவிட்டார் என்னும் வெள்ளைப் பொய்யின் பல்லிளிப்பையும் பார்த்தாயிற்று ஒரு காலத்தில் டில்லிக் கெதி ராக தனித் தமிழ்நாடு கோரியதன் மாற்று யோசனையாக, கர்நாடகத்தோடு சகவாழ்வு சாத்தியமில்லை என்பதற்காகவே தனித் தமிழ்நாடு கோரிப் பெற நேரும் போலத் தெரிகிறது தமிழ்நாட்டை ஆண்டவர்கள் மைசூரின் மேல் படையெடுத்து அணையுடைத்து நீர் பெற்ற வரலாறு உண்டுதானே? எந்த நீதிக்கும் நியதிக்கும் பொருந்தி வராத கர்நாடகத்திடமிருந்து எப்படித்தான் நீர் பெறுவதாம்?

எத்தனை காலமாய், எத்தனை ஆழமாய் (அப்துல் லத்தீப் போல) ஒன்றியிருந்தவராயினும் தன்னால் விலக்கப்பட்டுவிட் டாரானால் அவருக்கெதிராக, பொதுக் கருத்தில் அபாண்ட மான பழிகளாகவும் ஆடம்பரமான பொய்களாகவும் தோற்றந் தரும் அவதூறுகளை அவிழ்த்துக் கொட்டுவது கலைஞரின் அர சியல் உத்திகளில் ஒன்று. விலக்கப்பட்டவர் இவரை விழுங்

படிப்பகம்

www.padippakam.com



காதவரை அவர் பெயரைச் சொல்வதே இவருக்குப் பாவம்· விழுங்குபவராய் வளர்ந்துவிட்டால் பழைய நட்பைப் பட்டிய லிட்டுக் காட்டுவது இவரது பழக்கம். எம்ஜியார் இருந்தவரை தன்னால் எழ முடியாது என்பது உறுதியான பிறகு, அந்நிய மண்ணில் நோயாளியாய்ப் படுத்துக் கிடந்த தன் பழைய நண் பரின் ஆட்சியை அவர் திரும்பும் வரை தன் பொறுப்பில் தாங் கத் துடித்தவர்தான் கலைஞர். அதுபோலவே, ஜெயலலிதா வும் இவரின் அரசியல் ரீதியான அழித்தொழிப்பு முயற்சிக்கும் நீதிமன்ற வழக்குகளுக்கும் முகங்கொடுத்து, காலத்தின் கரு ணையால் கரையேறி மீண்டுவிட்டால், தன் பழைய கலையுல கின் பாசமிகு தோழிக்கு வீதி மண்ணெடுத்துச் சுற்றிப்போட்டு 'திட்டி' கழிக்காமல் விட மாட்டார்.

கலைஞரும் வைகோவும் தந்தை–தனயன் வேடங்கட்டி ஆடு வதெல்லாம் வாஜபேயிக்குப் பல்லாண்டு பாடிப் பல்லக்குத் தூக்குவதில் ஒருவரையொருவர் முந்திவிடக் கூடாது என்னும் எச்சரிக்கை உணர்வால்தான். பாம்பைக் கொல்வதைத் தவிர பருந்துக்கும் மயிலுக்கும் வேறென்ன ஒருமை?

வாஜபேயி ஒரு வாக்கியத்தை முடித்து அடுத்த வாக்கியத் தைத் தொடங்குவதற்குள் தேவகௌட ஒரு தூக்கம் போட்டு எழுந்துவிடுவார்; கார்கிலில் நான்கு இந்திய வீரர் மண்ணில் சாய்ந்திருப்பர். அந்த முனைகளில் மரணங்கள் தொடர்ந்து கொண்டிருந்த போதே இந்தியா வெற்றிவிழா கொண்டாடி முடித்துவிட்டது– தேர்தலுக்கான துருப்புச் சீட்டாக. மேஜர் சரவணனின் உடலைத் தேடி எடுத்து அடக்கம் செய்வதற்குக் கூடக் காத்திராமல் திராவிட மாணிக்கங்களான வைகோவும் கலைஞரும் கார்கிலில் வெற்றி பெற்ற வாஜ்பேயிக்குச் சால்வை போர்த்தி (வெற்றித் திலகமிட்டு?) கொண்டாடி மகிழ்ந்தனர். இழவு வீட்டில் இது என்ன பொன்னாடை போர்த்தும் நாகரி கமோ தெரியவில்லை.

வாழ்ந்துகொண்டிருப்பதே விளம்பரத்துக்காகத்தான் என் பது திராவிடக் கலாச்சாரத்தின் இறுதிச் சித்தாந்தமாகிவிடும் போல் தெரிகிறது.

1965இலும் 1971இலும் இந்திய - பாகிஸ்தான் போர்கள் நிகழ்ந்தன. அவை எல்லைப்போர்களும் எல்லையைக் கடந்த போர்களும். அப்போதும்கூட இந்தியா ஒற்றை முகத்தோடு திரண்டு நின்றது. மக்கள் நிதியை வாரி வழங்கினர். இரு

படிப்பகம்

www.padippakam.com



முறையும் இந்தியா வெற்றிப் பெருமிதத்தோடு நிமிர்ந்து நின்றது. அவை ஒன்றும் அமெரிக்கா பாராட்டிய போர்கள் அல்ல. இந்தியாவின் பிரம்மாண்ட பாய்ச்சலைக் கண்டு, தனது ஏழாவது கடற்படையை அனுப்பி அமெரிக்கா குறுக்கிட முயன்ற போர். அன்றும் நாட்டுப் பற்று பெருக்கெடுத்தோடியது. கல்லடிபட்ட நாய் மாதிரி 'காச்மூச்'சென்று கத்திப் பெருக்கப்பட்ட நாட்டுப் பற்றல்ல அது. இந்திய மாண்பினை வெகு கம்பீரமாக வெளிப்படுத்திய நாட்டுப் பற்று. பகைமுடித்துப் பகைவனுக்கருளிய பற்று. ஆனால் இன்று? எதிரிமீது கக்கப்படும் வெறுப்பைக் கொண்டே நாட்டுப்பற்று அளக்கப்படுகிறது. கார்கிலில் நடந்தது கட்டுப்பாட்டுக் கோடு மீறல் பற்றிய சண்டை. இரண்டு நாடுகளுக்கிடையே உள்ளது எல்லைக் கோடு. இரண்டு ஆக்கிரமிப்பாளர்களிடையே போட்டுக்கொள்வதுதான் கட்டுப்பாட்டுக் கோடு. கிரேக்க இதிகாசம் காட்டும் ட்ராய் நகர முற்றுகை மாதிரி ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்கள் கேளிக்கை விடுதிகளில் குடியும் கூத்தியுமாக நிலை மறந்து கிடந்த போது பகைவர்கள் ஊடுருவிவந்து பந்தாடியதைப்போன்ற கதை இது. உண்மையில் தங்களுடைய விழிப்பின்மையால் நானூற்றுக்கும் மேலான படை வீரர்களைப் பலி கொடுத்தமைக்காக ராணுவ நீதிமன்றத்தில் கொலைக் குற்றவாளிகளாக நிறுத்தப்பட வேண்டியவர்கள். அமெரிக்க மாமனின் நற்சான்றைப் பெறுவதற்காக தாம் கவர்ந்த மண்ணுக்குள்ளயே தமக்குச் சவக்குழி வெட்டிக் கொண்டவர்கள். இவர்களை மண் காத்த மறவர்களாகவும் ஆட்சிப் பொறுப்பேற்க அருகதை உள்ளவர்களாகவும் அங்கீகரிக்க முடியும் எனில் அது அரசியல் கட்சிகளாகச் செயல்படும் திருட்டுக் கும்பல்கள் நடைமுறைப்படுத்தும் போக்கிரித்தனமான ஜனநாயக அமைப்பில்தான் சாத்தியப்படும்.

நாடு இவர்கள் கையில்தான் நலமாக இருக்கும் என்கிறார் கலைஞர், தமிழ்நாட்டில் இவர் நலமாக இருப்பதைப்போல. நட்பின் அடையாளம் ஒருவர் நலத்தை மற்றொருவர் உள்கையாக இருந்து வளர்த்துக்கொள்ள உதவுவதுதான்.

பா.ஜ.க. கட்டியமைக்கத் துடிக்கும் இந்தியாவில் மனித மாண்புகளை வேரறுத்து, அவ்விடத்தில் வேதிய மரபெனும் 'புனித' மாண்புகளை வேர் பிடிக்கச் செய்ய உதவும் எவனும் உத்தமன்தான். இதில் பஞ்சமன், சூத்திரன் என்னும் பாகுபாடெல்லாம் பா.ஜ.க.வுக்குக் கிடையாது. இல. கணேசன்

படிப்பகம்

www.padippakam.com



என்னும் செட்டியார் அதற்கு உதவ முடியும் எனில் அவரோடு இணக்கமுள்ள கலைஞரால் மட்டும் முடியாமல் போகுமா?

'ஆ..ஊ..' என்று சிலிர்த்துக்காட்டி, செத்த எலியைக் காலிடுக்கில் பற்றிக்கொண்டு வானத்தில் பறக்கும் பருந்து போலப் பெரியாரின் பெயரைப் பேச்சில் சுமந்துகொண்டு போக்கு காட்டித் திரியும் 'நாத்திக' இந்துக்களை நாம் சுமந்து திரிந்ததையெல்லாம் யார் கணக்கில் சேர்த்தார்கள்!

பா. ஜ. க.வினர் தங்கள் நிலைப்பாட்டில் எப்போதும் உறுதியானவர்கள். காங்கிரசுக் கட்சியினர் தங்கள் அதிகாரப் பசியாலும், 'தான்' என்ற அகந்தையாலும் பல அரசுகளை நூறு முறை கலைத்திருக்கலாம் அதனால் ஏற்பட்டது நிர்வாகத் தேக்கங்கள், பொருள் நட்டங்கள் மட்டுமே. ஆனால் இவர்கள் கலைப்பது- உதாரணமாக, மண்டல் கமிஷன் பரிந்துரை ஏற்புக்காக வி பி சிங் அரசைக் கவிழச் செய்தது -இயல்பு நீதிகளை மறுதளிப்பதற்காக, சமூக மாற்றங்களைக் குற்றங்களாக்குவதற்காக, வரலாற்றுப் போக்கைத் தனதாக்கிக் கொள்வதற்காக. சுதந்திர இந்தியாவில் சிலை வைப்பது ஒரு சின்ன விஷயம். ஆனால் உத்தரப்பிரதேசத்தில் பெரியாருக்குச் சிலை வைக்கும் மாயாவதியின் முயற்சியை முறியடித்து விட்டார்களே. அதே நேரத்தில் வேதியர்களின் வெற்றுச் சடங்கு மொழியைப் பெருமைப்படுத்துவதற்காக ஓர் ஆண்டையே சமஸ்கிருத ஆண்டாக அறிவித்து சடங்கு சம்பிரதாயங்களோடு அரசுப் பணத்தில் நாடு முழுக்க விழா எடுக்கிறார்களே.

அம்பேத்கரின் பிறந்த நாளை தேசிய விடுமுறை நாளாக இவர்கள் அறிவித்த போது நம்மூர் பிரேமா நந்தகுமார் மாமி ரொம்பவும் நொந்துகொண்டார், பாவம் தலித்துகள் இந்த விடுமுறையை வைத்துக்கொண்டு என்ன செய்துவிடப் போகிறார்கள் என்று. ஏதோ ராம நவமி, கிருஷ்ண ஜெயந்தி என்று பார்த்துப்பார்த்துவிடாமல் அம்பேத்கருக்கெல்லாமா விடுமுறை என்று அவருக்கு அப்படியொரு நோக்காடு. பா. ஜ. க. காரர்கள் சும்மா ஒன்றும் விட்டுவிடவில்லை. அம்பேத்கர் இந்தியாவின் ஒற்றைத் தேசியத்தில் நம்பிக்கையுள்ளவர். (அதற்குள்ளேதான் தாழ்த்தப்பட்டவர்களின் கடைத்தேற்றத்தைக் கட்டியெழுப்ப முயன்றார்.) ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களைக் கடுமையாக விமர்சனம் செய்தவர். இவற்றுக்கான தங்கள் மகிழ்ச்சி வெளிப்பாடுதான் அந்த விடுமுறை. முஸ்லிம்

படிப்பகம்

www.padippakam.com



கள் பற்றிய அம்பேத்கரின் அந்த விமர்சனத்தை உருது மொழியில் அச்சிட்டு உத்தரப்பிரதேசத்தில் மீரட் போன்ற பகுதிகளனைத்திலும் பரப்பியவர்களாயிற்றே இந்த பா.ஜ.க.வினர்.

காஷ்மீர் இந்தியாவின் பிரிக்க முடியாத அங்கம் என்னும் பொய்யை மெய்யாக்கும் பொருட்டு அந்நாட்டுக்குத் தனியாக, ஓர் அசலான அரசியல் சட்டம் இருக்கிறது என்னும் உண்மை இந்தியாவின் பாரதீய பரம்பரையினரிடமிருந்து ஏறக்குறைய மறைக்கப்பட்டுவிட்டது. அப்படியும் இந்திய அரசியல் சட்ட 370ஆம் பிரிவு காஷ்மீர் மக்களின் உரிமையை அங்கீகரித்துத் தொலைக்கிறது. ஆகவே அதை அகற்றிவிடுவதன் மூலம் காஷ்மீரிகளின் இன நலனைத் துடைத்துவிடத் துடிக்கிறது பா.ஜ.க. காஷ்மீர் மட்டுமல்லாமல் இந்தியாவின் எல்லா தேசீய இனங்களின் பிரச்சினைகளைப் பற்றியும் பா.ஜ.க.வின் நிலைப்பாடு உலகறிந்த ஒன்று. அதே நிலைப்பாடு கலைஞருக்கும் உகந்ததாகிவிட்டதே அவருடைய புதிய பரிணாமம்; ஒவ்வொரு தமிழனும் புரிந்துகொள்ள வேண்டிய பரிமாணம்.

ஒரு கூட்டத்தில் கலைஞர் பேசுகிறார்:

"ஆங்கிலத்தை அகற்ற வேண்டும் என்றால் தமிழ்நாடு தமிழருக்காக இருக்க வேண்டும். (கை தட்டல்.) என்ன கை தட்டுகிறீர்கள்? பிரிவினை கேட்டால் 10 ஆண்டு சிறைத்தண்டனை. இதற்கு எத்தனை பேர் தயாராயிருக்கிறீர்கள்? பிரிவினை கோரிக்கையை எப்போதோ அண்ணா கைவிட்டு விட்டார். இந்தியா பலமாக இருக்கவேண்டும். (தினமணி, 12 ஜூலை 99)

தமிழை இந்தி ஆதிக்கம் அழித்தால் என்ன; ஆங்கில ஆதிக்கம் அழித்தால் என்ன. இரண்டும் தமிழ்த் தேசியத்தை நசுக்கும் முயற்சிதான். நேதாஜி இயங்கிய அந்தக் காலகட்டத்தில் "இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்தால் 10 ஆண்டு சிறைத் தண்டனை," என்று அச்சுறுத்திப் பல்லாயிரக்கணக்கான தமிழர்களை விடுதலைப்போர்க் கொடுமைகளிலிருந்தும் களப்பலிகளிலிருந்தும் காப்பாற்ற ஒரு கலைஞர் இல்லாமல் போய்விட்டாரே என்று நினைத்தால் நெஞ்சு தழுதழுத்துப் போகிறது. முச்சந்தியில் நின்றுகொண்டு மோடி மஸ்தான் "ஜோரா கைதட்டுங்க" என்று சொல்லி கோக்குமாக்கு வித்தை காட்டுவானே, அதைவிடக் கூறுகெட்ட கண்கட்டு வித்தையாகிவிட்டது கலைஞர் அந்தக் காலத்தில் கைதட்டப் பழக்கிய தனிநாட்டு முழக்கம் தமிழ்நாடு தமிழருக்காக இல்லை என்ப

படிப்பகம்

www.padippakam.com



தையும், அதைத் தனக்காகவும் தன் நிம்மதிக்காகவுமே அவர் ஆண்டுகொண்டிருக்கிறார் என்பதையும் இதைவிட விளக்கமாக வேறெப்படிச் சொல்வது?

கலைஞர் ஆளுகிறார் என்பதே தமிழ்நாட்டில் நிலவரம் ஒன்றும் சீர்பெற்று விடவில்லை என்பதற்கான ஆதாரமாகி விடக்கூடாது என்பதே நம் ஆதங்கம். சரி, ஆனால்தான் என்ன? கலைஞர் தன்னை 'மெள்ள மெள்ள வெள்ளாளன் ஆன' கதையாய் ஒரு பசையுள்ள 'பனியா'வாக உயர்த்திக் கொண்டுவிட்டார். பார்ப்பனர்களும் பனியாக்களும்தான் ஏகத்துவத்தின் கர்த்தாக்கள். அதுவே அவர்களின் இருத்தல் விதி.

தேர்தல் அரசியலுக்குள் நுழைந்தகாலத்தில் தி.மு.கழகம் 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்றே விழுந்து கும்பிட்டது. இப்போது கலைஞர் 'ஒரே நாடு, ஒரே கலாச்சாரம்' என்னும் ஞான ஒளியைக் கண்ணில் ஒற்றிக்கொள்ளும் நல்ல பனியாவாகியுள்ளார். (வணிகர் என்று தமிழிலோ வைஸ்யா என்று வர்ணாஸ்ரமப்படியிலோ அவரைச் சுட்ட விரும்பவில்லை. தமிழில் 'கொள்வதூஉம் நிறைகொளாது கொடுப்பதூஉம் குறை கொடாது' என்பது வணிகமாம். கலைஞர் அந்த வகை வணிகரல்லர். அதே நேரத்தில் அவர் என்னதான் சீமான்களுக்குரிய 'பங்குத் தந்தை'யாகிவிட்டாலும், அடிப்படையில் திருக்குவளை சூத்திரக்குளத்து மண்ணால் வனையப்பட்ட சத்சூத்திரப் பாண்டம்தான் என்பதும், அவருடைய எந்த ஜனநாயகக் கூட்டணி முயற்சியும் அதை மாற்றிவிட முடியாது என்பதும் இந்தியக் குடிமகனுக்கு பா. ஜ. க. வழங்கும் உத்தரவாதம்.)

கழக அரசுகள் தங்கள் முடிவில்லாத தேடல்களாக மலினங்களைத் தொகுத்துத் தம் அலங்காரக் குஞ்சங்களாகப் பூட்டிக் கொண்ட விந்தை, தமிழ்க் களனில் எழுதப்படக்கூடிய இந்நூற்றாண்டின் மகத்தான நாவலுக்குரிய செறிவான அத்தியாயங்களாய் இருக்கக் கூடும். இதன் மூலப்புள்ளி, மலினங்களில் உழன்று புனிதங்களைச் சுவாசிப்பதாகச் சொல்லும் திரைத்துறையோடு கழகத் தலைமைகளுக்கிருந்த தொடுப்புதான் என 'புனிதச்' சனாதனிகள் தொடக்க காலத்தில் சொன்னதுண்டு. ஆனாலும் அது மலினமான மதிப்பீடு. போக்கிரிகளின் ஆளுகைக்கு நடைபாவடை விரித்தவர்கள், 'அரசியல் - போக்கிரிகளின் புகலிடம்' என்று புலம்புவது போன்ற குற்றச்சாட்டு. குடி

படிப்பகம்

www.padippakam.com



நீர்க் குளத்தில் எருமைகளை இறக்கிவிட்டுவிட்டு, குளத்தை விலக்குவது போன்றதொரு கோமாளித்தனம்.

அரசியல்வாதியாக அல்லாமல், முன்னுதாரணமான ஒரு நயத்தக்க மனிதராய்க் கலைஞர் என்னைக் கவர்ந்த ஒரு சந்தர்ப்பம் உண்டு. 1970களில் கழக ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. மிசா கைதுகளும் காவல்துறையின் கொடிய தாக்குதல்களும் பிளேக் நோய் மாதிரி பரவிக்கிடக்கின்றன. ஊழல் குற்றச்சாட்டுகள் ஓங்கி ஒலிக்கின்றன. சர்க்காரியா கமிஷனின் விசாரணை முடுக்கிவிடப்படுகிறது. கழக ஆட்சியில் நடந்ததாகத் தொகுக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குற்றங்களாகவே கருதப்படும் கொடுஞ் சூழல். மௌனம் வந்து கவிந்த சந்தைத் திடல் மாதிரி உயிர்ப்பொடுங்கிய புழுக்கம். எந்தத்திக்கிலும் செயல்பட முடியாத கட்டுக்குண்டான முடக்கம்.

ஒரு நீண்ட தொலைதலுக்குப் பின்னர், இராயபுரத்திலுள்ள இராஜரத்தின நாயக்கர் திருமணமண்டபத்தில் நடந்த உள்ளரங்கக் கூட்டத்தில் கலைஞர் கலந்துகொண்டார். நீர் வற்றினாற்போன்ற அந்த முகமும் அவர்மீது மேவி நின்ற பாசச்சூழலும் இப்போது நினைத்தால் நிலவில் மங்கிய பனிக்கனவைப் போல மனம் சிலிர்த்தோடிய யுகத்துக்கப்பாலாய் தெரிகின்றன.

கலைஞர் கனத்த குரலில் சொன்னார்: "உயிரை மாய்த்துக்கொண்டு விடலாம் என்று மனந்துணித்தேன். நம் கழக உடன்பிறப்புகளை நெஞ்சில் நிறுத்தி அந்த எண்ணத்தினை ஒதுக்கினேன்." (சொற்கள் கட்டுரையாளர் நினைவிலிருந்து.)

அந்தக் குரலில் கசிந்துருகிய நாண உணர்வு என்னை அடித்துப் போட்டது. அந்த நாணம்தான் மனிதர்களின் கவசம். மனிதன் அழிச்சாட்டியக்காரனாகவும் ஆதிக்கவாதியாகவும் மாறிவிட்டதற்கு அடையாளம் அக் கவசத்தைக் களைந்து விடுவதுதான் கலைஞர் களைந்துவிட்டார்தானே.

ஜெயலலிதாவிடம் அதுபோன்றதொரு நாண உணர்வு நாமறிந்த வரை தலையெடுக்கவில்லை என்பதுதான் என்னைப் பாதித்த விஷயமே தவிர, மற்றபடி கலைஞர் உத்தமர், ஜெயலலிதா ஊழல்பேர்வழி என்பதெல்லாம் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் சொல் விளையாட்டுகள்தாம்.

படிப்பகம்

www.padippakam.com



கலைஞர் ஆட்சிக்கு வந்த புதிதில் 72 மணி நேர வேலை 24 மணி நேரத்தில் செய்யப்படுவதாக ஒரு பிரமிப்பு தட்டும். எப்போது கோப்புகள் பார்க்கிறார், எப்போது தன்மேல் வீசப் படும் குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பறிக்கை எழுதுகிறார், எப் போது மகிழ்கிறார், துயில்கிறார் என்பது யார் கணக்கிலும் அடங்காத புதிர். அப்படியோர் அசுரவேகமும் கடின உழைப் பும் வீணுக்கோ விரயத்துக்கோ அல்லதானே.

அந்தக் காலகட்டத்தில்தான், செயல்படும் அரசில் அரசி யல் ஒரு லாபகரமான தொழில் என்று ஐயத்துக்கிடமின்றி மெய்ப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் செயல்படாத அரசி லும்கூட அப்படித்தான் என அது புதுப்பரிணாமம் பெற்றது.

இந்த மாநிலத்தை 'அரசர்' (பனகல்) ஆண்டிருக்கிறார். பெரும் நிலக்கிழாரான பக்தவத்சலம் ஆண்டிருக்கிறார். நாலு முழ வேட்டி, முக்கால் கை சட்டை, மேலே ஒரு துண்டு எனக் கட்டிய துணியோடு மட்டுமே கருகருவென்று உயர்ந்து நின்ற காமராசர் ஆண்டிருக்கிறார். ஆட்சி அவர்களைக் கௌரவித் திருக்கலாமே தவிர, அதன்மூலம் அவர்கள் புதிய பொருளா தார உச்சங்களைப் பெற்றதாகத் தெரியவில்லை.

அவர்களுக்குப் பிறகு இன்றைக்கு கலைஞர் என்னும் சாமானியர் ஆண்டு கொண்டிருக்கிறார். அதிர்ஷ்டவசமாக இந்தச் சாமானியருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்குந்தானே இந்தியாவின் தலையாய செல்வந்தர்களின் பெயர்ப் பட்டியலில் கண்ணியமான இடம் கிடைத்தது. இந்த அதிர்ஷ்டத்துக்குப் பெயர் என்ன? (சன் டி. வி. வாணிகமெல்லாம் நேற்று வந்த சமாச்சாரம்.)

எட்டிக் கொட்டையைச் சின்னச்சின்னத் துண்டுகளாக்கி, நாளும் ஒரு துண்டை விழுங்கினால் எதையும் தாங்கும் வைர மாகிவிடுமாம் உடம்பு. கலைஞர் அப்படித் தன்னை அறிவியல் ரீதியாக வைரமாக்கிக் கொண்டிருக்கக் கூடும். அப்படியல்லா மல் முழுக் கொட்டையையும் ஒரே விழுங்காய்ப் போட்டுக் கொண்டால் உயிருக்கே ஊறு நேர்ந்துவிடலாமாம். ஜெயல லிதா அப்படியொரு சிக்கலில் வகைதொகையில்லாமல் சிக்கிக் கொண்டுவிட்டவர். தனக்கொரு ஆபத்தென்றால் அதிலிருந்து தப்பிக்க வழி தேடுவதுதான் உயிரினங்களின் முதல் வேலை.

படிப்பகம்

www.padippakam.com



அதற்கு ஜெயலலிதா மட்டும் விதிவிலக்கல்ல. கலைஞருக்கு நேர்ந்தபோது அவரும் அதைத்தான் செய்தார். செய்தமுறைகள் வேண்டுமானால் வேறுபடலாம். நேற்றுவரை நடந்த ஜெயலலிதாவின் மீட்சிக்கான செயல்பாடுகள் மெய்யாகவே வியப்புக்குரிய தனித்துவமானவை.

'நான் தோற்கமாட்டேன்' என்னும் மூர்க்கத்தோடு அவர் தன் மீட்சிக்காகச் சிலிர்த்த சிலிர்ப்பு, 'அம்பலத்தில் கொம்பு முளைத்தவர்களாகக் காட்டிக் கொள்ளும் எல்லா அரசியல் காமுகர்களும் அந்தரங்கத்தில் வெறும் நக்கிப் பண்டாரங்கள் தாம்; எந்த அவமானங்களோடும் சமரசம் செய்து கொள்கிற அமுக்குப் பிண்டங்கள்தாம்' என்பதை சந்தேகத்துக்கிடமின்றி மெய்ப்பித்து, ஒவ்வொரு சித்தாந்த முகத்தையும் குறுக்கு வெட்டாகப் பிளந்து போட்டுக் குப்பையாக்கிக் காட்ட அவருக்குக் கிடைத்த வாய்ப்பாகத்தான் அமைந்துள்ளது.

அதைவிடவும் முக்கியமாக, நிகழ்களத்தில் இந்தியாவின் ஆளுங்கட்சிகளான பா. ஜ. க., காங்கிரஸ் என்னும் இரு பெரும் அரசியல் கூடாரங்களின் கழிசடை மாண்புகளை ஒரு சேர அம்பலப்படுத்திய சிறப்பு ஜெயலலிதாவுக்கு உண்டு.

'வெல்ல வேண்டும்; வீழ்வதென்றாலும் வீழ்ச்சி மகத்தானதாய் இருக்க வேண்டும்' என்பதாக அவர் படைத்துக் காட்டியுள்ள சாத்தானிய பிரமாண்டம் கலைஞரிடமிருந்து அவர் கற்றுக்கொள்ளாத அவருக்கே உரிய கம்பீரம்.

'சாத்தான் கடவுளுக்கு எதிரானவன் மட்டுமல்ல, நிகரானவனும்கூட' என்பது ஜெயலலிதா கற்றுத்தரும் பாடம்.

ஒரு விஷயம் நம்மை வியக்க வைக்கிறது. அவர் தனது இருப்பிடத்திலிருந்து யாரைத் தேடியும் (போகத் தெரிந்தவர் தான் என்றாலும்) போவதில்லை. யாருக்கெல்லாம் அவரது உதவி தேவையாயிருக்கிறதோ, அவர்கள்தாம் அவரைத் தேடிப் போகிறார்கள். இந்தத் தீர்மானமான ஆளுமையில் அவரது தன்னலம் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்குமானால் தமிழகமே அதற்காகப் பெருமை கொள்ளலாம்தான்.

—இதன் தொடர்ச்சி 73ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

ஒரு கடிதம்

# தலித் அரங்கியல் தீண்டத்தகாததா?

முனைவர் கரு. அழ. குணசேகரன்

கவிதாசரண் ஆகஸ்ட்–செப்டம்பர் 1999 படித்தேன். சாகித்ய அகாதமி எழுத்தாளர் சா. கந்தசாமிக்குப் பாராட்டும் மறைந்த மக்கள் கவிஞர் கே. சி. எஸ். அருணாசலத்திற்கு அஞ்சலியும் செய்திருந்தது மகிழ்ச்சி.

நாடகம் குறித்து பக்–24 முதல் 38 வரை எழுதப்பட்டிருந்தது. இராமானுஜர் நாடகம் குறித்த விவாதம் வீ. அரசு, இந்திரா பார்த்த சாரதி ஆகியோரால் செய்யப்பட்டதுடன், கவிதாசரணும் தன் பங்குக்கு எழுதியிருந்தது. இந்த் வாசிப்பில் நான் நந்தன் – பறை என்றெல்லாம் வாசிக்க நேரிட்டபோது சுற்றுச் சுவர் எழுப்பப்பட்டு உயர்ந்த கோபுரங்கள் கொண்டு பெரிய வாசலையும் வைத்திருக்கும் கோவில்களுக்குள் செல்ல எனக்கு விதிக்கப்பட்ட தடைகளைப்போலவே நான் வாசிப்பின் போது வெளியேற்றபடத்தக்கதாய் அமைந்திருந்தது.

தமிழகச் சூழலில் தலித் நாடகம் என அறியப்பட்டுள்ள பலி ஆடுகள் என்ற நாடகத்தினை நிறப்பிரிகை இதழ் வெளியிட்டிருந்தது. தொடர்ந்து ஊர் கூடி, மண்ணிலிருந்து பாறையைப் பிளந்துகொண்டு. . என்று பல தலித் நாடகங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. மேலும், 'தலித் அரங்கியல்' என ஒரு நூலும் கீழைக் காற்றுப் பதிப்பக வெளியீடாக வந்துள்ளது.

அண்மையில், சச்சிதானந்தம் அவர்கள் பொறுப்பேற்றிருக்கும் இந்தியன் லிட்டரேச்சர் எனும் இதழில் "தலித் தியேட்டர்ஸ் இன் இன்டியா" எனும் ஒரு கட்டுரை எழுத உள்ள

படிப்பகம்

www.padippakam.com



தாகவும், அக்கட்டுரை எழுத நான் எழுதிய பலிஆடுகள் நாடகப் பிரதி, தலித் அரங்கியல் நூல் மற்றும் இவ்வாண்டில் கோழிக்கோடு பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத் துறை நடத்திய தலித் இலக்கியம் (தலித் தியேட்டர்) குறித்து கருத்தரங்கில் நான் படித்த தமிழ் இலக்கியங்களில் தலித் அரங்கியற் கூறுகள் எனும் ஆய்வுக்கட்டுரை ஆகியவற்றை அனுப்பிவைக்கக் கேட்டிருந்தார். நானும் அனுப்பி வைத்துள்ளேன்.

பல்கலைக் கழகச் செலவில் ஐரோப்பிய நாடுகளுக்குக் கடந்த 1½ மாதங்களாகக் கல்வியியல் குறித்துப் பயணம் மேற்கொண்டு திரும்பியுள்ளேன். அங்கே புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடையே நான் எழுதிய தலித் அரங்கியல் நூல் பலரது கைகளில் இருக்கக் கண்டேன். 'பலிஆடுகள்' நாடகம் ஏன் இன்னும் வெளியாகவில்லை எனக் கேட்டனர். NCBHஇல் 4 ஆண்டுகளாய் பதிப்புச் செய்யாது அடைகாத்துவரும் செய்தியறிந்து தலித் அல்லாத தமிழ் இலக்கிய நண்பர்கள் (மனோ– அம்மா இதாழாசிரியர்) பிரான்சு– தாயகரன், கணேசமூர்த்தி எனும் தமிழரசன் (பெர்லின்) தில்லை நடேசன், தி. சாம்சன், கே. ஜெயக்குமார், கிளி ப்ரேம்குமார், ஆர்.ஆனந்தகிருஷ்ணன் இணைந்து ரூ.8000/– நிதியும் தந்தனர்.

இவ்வளவு தேடலும், அக்கறையும் கொண்டுள்ள இவர்களையும், எண்ணிப் பார்க்கிறேன். தமிழ்ச் சூழலில் அரங்கியல் குறித்துப் பேசி செயற்பட்டுவரும் நம்மவர்களையும் எண்ணிப் பார்க்கிறேன்.

முனைவர் மு. ராமசாமி அவர்களது ஒரு அழைப்பிதழை இரு நாட்கள் முன்புதான் தாயகம் வந்து கண்டேன். அதில் ஆதி திராவிடர் நாடக அரங்குத் திட்டம் ஒன்று, அவர் தலைமை தாங்கியுள்ள பல்கலைக்கழக நாடகத் துறையில் தொடங்குவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. தலித் அரங்கியல் என்பதை கடந்த 10 ஆண்டுகளாய் செயலாக்க ரீதியில் பல நாடகங்கள் அரங்கேற்றமும் செய்து தமிழ்ச் சூழலில் முன்வைத்துள்ளோம் என்பதை மனதில் வைத்து 'ஆதிதிராவிட நாடக அரங்கம்' என்ற சொல்லோடு எனக்கு உடன்பாடில்லை என்று அவருக்கு நேற்று எழுதியுள்ள கடிதத்தில் எழுதி இது குறித்து விவாதிக்க உள்ளேன் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

நாடகம் குறித்து வெளிவரும் இதழான நாடகவெளியின் பதிப்பான நூலொன்றில் பல நாடகங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பலி ஆடுகள் நாடகம் அத்தொகுப்பில் இல்லை என்பதல்ல,

படிப்பகம்

www.padippakam.com



அண்மைக் காலங்களில் டாக்டர் ஜீவா, பிரேம், செம்மணி கலைக் குழு போன்றவர்கள் மற்றும் தலித் இயக்கங்கள், பல தன்னார்வக் குழுக்கள் தமிழகத்தின் பட்டி தொட்டிகளெங்கும் தலித் நாடகங் களை நடத்தி வருகின்றனர். இவர்களது நாடகப் பிரதிகளில் ஒன்றேனும்.. நாடகவெளி வெளியிட்டுள்ள நாடகத் தொகுப்புக ளில் வெளிவரவில்லை.

'தலித் அரங்கியல்' என்பதோடு உடன்படவேண்டும் என்ப தல்ல. மாறாக இது பற்றிய விவாதத்தைக் கூடச் செய்யாது புறக் கணிக்கும் சூழலை எவ்விதம் எண்ணிப் பார்ப்பது. உலக அள வில் Depressed Theatre – ஒடுக்கப்பட்டோர் அரங்கியல் என்றும் Black Theatre – கருப்பின மக்கள் அரங்கியல் என்றும் பேசப்பட்டி ருக்கும் சூழலில் தலித் அரங்கியல் குறித்து நமது நாடகக்காரர்கள் பேசாது இருப்பது ஒரு தனித்த அரசியலாகவே படுகிறது.

Sanskrit Theatre – சமஸ்கிருத நாடக அரங்கு குறித்து நம்ம வர்கள் பேசுகிறார்கள். தூத கடோத்கஜன் நாடகம் போடுகிறார் கள். சமஸ்கிருத நாடகக்காரர்களான காளிதாசன், பாபெரி, பவ பூதி போன்றோரது நாடகங்களை உலகத் தமிழாராய்ச்சி நிறுவ னமும் National Book Trust போன்ற நிறுவனங்களும் வெளியிட்டு வருகின்றன. ஒடுக்கப்பட்டோர் சார்பில் முன் வைக்கப்பட்டுள்ள தலித் அரங்கியல் ஆதிக்கச் சாதியினரின் நாடகப் பிரதிகளுக்கு மாற்றாக முன்வைக்கப்பட்டுள்ளது. அரங்கியல் கோட்பாடுகள் குறித்து மேலை நாடுகளின் நாடகக் கோட்பாடுகள், நடிப்பியல் கோட்பாடு, நாடக இயக்க முறை (DIRECTION)மைக் கோட்பாடு ஆகியவை குறித்தும் பரவலாகப் பேசிவரும் நம் நாடகக்காரர் கள் தலித் அரங்கியல் குறித்துப் புதிதாய் முன்வைக்கப்பட்டுள்ள தலித் அரங்கியல் கோட்பாடு குறித்து வாய்மூடி பௌனிகளாயிருப் பது குறித்து ஐயம் கொள்ள வேண்டியுள்ளது.

தலித் கவிதைகள், தலித் கதைகள், தலித் நாடகங்கள் என் றெல்லாம் பேசப்பட்டு வரும் சூழலில் தலித் அரங்கியல் குறித்து மட்டும் தீண்டாமை கடைபிடிப்பது ஏன் எனக் கேள்வியை முன் வைக்க வேண்டியுள்ளது. இக்கேள்வியில் பல கேள்விகள் தொட ரும். தொட்டாலே தீட்டு, பார்த்தாலே தீட்டு எனும் தீண்டாமை இன்று இல்லை. அதனால் தீண்டாமை இந்தியாவில் இல்லை என பத்தாம் பசலித்தனமாய் நம்பிட வேண்டியதில்லை.

புதிய பார்ப்பனிய சக்திகள் விளைவித்துள்ள "Neo-Untoucha bility" – புதிய தீண்டாமைக் கொள்கைகளைப்" புரிந்து கொள்

படிப்பகம்

www.padippakam.com



ளத் தவறக்கூடாது. தலித் அரங்கியல் குறித்த முன்வைப்பில் பாராமுகம் கொள்வது சரியல்ல. புதிய தீண்டாமையைக் கடைப் பிடிக்கும் நாடகக்காரர்களின் படைப்புகளையும், எழுத்துக்களை யும் நடிப்புகளையும் சந்தேகிக்க வேண்டியவர்களாக உள்ளோம். மேலும் அவர்களது செயற்பாடுகளை விமர்சன ரீதியிலும் பல தளங்களிலும், எதிர்க்க வேண்டியவர்களாகவும் உள்ளோம். ஒடுக் கப்பட்டோரது விடுதலை போராட்டமல் இல்லை என டாக்டர் அம் பேத்கர் அவர்கள் சொல்லி வைத்துள்ள கருத்தை தலித்துகள் மிக வும் கவனமாக மனங்கொண்டு செயற்பட்டு வருகிறார்கள்.

இதுவரையிலும் எழுதிக் குவித்துள்ள மேடைகளில் அரங்கேற்றி யுள்ள நாடகப் பிரதிகள் செய்தோரையும் (நாடகப் பிரதிகளையும்) நாடக நடிகர்களையும், நாடகக்காரர்களையும் எங்களுக்கான வையை எங்கே புதைத்துள்ளீர்கள் எனும் கேள்விகளை முன் வைத் துக் களத்தில் இறங்கிவிட்டோம்.

தோழமை கொள்வோர் வாருங்கள். தலித்துகளின் தலை மையை ஏற்போரே வாருங்கள். தலித் அரங்கில் எங்கள் சொற் கள், நையாண்டி முறைமைகள், பெருங்கதையாடலுக்கு எதிரான முன்வைப்புகள், எங்கள் கருத்த மேனிகள் பேசும் மண் தோய்ந்த மொழிகள், ஆதிக்க சாதிகளைக் கேள்விக்குள்ளாக்கும் கேள்விகள் வரும். 'மாற்று அரங்கம்' என 'தலித் அரங்கு' களமிறங்கும். ●

**ஆசிரியர் குறிப்பு:** நண்பர் குணசேகரன் சரியான நேரத்தில் சரி யான அறைகூவலை விடுத்திருக்கிறார். கவிதாசரண் அதற்குத் தொடர்ந்து களம் அமைத்துக்கொடுக்கக் காத்திருக்கிறது.

தலித்தியம் பற்றித் தொடர்ந்து பேசுவோர் ஆசாரத்திற்காகவோ, அல்லது உபசாரத்திற்காகவோ பேசவில்லை என்றே கவிதாசரண் நம்புகிறது. ஆயினும் தலித் அரங்கியல் பற்றித் தமிழ்ச் சூழலில் உறைந்துகிடக்கும் மௌனத்தைக் குணசேகரன் சுட்டிக் காட்டும் போது நமக்குத் திகைப்பாகத்தான் இருக்கிறது. இந்தியச் சமுதா யத்தில் தலித் பிரச்சினையானது தலித் அல்லாதவர்களில் 99 சத வீதம் பேருக்கு இன்னமும் அந்நியமான, உணர்வில் உறுத்தாத விஷயமாய்த்தான் இருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்றுதானோ என மனம் மறுகுகிறது.

விரைவில் **கவிதாசரண் இலக்கிய வட்டம்** சார்பில் தலித் அரங்கியல் பற்றிய கூட்டு விவாதத்துக்கு ஏற்பாடு செய்வோம்– நண்பர் குண சேகரனின் ஒத்துழைப்போடு.

படிப்பகம்

www.padippakam.com





அவள் கைகளில் கண்ணாடி வளையல். உடைந்த கண்ணாடி வளையல்களைத் துண்டு துண்டாகச் சேர்த்து, கழுத்தில் சரமாகப் போட்டிருந்தாள். அது அந்நாளைய வழக்கம். முன்னம் காலத்தில் கல்யாணம் மூன்று நாள், ஏழு நாள் நடக்கும். மூன்றாவது நாள் அலங்கரித்த பல்லக்கில் ஏறி மாப்பிள்ளையும் பெண்ணும் 'பட்டணப் பிரவேசம்' போவார்கள். பட்டிணம் என்று சொல்வது அந்த குக்கிராமத்தை. கோயில் தேரில் தொங்கும் தொம்பைகள் போல் பல்லக்கில் நான்கு பக்கமும் கண்ணாடிப் பாசிகளால் அலங்கரித்த தொம்பைகள். மாட்டு வண்டிக்கு மேல் பல்லக்கு ஆரோகணித்திருக்கும். மேடு பள்ளம் நொடிகளில் வண்டி கடக்கும் போது, 'ஜல்' என்ற இனிய நாதம் கேட்க சிறுவர்கள் காத்திருப்பார்கள்.

'ஜல்' சத்தத்துடன் உதிரும் பாசி மணிகளையும் கோர்த்து அந்தச் சிறுமி கழுத்தில் தொங்கவிட்டிருந்தாள். விறகுச்சிலும்புகளாய் எண்ணெய் ஈரம் காணாத தலைமுடி. கழுத்துக்கும் இடுப்புக்கும் நடுவே மேல்சட்டை இல்லாத வெற்றிடம். ஒன்றரைக் கண்

கரிசல் குளம் எல்லை தாண்டி, மந்தைப் புஞ்சையில் காலடி வைத்ததும் பாவாடை கட்டிய அந்த ஒன்றரைக் கண் கேட்டது:

''நீ என்ன வர்ணம்?''

கரிசல் குளத்தில் இறங்கி எங்கள் ஊருக்கு பதினோரு கி.மீ. நடக்கவேண்டும். ஒரே வால். இடையில் ஊர் எதுவும் தேடித்தேடிப் பார்த்தாலும் இல்லை. கரிசல் காங்கை வீசியது.

அப்போது பன்னிரண்டு வயது; எனக்குப் புரியவில்லை.

''நீ என்ன சாதின்னு கேட்கிறேனில்லே?''

படிப்பகம்

www.padippakam.com



உனக்கு எதற்கு சொல்ல வேண்டும் என்பது போல் எட்டு வைத்து நடந்தேன்.

கருக்கு அழியாமல் ஞாபகத்தில் தங்கிவிட்ட அந்தக் காட்சி இன்னும் இங்கே தங்கிவிட்ட சாதிகளைக் குற்றம் சொல்கிறது. சாதி, மதம் என்ற எல்லா குதிரைகளின் லகானும் மனிதன் கையில் பிடித்திருக்க, இவன் சவாரி செய்வது போய், இவன் மீது சவாரி செய்கின்றன இந்தக் குதிரைகள்.

★

ஒட்டப்பிடார்த்தில் கவிஞர் இளசை அருணாவின் 'ஒரு கவிஞன் சொன்ன கதைகள்' நூல் வெளியீட்டு விழா. 1996.

இளசை அருணாவின் அந்த அழைப்பிதழ் கிடைத்தபோது, சென்னையில் மழைக்குப் பதிலாய் இடி பெய்து கொண்டிருந்தது. இரவு 9 மணி முதல் 11 வரை அலை அலையாக நிரை பிடித்தது போல் ஒரு முனையிலிருந்து இடித்து இடித்து மறுமுனை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. மின்சாரம் அறுந்து, விளக்குகள் செத்து, இருண்ட பூமியில் மஞ்சள் சாரை போல் இடிகள். கண்ணைக் கெடுக்கும் வெள்ளை நிறம் இல்லை. இயற்கை இது வரை ஆடாத தாண்டவம். மக்களுக்கு உயிர் மீதான பயம் வந்தது.

அதே நேரம்-

வரலாற்றை மாற்றி எழுதுவதற்காக, வீரம் விளைந்த உயிர்கள் விதைத்த நெல்லையில் சாதிய இடி இடித்து; வீதி வீதியாக மனிதர்களை வெட்டி வீழ்த்தி ஓடிக்கொண்டிருந்தார்கள். பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்திடப் பிறந்த பாரதி பிறந்த பூமி; பரலி. சு. நெல்லையப்பர் நடந்த மண்;

''பஞ்சமும் நோயும்நின் மெய்யடியார்க்கோ,
பாரினில் மேன்மைகள் வேரினி யார்க்கோ''

என்று பதைபதைத்து, ஈரல் குலை துடி துடித்து, செக்கிழுத்துச் செக்கிழுத்து, செத்துச் செத்துச் சுண்ணாம்பாகிய வ. உ. சி. என்ற புயல் பயின்ற சீமை-

''வா மக்னே'' என்று வாஞ்ஞசையோடு நெஞ்சைத் தடவினால், வயிற்றிலிருப்பதையும் கக்கிக் கொடுக்கிற வஞ்சகமில்லாத மக்கள்-

சாதிய அரிவாள்களால், பட்டாக் கத்திகளால் சீவி எரியப்படுகிற போது பாரதியை, பரலி நெல்லையப்பரை, வ.உ.சி.யை அவர்

படிப்பகம்

www.padippakam.com



களின் தலைக்குள் பிரவாகமெடுத்த புனல்களை ஆழப்புதைத்து, அதன் மீது நடந்து சாதிவெறி சன்னதம் கொண்டு ஆடுகிறது.

மனிதம் பற்றிய சந்தேகம் வந்தது. உருப்படியாய் ஒட்டப்பிடாரம் போய்ச் சேருவோமா என்ற மரண பய முற்றுகைக்குப் பாத்திரமானேன்.

என் மக்கள், என் சமூகம் என்று சொன்னாலே, அது பொதுக் குணாம்சத்தில் சொல்லப்படுவதாக இல்லை. சாதியச் சொல்லாகக் குறுக்கப்பட்டுவிட்டது. காயடிக்கப்பட்ட சொல். அதற்குள் எதுவும் விளையாது. ரத்தமும் தலையும் முண்டங்களும் மட்டுமே விளையும்.

மணியாச்சி நிலையத்தில் ரயில் மறிப்பு. இனி ரயில் போகாது என்றார்கள். கண் எதிரிலேயே ரத்தக் கவிச்சி கேட்ட அரிவாள்கள். மூக்கு நுனிதொட்டு பிண வாசனை. காது மடல் அடியில் கேட்கும் ஒப்பாரி.

இனி ரயில் அசையாது. இறங்கி காலாற நடந்து வரலாம் என நடந்தேன். ‘போகாதிய, போகாதிய.’

தூத்துக்குடித் தமிழ் என் காதில் அறைந்தது.

சதைச்சி எடுக்கப்பட்ட மனசுக்கு நடப்பதைத் தவிர வேற என்ன ஆறுதல்?

கண்கள் எட்டிய இடத்தில் புதிதாக வரிசையாய் புதைக்கப்பட்ட மண் மேடுகள். இன்னும் புது மண் வாசனை அழிபடவில்லை. இடைவெளிகள் தெரிந்தன.

இந்த இடைவெளிகள் யாருக்காக?

இனி எனக்காகவா?

மரணக் காங்கை வீசுகிற கரிசலில், கொஞ்சம் மண்ணெடுத்து முகர்ந்தேன். ரத்த வாடை.

மனித நெறிகளின் விளிம்புகளுக்கு அப்பால் புரண்ட, அந்தக் கோரங்களை ஒரு கவிதையாக்கித்தான் தூர வீச முடிந்தது.

அவன் ஒருவன்.
வந்தவர் பலர்.

படிப்பகம்

www.padippakam.com



கர்ப்பவதியாய்
அசைந்தது காற்று.
அத்துவானக் காட்டில்
அழுதது நிலா.

ஈசான மூலை
இருண்டு இருண்டு
மைக்கூடாய்க் கறுத்தது
மேகம்.

"எங்கிருந்தடா நீ?"
எதிர்வந்தவர் கேட்டனர்.
வாதுசூதறியா வெள்ளந்தி
வந்த ஊர் காட்டினான்.

"பள்ளர்புரமா நீ?
பழி எடுங்கடா அவனை."
தலைமேல் உயர்ந்த மரணத்தை
அடையாளம் கண்டு, அலறினான்
"அண்ணே நா நம்ம சாதி"
கேட்பதற்கு இல்லை மனித சாதி.

இரவு முழுதும் பெய்கிறது மழை.
மீண்டும் பகலிலும்.
வெட்டரிவாளுக்கு மழையா வெயிலா?
தண்ணீரின் நிறம் சிவப்பு.

மற்றவர்க்கு
வாழ்வில் மரணம்
எம் காட்டில்
மரணத்துள் வாழ்வு.

சாதி என்ற தடுப்புச் சுவரை, ஒரு கவிதையால் மட்டும் தாண்டிவிட முடியும் என்று நான் நம்பவில்லை.

படிப்பகம்

www.padippakam.com

## மதிவண்ணன் கவிதை

மௌனத்தின் அழுகையாய் உறுமியும்
வெறிக்கூத்தின் ஒலிபெயர்ப்பாய்ப் பறையும்
திகில்மந்திரப் புதிர்புதைமொழியில் உடுக்கையுமொலிக்கும்.
மறைவெளி மண்டலங்களிலொன்றில்
பட்டைச் சாராயமும் பனங்கள்ளும்
மாந்திச் சிவந்த விழிகளுடனும்
பன்னிக்கறியின் மெதனை படிந்த கைகளில்
கொடுவாளுடனும் எதிர்ப்பட்டானவன்.
கொடுவாளைக்கொண்டு அடிக்கடி மேனியை
அலுப்புடனும் கடுப்புடனும் வழித்துக்கொண்டிருந்தவன்
"ஓய்ந்துகொண்டிருக்கிறேன்
வழிநெடுக விசிறியடிக்கும்
சைவ அசைவப் பீக்களை வழித்து வழித்தே" யென்ற
புகாருடன் அறிமுகப்படுத்திக்கொண்டான்
என் தொல்குடித் தெய்வமென்று தன்னை.
தெண்டனிட்டு வணங்கியெழுந்தபோது
எனதேயானத் தன்முகம் மலர
வேண்டுவன கேளென்றான்.
பூப்பறித்து விளையாடுவதாய் எம் தலையறுத்தாடும்
மெஜாரிட்டி கைகளில் சாதுவான ஒன்று பின்
மெல்ல அறிவிக்கும்/ எரிச்சலூட்டுவதாக
எங்கள் தலையின் எந்தப்பாகம் இருந்ததென்பதைக்
குறித்து நடத்தலாமிப்போ பொதுவிவாதமொன்றென்று.
தொல்குடித் தலைவா! வெட்டத் தளிர்க்கும் மரம்மாதிரி
எங்கள் மைனாரிட்டித் தலைகளும்
கொப்படித்துத் தளிர்க்க வேணுமென்றேன்.
பரிதாபமாய்ப் பார்த்தவன் வேறென்னவென்றான்.
அவ்வண்ணமே, கூட்டமாய் வந்தவர்கள்
கிழிக்க முடியாவகையில் எம்குலப்பெண்களின் குறிகளை
உலோகக் குறிகளாய் மாற்றித் தரவேணும்
முடிந்தால் கவர்ச்சியான தங்கத்திலென்றேன்.
அரண்டு போனவன்
என்னால் தரமுடிவதிதுதானென்று
பீ வழித்துக்கொண்டிருந்த கொடுவாளைக் கூர்தீட்டிக்
கையில் தந்து
ஊளையிட்டுப் போனானொரு காட்டு மிருகம்போல்.

படிப்பகம்

www.padippakam.com



31ஆம் பக்கத் தொடர்ச்சி— "புனைவு தந்த கல்கியும்...... "

ஏற்படுத்திச்சு. எத்தனை பாத்திரங்கள் எப்படி இவருடைய கதைக்குள் வந்துபோகிறார்கள், அவர்களை எப்படி கையாளுகிறார் என்றெல்லாம் நான் அதிசயப்பட்டேன். அவருடைய பிரமாண்டம் உண்மையில் எனக்கு பிரமிப்பு ஏற்படுத்திற்று என்றே சொல்வேன்.

அவருடைய எழுத்துகள் இந்த மாதிரியான உணர்வுகளைத்தான் ஏற்படுத்திற்று. ஆனால் என்னுடைய எழுத்துக்கான விஷயமாக அவருடைய எழுத்து என்னைப் பாதிக்கவில்லை.

அப்புறம் அவருடைய சனரஞ்சகமான எழுத்து, மக்களிடம் பரவலாக வாசிக்கப் பண்ணிய விதம்- சுபாவம், மக்களுக்கும் தனக்குமான உறவை நெருக்கமாக வைத்திருந்தது இவையெல்லாம் கல்கியிடம் எனக்குப் பிடித்தவை. தமிழில் நிறைய அவர் செய்திருக்கிறார். கள ஆய்வு என்று இந்தக் காலத்தில் சொல்கிறார்கள். அதுபோல் கல்கி நிறைய கள ஆய்வு செய்து எழுதியுள்ளார். அந்த இடங்களுக்கு எல்லாம் போய் உண்மைகளைத் தெரிந்து அந்த உண்மைகளுடன் கற்பனைகளையும் கலந்து சொல்லும் போது உண்மையைவிடக் கற்பனை மேலோங்கி நின்றமையைக் கல்கியிடம் காணலாம். அவரிடம் இசை விமரிசனம், அவருடைய பாடல்கள் எல்லாம் பிடிக்கும். ஆனால் அவருடைய எழுத்துகள் இலக்கியமாக என்னை பாதித்ததா என்றால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். அவருடைய எழுத்தில் படைப்பாற்றல் இருந்ததாகவே தெரியவில்லை. பெரிய அபிப்பிராய மாற்றம் எனக்குள் ஏற்பட்டதாக இல்லை. இன்னும் கல்கியைப் பற்றி சொல்லும் போது அவருக்குக் கூடும் கூட்டம் கல்கிக்கு மக்களிடம் உள்ள செல்வாக்கு இவற்றையெல்லாம் பார்க்கும் போது திரும்பவும் பிரமிப்பாகத்தான் உள்ளது.

## கவிஞர் இன்குலாப்

முதல்ல நான் ஒரு விஷயத்தைத் தெளிவுப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். நான் கல்கியுனுடைய தீவரமான வாசகன் அல்ல. என்னுடைய கல்லூரி நாட்களில்தான் நான் கல்கியின் கட்டுரைகள் சிலவற்றையும் சிறுகதைகள் சிலவற்றையும் வாசித்திருந்தேன். கல்கியின் முழு தொடர் நாவல்கள் எதனையும் நான் அப்போ படித்திருக்கவில்லை.

இக்குறையினால் கல்கியைப் பிடித்து விடுவதென முயற்சியில் இறங்கினேன். அப்போ 'பொன்னியின் செல்வன்'தான் அவரு

படிப்பகம்

www.padippakam.com



டைய நாவல்களுள் சிறந்ததென பலரும் அபிப்பிராயப்பட்டிருந்தமையால் அதனைத் தேடிப் படித்துப் பார்த்தேன். உண்மையைச் சொல்கிறேன், என்னால் பத்து இருபது பக்கங்களுக்கு மேல் படிக்க முடியாமல் போய்விட்டது. மீண்டும் மீண்டும் முயற்சி செய்து பார்த்தேன். முடியவில்லை. இதனைத்தான் கல்கியின் தொடர் கதைகள் மீதான முயற்சியாகக் கூறுவேன்.

நான் போதிய கவனம் செலுத்தித் தீவிரமாகப் படிக்க முடியாமல் இருந்திருப்பேன். இது என்னுடைய குறைபாடாகவும் இருக்கலாம். அல்லது கல்கியில் இருக்கக்கூடிய மிகுதியான புனைவியல் போக்கும் என் வாசிப்பைத் தடை செய்தும் இருக்கலாம். என்னவோ இந்த இரண்டில் ஏதோ ஒன்றுதான் காரணமாக இருந்திருக்க வேண்டும். இப்போ இதனை என்னால் சரியாகச் சொல்ல முடியவில்லை.

நான் இப்போ கல்கியை மறு வாசிப்பு செய்யலாமென நினைக்கிறேன். அவ்வாறு நிகழும் போது அது எனக்குப் பயனுடையதாகவே இருக்கும்.

இன்று பார்க்கும் பொழுது, கல்கி ஓர் பரவலான வாசிப்புத் தளத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றே கூற வேண்டும். அதில் ஓர் ஆழ்ந்த போக்கை அவர் உருவாக்காவிட்டாலும்கூட, அங்கே பல் வேறு செய்திகளைக் கொண்டு வந்து சேர்த்துள்ளார் என்று கூறலாம். அதே நேரம் கல்கி இதில் ஆழமான முயற்சிகளில் போவதற்கு அந்தக் காலம் அவரை அனுமதிக்கவில்லை. அவரும் செய்யவில்லை.

ஆனால் வாசகப் பரபரப்பைப் பரவலாகக் கொண்டு செல்லும் முயற்சிக்கு நாம் யாரையாவது முன்னோடியாகச் சொல்ல வேண்டுமானால் அதற்கு கல்கியைத்தான் சொல்லவேண்டுமென நினைக்கிறேன்.

கல்கியின் இலக்கியத்தரம் குறித்த 'மணிக்கொடி' எழுத்தாளர்களின் மதிப்பீடு சரியென்றே கருதுகிறேன். பின்பு பாரதிக்கு மணிமண்டபம் எழுப்பியதுகூட பரபரப்பு சார்ந்த செயல்பாடாகவே கணிக்கிறேன். ●

★ **கவிதாசரண் கருத்தாக......**

*சில ஆண்டுகளுக்கு முன் ஒரு 'பெரு முதலாளி' பற்றி அவரது தொழிலக ஊழியர்களின் கூட்டுக் கருத்தறியச் சென்றேன். அவர்கள் தந்த விவரங்கள் புல்லரிக்க வைத்தன. அத்தனை உயர்வாகத் தங்கள் 'ஐயா'வைப் பற்றி அளந்தார்கள்.*

படிப்பகம்

www.padippakam.com



அங்கிருந்து கிளம்பும்போது ஒரு தோழர் என்னைக் காபி அறைக்கு அழைத்துப் போனார். காபி பருகினோம்.

"எதிர்பாராத விதமா எங்கள்ல யாருக்காவது விபத்து நேர்ந்து வேலை செய்யத் தகுதியில்லாத நிலைமை ஏற்பட்டுப் போச்சுன்னு வையுங்க. அதுக்காக நாங்க ஒன்னும் கவலைப்பட வேண்டாம். சொல்லப்போனா, வேலைக்கு வளங்காத சோம்பேறி தொழிலாளி அப்படியொரு விபத்து தனக்கு நேர்ந்தா தேவலைன்னே நினைப் பான். ஏன்னா விபத்துக்காளானவனோட பணிக்காலம் முடியிற வரைக்கும் அவன் வீடு தேடி சம்பளம் போயிடும். அதுக்கும்மேலே, சிறப்பு வேண்டுதல் பேர்ல அந்தக் குடும்பத்தோட படிப்பு முதலான கூடுதல் செலவுகளையும் எங்க ஐயாவே ஏத்துக்குவாரு."

"உலகத்துல முதலாளிங்க எல்லாரும் உங்க ஐயா மாதிரியே இருந்துட்டா தொழில் தகராறே இருக்காது. கார்ல் மார்க்ஸ் தோன் றியே இருக்க மாட்டார்."

"இப்ப மட்டும் என்ன. நல்ல முதலாளிங்க எல்லாரும் எங்க ஐயா மாதிரிதான்."

"என்ன சொல்றீங்க?"

"ஆமாங்க. விபத்துங்கிறது எங்க ஐயா எங்களுக்கு எதிர்பாரம வழங்குற போனஸ். பிரச்சினைக்குரிய தொழிலாளியைக் குறைந்த பட்ச சேதாரத்தோட சமாளிக்கிற வழி இதுல ஒவ்வொருத்தருக்கும் ஒரு வழி இருக்கும். நியாயம் பேசுற தொழிலாளியைக் கையேந்துற பிச்சைக்காரனாக்கித் தன்னைக் கீர்த்திமானா கௌரவிச்சுக்கிற உத்தி. இந்தக் கீர்த்திக் கொடியில காய்ச்சுத் தொங்குற புடலங்காய் கள்தான் அவரோட காவியச் சிறப்புகள்.

பாரதியையும், புதுமைப்பித்தனையும் கல்கி கையாண்ட விதத் தில் வெளிப்பட்டது இந்த 'முதலாளிகுணம்'தான். சதாசிவம் சுப்பு லட்சுமி முதலாளித் தம்பதிகளின் குணாம்சமாகத் திரண்டு ஒளிர்ந் தவர் கல்கி என்பது அவருடைய சிறப்பம்சங்களில் ஒன்று.

சென்ற கவிதாசரண் (செப். 99)இதழில் வ. ரா.வுக்கு கல்கி எழு திய இரு கடிதங்களை அவர் நூற்றாண்டு நினைவாக வெளியிட்டிருந் தோம். அவற்றிலிருந்து, அவர் எப்போதும் வாசகர்களின் நாடித் துடிப்பைத் தன்வசப்படுத்துவதில் கண்ணுங்கருத்துமாயிருந்த இத ழியல் ஜாம்பவான் என்பது புலப்படும். வ. ரா. போன்ற சமூகச் சிந்னையாளரைச் சகித்துக்கொள்வதுக்கூட அவருக்கு இரண்டாம் பட்சம்தான்; அல்லது தள்ளுபடி அம்சம்தான். இந்த வைப்புமுறை பிசகால் தன்னை இதழியல் ஜாம்பவான் என்பதற்கு மாறாக இலக் கிய ஜாம்பவான் என்று கருதிக்கொண்டுவிட்டார். அதனாலேயே தன் சமகாலப் படைப்பாளிகள், சிந்தனையாளர்களோடெல்லாம் அவர் இணக்கமற்று யுத்தம் செய்ய நேர்ந்தது.

படிப்பகம்

www.padippakam.com



கல்கி, தன்னை ஒரு நல்ல இலக்கியவாதியாகவும் தேற்றிக்கொண்டிருக்கக் கூடும். அந்தத் திசையில் முயற்சியற்றுப் போனமைக்கு அவரது அண்ணாவும் (ராஜாஜி) அவர் சார்ந்த ரசனைக் குழுவுமே (உதாரணமாக ரசிகமணியின் வட்டதொட்டி) காரணம். அது ஒரு சீட்டுக்கச்சேரி ஜமா போல; தமிழியலை நிர்ணயம் செய்யமுனைந்த அரசியல் இலக்குகள் கொண்ட ஜமா. கல்கியே அதன் ஆஸ்தான வர்ணனையாளர். இதனாலேயே தனித்துயிர்க்கும் தேடலற்றுப் போனவர் எனினும், அவர் ஒரு சமூக அக்கறையுள்ள பத்திரிகையாளராய் நிகழ்த்திக் காட்டிய விமர்ச்சனங்களும் ஊர் வம்புகளும் கவனம் கொள்ளும்படியாகவே அமைந்தன. ஊடே எம்.எஸ். பாடுவதற்கென 'காற்றினிலே வரும் கீதங்'கள் வேறு. விடுதலைப் பேச்சு மலிந்த தமிழ்ச் சூழலின் கவனம் குவிக்க அவை போதுமானவையாகவே இருந்தன. அதற்கும் மேலாக, அவரளவில் ஓர் அர்ப்பணிப்புணர்வோடே அதிகம் எழுதினார். இந்த அர்ப்பணமானது அவரது ஆளுமையின் திரட்டாக, குழந்தையை அள்ளிக் கொண்டால் அதை முகரத் தோன்றுமே ஒரு வாசம், அதுபோல அவரது எழுத்தின் மேல் வாசிப்புக்கான வாசம் வளர்ந்தது. உண்மையில் வாசிப்பை அனுபவமாக்கத் தெரிந்தவர்களுக்கு இதுவே விமர்சனத்துக்குரியதாய் இருந்திருக்க வேண்டும்.

இங்கு கருத்து சொன்னவர்கள் (சாரு தவிர) அனைவருமே அவரவர் பாணியில் அவரை ஒருவாறு நிராகரிக்கவே செய்கின்றனர்.

அவர் எழுத்து என்னவாயிருந்தாலும், எந்த மனசையும் இருப்புக்கு மேலாக குப்பையாக்க முனையவில்லை. எதார்த்தம், கொக்கி முள்மேல் விழுந்த கிழிசல் துணியாய் மேனியெங்கும் ரத்தவிளாறாக்கித் துக்கம் காக்கும் நிலையில், கல்கி போன்றவர்களின் எழுத்துகள் மனப்புலன் தன் நினைவு தப்பிப்போகாமல் இளைப்பாறக் கிடைத்த மிகைப் புனைவாகவே இருக்கட்டுமே.

என்னளவில் ஒரு எழுத்து அதன் அரசியலுக்காகத்தான் விமர்சிக்கப்படுகிறது என்பதால் கல்கியோடு எனக்கு நட்பு கொள்ளவே விருப்பம். பிள்ளைப் பருவத்தில் நான் யார் மடியில் படுத்துறங்கினேனோ, யார் கழுத்தைக் கட்டிக்கொண்டேனோ, யார் இடுப்பில்-யார் தோளில் சவாரி செய்தேனோ, அவர்கள் அனைவரும் எனது நினைவுச் சித்திரத்தில் சராசரிக்கும் மேலானவர்களாய், கண்ணை நிறைக்கும் காத்திரமுள்ளவர்களாய், மேம்படுத்தப்பட்ட மானுடர்களாய் மாற்றமில்லாமலே வாழ, நான் ஒரு குழந்தை, அவர்கள் என் புரவலர்கள் எனும் பாவனை கே றுக் காக்கப்படுகிறது.

கல்கியிடம் அந்த பாவனையே மாற்றம் கோராத காவிய மரபு சார்ந்த எழுத்தாக விரிகிறது. ●

படிப்பகம்

www.padippakam.com



# தன்மையம்

— 59ஆம் பக்கத் தொடர்ச்சி

கொள்கை வழிப்பட்ட அரசியலில் கொஞ்சமேனும் பற்று வைத்திருக்கிறவர்கள் தங்களது தன்மானம் பற்றிய கவலையை விடவும் அரசியல் மானம் பற்றிய கவலையோடு ஜெயலலிதாவை நத்திச் செல்வார்கள் எனில், தமிழகத்திற்கும் அதன் பாரிய வாழ்வியலுக்கும் இரண்டகம் புரியும் கலைஞரின் தன்னல அரசியல் சரியானதொரு புதிய புரிதலோடு கணிசமானவர்களால் தோலுரிக்கப்பட்டிருக்கிறது என்பதுதானே பொருள்.

"பா.ஜ.க.வுடன் கூட்டு வைத்துக்கொண்டது நான் செய்த தவறு" என்று சொல்லிக்கொள்ளும் குறைந்த பட்ச தகுதியை ஒப்புக்காகவேனும் ஜெயலலிதா தக்கவைத்துக் கொண்டுவிட்டார். கலைஞர் எதனைத் தக்கவைத்துக் கொண்டார்? அவரால் 'ஜென்டில்மேன்' ஆகப் புரோகிதம் செய்து விடப்பட்ட வாஜ்பேயி 'ஜெயலலிதா ஊழல் பேர்வழி' என்று புதிய ஞானோதயம் பெற்றதினாலா கலைஞரோடு கை கோர்த்துக் கொண்டார்? வாஜ்பேயிக்குத் தன் பசுவைக் கட்டிப்போடத் தென்புலத்தில் ஒரு தொழுவம் தேவை. அதிமுக தொழுவம் அடித்து விரட்டியதை தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டமாக எண்ணி திமுக தொழுவம் வாரியணைத்துக்கொண்டது வேறென்ன? சந்திரபாபு நாயுடுகாருகூடத் தொடக்கத்திலேயே அணிமாறி விழுந்தவர்தான். அவருடைய செயலும் புறநிலை மதிப்பீடாக ஒரு அரசியல் மோசடிதான் என்று தோற்றப்பட்டாலும், அதன் சாதக எல்லைகளாகத் தெலுங்கு தேசத்தையே (எங்கேயும் போல அங்கேயும் ஆதிக்க சாதி வர்க்க தேசம்தான். இல்லையெனில் மக்கள் போர்க் குழுவுக்கு வேலை ஏது?) தன் நெற்றிப் பட்டயமாகக் கட்டிக்கொண்டு, குறுகியகாலப் பலன்களுக்காகப் புறங்கை நக்கும் அவலத்துக்காளாகாமல், இந்த தேசத்தின் இயக்கத்துக்கான சூத்திரக் கயிற்றைத் தன் இடுப்புக் கயிறாக ஆடைக்குள் மறைத்துக்கொள்ளும் கண்ணியம் கற்றிருக்கிறாரே. கலைஞர் தன்னை எதன் பொருட்டு விற்றிருக்கிறார்?

ஜெயலலிதா தன்னளவில் ஒரு புத்திசாலிப் பெண் என்பதைத் தவிர, அவரை ஒரு அரசியல் முன்னோடியாக யாரும் பொருட்படுத்தியதில்லை. அவர் ஊழல் புரிந்தார் எனில் தமிழக அரசியலில் அவருக்கு முன்னுதாரணங்களாக வேறென்ன

படிப்பகம்

www.padippakam.com



இருந்தது என்பது சர்வதேசச் செலாவணியிலுள்ள ஒரு கேள் வியும்கூட. மேலும் 'பார்ப்பனப் பெண்'ணான ஜெயலலிதா திராவிட அரசியல் தறியில் நெருடலற்ற ஊடிழையாகிப்போன தும் இப்படித்தான் அல்லவா?

புதிய இந்திய சட்ட அமைச்சர் ராம் ஜேட்மலாணி சொல் கிறார், "இதுவரை ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிய எந்த அரசி யல்வாதியும் தண்டிக்கப்பட்டதில்லை. ஆனால் இனி அப்படி யிருக்காது," என்று. கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இவர் எத்தனை காலத்துக்கு அந்தத் துறையில் குப்பை கொட்டப்போகிறார் என்பது அவருக்கே தெரியாதுதானே. இதில் வழக்கு மன்றச் செயல்பாடுகளை விரைவுதான் படுத்த இயலும்; தன் விருப்பத்துக்கு மாற்றவும் இயலும் எனில் அது என்ன வகை அரசியல்? இதில் ஜெயலலிதாவுக்கு நம்பிக்கை யளிக்கக் கூடிய மாற்றாதாரமாக, ஊழல் குற்றச்சாட்டுக்காக 50 இலட்சம் தண்டம் விதிக்கப்பட்ட சதிஷ் சர்மா தன் காலங் கடந்த மறு ஆய்வு முனறயீட்டால் அதே வழக்கு மன்றத்தின் மற்றொரு பிரிவினால் தண்டத்திலிருந்து விடுவிக்கப்பட்டதும் அண்மையில்தானே.

உலகத்தில் மனிதர்களால் என்னென்னவோ செய்ய முடிந் திருக்கிறது. ஆனால் நீதிமன்றத்தை மட்டும் உருவாக்கவே முடியவில்லை. உருவாக்கியதெல்லாம் வெறும் வழக்குமன்றங் கள்தாம். நீதிபதிகளும் வெறும் வழக்கு மதிப்பீட்டாளர்களே. மெய்யாகவோ பொய்யாகவோ திரட்டப்படும் சாட்சியங்களுக் கேற்ப எழுதப்படுவதே தீர்ப்புகள். கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய் என்றான பிறகு தீர விசாரிப் பதே மெய் என்பதும் மனித எத்தனங்களுக்கேற்பதானே.

எனினும் செய்வினைக்கேற்ப ஒருவருக்கு பாராட்டோ பழியோ சம்பவிக்கும் என்பதை நீங்கள் நம்புகிறவரானால், ஜெயலலிதா ஏதேனும் ஒருவகையில் தண்டிக்கப்பட வேண்டி யவர்தான். ஊழல் குற்றச்சாட்டுகள் மெய்ப்பிக்கப்பட்டு தண் டனை பெற்றால் சரி. இல்லையென்றாலும் தனக்குப் பிடிக் காதவர்களையெல்லாம் ஆள் வைத்து அடித்து அராஜகம் பண் ணினார் என்னும் குற்றச்சாட்டுக்காவது. யார் கண்டார்கள்- இதுவரை அவர் புரிந்த கற்றுக்குட்டித்தனங்களிலிருந்து பட்ட றிவு பெற்றவராய் வருங்காலத்தில் கலைஞரைவிடவும் முதிர்ந்த

படிப்பகம்

www.padippakam.com



அரசியல் ஞானியாக மாறினாலும் மாறக்கூடும். அந்த ஞானத்தின் முதல் கீற்றாக 'புதிய தமிழகம்' கட்சியைப் பற்றி "அது கட்சியல்ல. வன்முறைக் கும்பல்", என்று சொன்னதை அவதானிக்கலாம். தங்களைச் சாதிமான்களாகக் காட்டிக்கொள்ளும் எல்லா அரசியல் ஆதிக்கவாதிகளும் சொல்லத் துடிக்கும் கடைசி வாக்கியம் "எங்கள் அளவற்ற கருணையால்தான் தலித்துகள் இன்னும் அழியாமல் காக்கப்படுகிறார்கள்" என்பதுதான். கலைஞருடைய அரசியல் வாழ்வின் கடைசி வாக்கியமாக நிர்ணயப்படப்போவதுகூட "அவர்களை எப்படி கையாள்வதென்று எங்களுக்குத் தெரியும்", என்பதாகவே இருக்கும்.

தலித்துகளுக்கெதிரான சாதி அரசியலில் போயஸ் தோட்டமும் கோபாலபுரமும் என்ன பாந்தமாய் நேர்க்கோட்டில் நெருங்கிவந்துவிடுகின்றன!

**கேள்வி: நீங்கள் ஏன் கலைஞரிடம் ஓர் அரசியல் புனிதரை எதிர்பார்த்தீர்கள்?**

அரசியல் புனிதர் என்பதற்கு உங்கள் அகராதியில் என்ன பொருள் என்று தெரியவில்லை. இப்போதெல்லாம் அர்த்தமுள்ள மனிதனாயிருப்பதே புனிதனுக்குள்ள தகுதியாக விளங்கிக்கொள்ளப்படுகிறது. மனித விழுமியங்கள் சீந்துவாரற்றுப் போகும் வேகம் அப்படி. புனிதம் என்பது காலப்போக்கில் மனிதனைச் சடங்குத்தனத்தில் ஆழ்த்தி, நியாயத்துக்கான சுரணையற்று மரத்துப்போக வைக்கும் அதிகாரப் புனைவுதான். கலைஞன் என்பவன் நியாயங்களோடு மனிதர்களைப் பொருத்தி நேர்த்தி செய்கிற வித்தகன். அந்த அடிப்படையில் கலைஞர் எனக்கு எப்போதும் கலைஞர் மட்டுமே. அந்த மதிப்பீடே புனிதருக்கு இணைதான் எனில், இந்தியச் சூழலில் தமிழ்நாட்டுக்கு அப்படியொரு தேவை எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது கலைஞர் அதற்குத் தகுதியுள்ளவர் என்று திடமாக நம்பினேன்.

**கேள்வி: தமிழ்நாட்டின் தேவை என்று எதைச் சொல்கிறீர்கள்?**

அதை இரண்டு வகையாகப் பார்க்க வேண்டியுள்ளது. ஒன்று, இந்திய சமுதாயம் சமதரப்பட்டதாகவோ, சமநீதியைச் சமுதாய நீதியாகக் கொண்டதாகவோ கட்டமைக்கப்பட்

படிப்பகம்

www.padippakam.com



டதல்ல. அதன் ஏற்றத்தாழ்வுகள் இலகுவில் அழித்துவிட முடியா்தபடி ஆயிரங்கால மனோர்பாவமாகக் கெட்டிதட்டிப் போயுள்ளன. இந்நிலையில் சென்றுபோன அந்நியஆட்சி என்னதான் நம்மை அடிமைப்படுத்தியிருப்பினும் ‘சட்டத்தின் முன் எல்லாரும் சமம்,’ என்னும் தத்துவத்தை உலகத்தோடு ஒட்ட ஒழுகலுக்கான சட்டமாக நமக்கு விட்டுச்சென்றுள்ளது. அந்தத் தத்துவத்தின் புதிய சமூகவியல் கட்டமைப்புதான் ஜன நாயக ஆட்சிமுறை. இந்த முறையை, ஆள்கிறவர்களின் தன்னலத்தால் பண நாயகமாக மாற்ற அனுமதித்தால், அதன் விளைவு ஏதோ பதவியிலிருக்கும் ஒருசிலர் கொள்ளைக்காரர்களாகிவிடுவார்கள் என்பதோடு நிற்பதில்லை. மாறாக, ஜனநாயக நெறிமுறைகள் யாவும் காகிதக் கட்டுகளுக்குள் முடக்கப்பட்டு, நடைமுறையில் இந்திய மனோபாத்தின் உள்ளுயிர்ப்பாய் ஊறிக்கிடக்கும் ஆளுக்கொரு நீதி என்னும் வர்ணாசிரமப் படிநிலையற்ம் எழுதாத சட்டமாக மீட்டுருவாக்கப்படும். பிறகு ‘எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை’ என்பது உலகத்தை ஏமாற்றும் பொய் முழக்கமாகவே தேய்ந்தொடுங்கும்.

**கேள்வி: மற்றொன்று?**

நீங்கள் என்னதான் கரடியாகக் கத்தினாலும், பார்ப்பனிய சாராம்சத்திலான இந்திய மரபுத் துறைகளாக இதிகாசங்களையும் புராணங்களையும் வேதங்களையும் தத்துவங்களையும் கடைபரப்பி, வரலாற்றை வளைத்தெழுதினாலும் இந்தியா என்பது ஒற்றைத்தேசமல்ல. மாறாக, எக்காலத்திலும் அது தேசங்களின் ஒன்றியமே. நீங்கள் எவ்வளவு காலத்துக்கு தேவாசுரப் போர்களைப் பார்ப்பனிய மதிப்பீட்டில் நியாயப்படுத்திக் கொண்டிருக்கிறீர்களோ, அவ்வளவு காலத்திற்கு இந்தியா இரண்டு பட்ட தேசமாகவே இருக்கும். தொல்மரபணுவின் தொடரிழையில் மிச்சமாய்ப் பேணப்படும் இனப் பகையின் தொடுபுள்ளி அது. இந்தியாவை ஒன்றிணைக்கும் மரபிழைகளாக முன்நிறுத்தப்படுபவை யாவும் மீள்விளக்கத்துக்குட்படுத்திச் செப்பம் செய்தால் இந்த நிலப்பரப்பைத் தேசங்களின் ஒன்றியமாகத் தக்கவைத்துக்கொள்வது சாத்தியப்படும். இதிலுள்ள மூலப்புள்ளி, சமத்துவம் பேணப்படும் இடத்திலேதான் ஒன்றியம் சாத்தியப்படும் என்பதே. ஆகவே இந்திய ஒன்றியத்தில் சகவாழ்வை வென்றெடுக்க இன–மொழி வேறுபாடுகளூடே

படிப்பகம்

www.padippakam.com



சகிப்புணர்வும் நெகிழ்வுத்தன்மையும் வளர்த்தெடுக்கப்படுவதோடு முரண்பாடுகளை அடையாளப்படுத்துவதென்பது உடன்பாடுகளைக் கண்டடையத்தான் என்னும் இணக்கமான உறுதிப்பாடும் பேணப்பட வேண்டும். இவ்வுண்மைகளை இந்திய மக்களின் நாடித்துடிப்பாக்கும் இரட்டைப் பொறுப்பு தமிழக மக்களுக்கு உண்டு.

**கேள்வி: அது என்ன மற்றவர்களுக்கில்லாத இரட்டைப் பொறுப்பு தமிழர்களுக்கு?**

அதாவது ஒற்றைத் தேசியத்தில் அடங்க மறுப்பதும், ஒன்றியமாய் வாழ உடன்படுவதுமான இரட்டைப் பொறுப்பு. ஒரு பொதுவான வகைப்படுத்தலில் இந்தியாவை தமிழ், சமஸ்கிருதம் என்னும் இருமொழிக் குடும்பங்களின் ஒன்றியம் என்பது எதனாலும் மூடி மறைத்துவிட முடியாத உண்மை. நிலப் பரப்பிலும் மக்கள் தொகையிலும் தமிழ்நாடு இன்றொரு கையடக்கமான மாநிலமாகச் சுருங்கிவிட்டாலும், இந்திய மாநிலங்களில் அது பத்தோடு பதினொன்றாகப் பொதுமைப்பட்டுவிட முடியாது. (ஆனால் இன்றைய மத்திய ஆட்சிமொழி ரீதியிலான அணுகுமுறையில் தமிழகம் அடிக்கடி மறக்கப்படும் மாநிலமாகப் பாவிக்கப்படுவது ஆளும் 'தமிழர்களை' அதிகம் பாதித்ததாகத் தெரியவில்லை. உலகளாவிய நுகர்வுக் கலாச்சார மோகத்தில் எல்லாப் பிரச்சினைகளும் மரத்துக் கிடப்பதாகத் தெரிகிறது.) தமிழ் நாட்டின் தொல்லியல் விழுமம் கொண்ட இன, மொழி, வரலாற்றுச் செழுங்குணங்கள் அதை எப்போதும் குடங்கையுள் நெருப்பாக உயிர்த்திருக்கச் செய்கின்றன. வரலாறு நெடுகிலும் தன் தனித்துவத்தை உணர்த்தி வந்துள்ள காஷ்மீரும், இன – நிலப் பண்பாட்டு விட்டேற்றித் தன்மையால் அடங்க மறுக்கும் வடகிழக்கு மாநிலங்களும் இன்று காற்றைப் பற்றிய கனல் போலத் தீர்வை மீறிய திமிறலாகி நிற்கின்றன.

இந்தியா முழுதும் பரவக்கூடிய இச்சிக்கல்களின் மூலக் கருவைத் தனதாக்கிக் கொண்டு திரண்டிருக்கும் அதிர்வலைதான் பா.ஜ.க.—ஒற்றைத் தேசியத்தையும் வேதப் பழங்கனவையும் கட்டமைக்க இந்து மதத்தையும் இந்தி மொழியையும் மூர்க்கப்படுத்தும் சங்பரிவாரங்களை ஆயுதக்கரங்களாகக் கொண்டிருக்கும் பா.ஜ.க. ஆட்சியதிகாரப் பீடத்தில் தன்னைக் கேள்விக்கப்பாற்பட்ட சக்தியாக நிறுவிக்கொள்ளப் பாசாங்குத்தன

படிப்பகம்

www.padippakam.com



மான நட்பு முகத்தோடு அது நிகழ்த்திக்கொண்டிருக்கிற வெற்றிகரமான செயல் திட்டம்தான் கலைஞர் SINCERE ஆகவும் SERIOUS ஆகவும் ஆதரிக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி. இந்த வெற்றிக்குக் கைகொடுக்கும் அடிப்படை முரண்பாடுகள் கொண்ட அத்தனை மாநில சக்திகளும் பின்னாளில் அது தனித்துப் பெறும் வெற்றிச் சுடலையில் கருக்கப்படுவதற்கான எல்லா முன்னறிவிப்புகளும் அதன் ஒவ்வொரு மயிர்க்காலிலும் சிலிர்த்திருப்பதைக் கண்ணுள்ளவன் காணக்கடவன்.

இந்த ஒற்றைத்துவத் தாக்குதலில் இந்தியா சிதறுண்டு போகாமல் காக்கும் ஒரே மந்திரம் ‘மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி’தான். இதை ஏதோ திமுக ஒரு காலத்தில் வெகு அலங்காரமாக மென்று துப்பிய அடுக்கு மொழி முழக்கங்களில் ஒன்று என அற்பசொற்பமாய்க் கருதிவிடக்கூடாது. சொல்லப்போனால் இது ஒன்றும் திமுகவின் கண்டுபிடிப்பல்ல. மாறாக, இந்திய அரசியல் சட்டமே அடையாளப் படுத்திய தீர்வு. அதை முதன்முதலில் முழக்கமிட்டுக் கவனப்படுத்திய பெருமை திமுகவையே சேரவேண்டும். கூடவே இன்னொன்றையும் நினைவு கூர வேண்டும். இந்திய அரசியல் கட்சிகளிலேயே ஒவ்வொரு கட்டத்திலேயும் சரியான முழக்கங்களைத் தெளிவாக முன்வைத்த சிறப்பு திமுகவுக்கு உண்டு. ஆனால் அதன் வளர்ச்சிப் போக்கில் அம்முழக்கங்களெல்லாம் அர்த்தங்களை இழந்து வெறும் சத்தங்களாகிப் போனதுதான் கொடுமை (பிறந்தபோதே அவை அர்த்தங்களோடு பிறக்கவில்லை என்பது ‘சோ’ போன்ற நையாண்டிக்காரர்களின் குற்றச்சாட்டு. உண்மைதான் என்று ஒத்துக்கொண்டால் ‘பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புலமை விரும்பிகளின் கட்சி இது’ என்னும் அவர்களின் அடுத்த விமர்சனத்தையும் ஏற்க வேண்டிவரும். ஒரு தொன்மையான புலத்தின் ஐம்பது ஆண்டு கால அரசியல் ஊடாட்டத்தை அத்தனை எளிதாக நேர்க்கோட்டில் பொருத்திவிட முடியுமெனில், இந்த மதிப்பீட்டுக்கான என் மெனக்கிடல் முற்றும் வீணுக்கென்றாகிவிடும். கட்சி அரசியல் சார்ந்த எல்லா அர்த்தங்களும் மாற்றங்களும் ஒரு காலகட்டத்தில் இப்படித்தான் ஆகிவிடுகின்றன. என் செய்ய?)

கழகம் முன்வைத்த முழக்கங்களில் ஒன்று, ‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’ என்பது. ஏழையும் சிரிக்கவில்லை இறைவனையும் காணவில்லை. நாத்திகவாதம் மட்

படிப்பகம்

www.padippakam.com



டும் ஒரு மடாதிபதியின் மங்கலத் தோரணையோடு மஞ்சள் துண்டு போர்த்திக்கொண்டது. 'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி' என்ற முழக்கத்தின் இன்றைய வளர்ச்சியாக, 'மத்தியில் நிலையான ஆட்சி, மாநிலத்தில் நிம்மதியான ஆட்சி' என்றாகிவிட்டது. இது வளர்ச்சிதான் எனில், இதிலுள்ள தன்னலத் தீர்வும் தற்கொலைத் தேர்வும் தமிழகத்தின தனித்துவம் காக்கும் பொருட்டா?

உடன்பிறப்புகளையும் உள்ளடக்கிய தமிழ் மக்களைக் கலைஞர் இப்படிக் கைகழுவி விட்டிருக்க வேண்டாம்.

**கேள்வி: ஒன்றைத் தெளிவுபடுத்துங்கள். ஆட்சியதிகாரத்தில் இருந்துகொண்டு கலைஞர் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்ல வருகிறீர்களா?**

நீங்கள் கலைஞர் அரசின் சாதனைகளைக் கவனம் கொள்ளச் சொல்கிறீர்கள் என்று கருதுகிறேன். சாதிப்பது, சாதனைகளைப் பட்டியலிடுவது என்பதெல்லாம் கலைஞருக்கே உரிய கலைத்திறமிக்க வல்லமைகள். கலைஞரின் இன்னொரு பெயர் சாதனை என்றால் அதை வழி மொழிவதே ஒரு சந்தோஷமான அனுபவம். சந்தேகம் என்ன?

திமுக சாதனைகளாக, ''கடந்த மூன்றாண்டுகளில் கிராமக் குடிநீர்த் திட்டம், நகர்ப்புற குடிநீர் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், எம்.எல்.ஏ. தொகுதி வளர்ச்சிக்கு ரூ. 50 லட்சம் ஒதுக்கீடு, சமத்துவபுரம், மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ், தொழில் கல்லூரிகளில் கிராமப்பள்ளி மாணவர்களுக்கு 5 சத ஒதுக்கீடு, 666 மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி என ஏராளமான திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றியுள்ளது.

''போக்குவரத்துக் கழகங்களில் 7384 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன. கிரமாங்களில் 320 மினி பஸ்கள் இயக்கப்படுகின்றன. கிராமங்களில் 12,000 கி.மீ. தூரத்துக்கு தார்ச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. சென்னை நகருக்கு தினமும் 24 கோடி லிட்டர் தண்ணீர் 1996இல் வழங்கப்பட்டது. அது இப்போது 44 கோடி லிட்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

''இவ்வளவு சாதனைகள் செய்த திமுகவை வீட்டுக்கு அனுப்பிவை. நான் ஆட்சிக்கு வந்து என் தோழியுடன் மீண்

படிப்பகம்

www.padippakam.com



டும் கொள்ளையடிக்கிறேன் என்று சொல்கிறார் ஒருவர். தமிழக மக்கள் அவரை நம்பத் தயாராக இல்லை," என்று ஜெயலலிதாவைத் தாக்கும் பொருட்டு கலைஞரே கொடுத்த சாதனைப் பட்டியல் இது (தினமணி, 18 அக். 1999). இதில் மேலும் சில திட்டங்கள் விடுபட்டுப் போயிருக்கலாம்.

மக்கள் நலப்பணிகள் அரசுகளின் ஒய்வுநேர சேவையல்ல. ஆகவே, எல்லா அரசுகளிடமும் இதுபோன்ற நீண்ட பட்டியல்கள் இருக்கும். திட்டப் பலன்கள் உரியவர்களுக்குப் போய்ச் சேர்கின்றனவா, நிறைவு செய்யப்பட்ட பணிகள் உரிய பராமரிப்பைப் பெறுகின்றனவா என்பதே ஓர் அரசின் வெற்றிகரமான செயல்பாட்டை நிர்ணயிக்கும் காரணிகள். இது கலைஞர் அரசுக்கும் பொருந்தும்.

இங்கே நான் வாழும் பகுதியின் சித்திரத்தை நல்லெண்ணத்தோடு முன் வைக்கிறேன்.

சென்னையிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள புற நகர்ப் பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை. நிலத்தடி நீர் பேரளவு மோசமடைந்துவிட்டது. லாரி மூலம் குடிநீர் வழங்குவதாக ஒப்பந்தம் இருக்கும் போல. லாரி எத்தனை நாளைக்கொருமுறை வருகிறது. எத்தனைமுறை வருகிறது என்பதெல்லாம் பதிவேட்டில் இருக்கக் கூடும். மக்கள் நாள் முழுதும் பிளாஸ்டிக் குடங்களை சைக்கிளில் கட்டிக்கொண்டு அலைவதைப் பார்த்தால் "அன்றொருநாள் பாண்டியநாடு பன்னீராண்டு வற்கடம் சென்றது" என்று சிறுவயதில் மனப்பாடம் செய்த வாக்கியம் வந்து அச்சுறுத்துகிறது. மழைநீர்க் குளங்களும் கழிவுநீர்க் குட்டைகளும் நிறைந்த தெருக்கள் வழியே அவர்கள் செல்லும்போது "Water water everywhere, not a drop to drink" நினைவுக்கு வருகிறது. திருவொற்றியூர் நகராட்சி திமுக வசம்தான் உள்ளது. தெருத்தெருவாய் ஆட்டோவில் சுற்றிவந்து வரி கட்டத் தவறினால் சொத்து ஏலத்துக்கு வந்துவிடும் என்று அச்சுறுத்துகிறார்கள் நகராட்சியினர். மக்களும் சொல்லுக்கடங்கும் நல்ல மாடுகளாய், 'பள்ளம் படுகுழியாய்க் கிடக்கும் இந்தத் தெருக்களில் அவர்கள் எப்படி ஆட்டோ ஓட்டுகிறார்கள்?' என்று அதிசயப்பட்டபடியே வரி கட்டிக் கொண்டிருக்கிறார்கள். போதாக்குறைக்கு இன்னொரு பெருமையும் உண்டு. இப்பகுதியில் மின்தடை இல்லாத நாட்களே இல்லை. ஒரு நாளுக்கு எத்தனை தடவை என்பதற்கு கணக்கே

படிப்பகம்

www.padippakam.com



இல்லை. மின்சாரம் இல்லாமல் இரவு முழுவதும் கொசுக்க ளோடு கொஞ்சும் நாட்களும் உண்டு. "அந்த அம்மா ஆண்ட போது மழைக்காலத்துலகூட இப்படி கரண்ட் போனதில்ல. இப்ப என்னடான்னா இதுவே ரோதனையா போச்சு," என்று தெருவாசியொருவர் இருட்டில் புலம்பிக்கொண்டு போனார். இவை எங்கள் பேட்டையில் நாங்கள் அனுபவிக்கும் சுகங்கள்.

இதற்கும் மேலாக, பலதரப்பு மக்களிடமும் ஒரு கருத்து உரத்து ஒலிக்கிறது. "ஜெயலலிதா காலத்துல எல்லார் கையி லயும் தாராளமா துட்டு புழங்குச்சு. கருணாநிதி வந்ததும் எல்லாம் துடைச்சிக்கிட்டுப் போயிருச்சு. தரித்திரம்னா இப்ப டியொரு தரித்திரமா?" என்று அடிநிலையிலிருந்து நடுநிலை வரை ஆளாளுக்குப் பொருமுகிறார்கள். அவர்கள் பொருளா தாரம் படித்தவர்கள் அல்லர். பணம் எப்படி புரண்டது, புழங் கியது என்பதெல்லாம் அவர்களது கேள்வி அல்ல. ஜெயலலி தாவின் ஆடம்பரச் சேகரிப்புகளை சன் டிவியிலும் பிற ஊடகங் களிலும் விரிவாகப் பார்த்து முடித்த மக்கள், அடுத்து என்ன என்று தங்களைச் சுற்றிப் பார்க்கும்போது அவர்கள் நின்ற இடம் இன்னும் கொஞ்சம் பள்ளமாகியிருப்பதையே கண்டார் கள். அரசியல்வாதியின் சொல்லில் வாய்மைக்கு வாய் இல்லை யாதலால், தேசத்தின் சொத்து திருடு போகிறது என்று கூவு கிறவனையே திருடனாகப் பார்க்கப் பழகிவிட்டார்கள். 35ஆயி ரம் கோடி கொள்ளையடித்த ஹர்ஷத் மேத்தாவிடமிருந்து 3 பைசா பெயரவில்லை என்பதையும் அறிந்தே வைத்துள்ளனர். எனவே மக்களிடம் அரசியல் தர்க்கமானது கால்மாடு தலை மாடாகி, மனம் போனபடியெல்லாம் பொருள் காண முடிவ தால், காபிபோசா குற்றங்களும் மயானக்கூரை ஊழல்களுமே 'வாய்மையே வெல்லும்' வசனத்தைவிடவும் ஏற்கும் விஷயங்க ளாகிவிடுகின்றன.

இத்தனை திட்டங்களை அடுக்குகிற கலைஞர் இன்னும் சில இன்றியமையாக் கோரிக்கைகளையும் தன் பட்டியலில் சேர்த்துக் கொண்டிருந்தால், இந்த அரசை செஞ்சார வாழ்த் துகிறவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கும். திருவரங்கம் திருக்கோயில் மதிற்சுவர் சிதிலமடைகிறது என்று பிரேமாநந்த குமார் கட்டுரை எழுதிய மறுநாளே அதைச் செப்பனிட ஆணையிடப்பட்டது. ஸ்டாலின் பேரன்கள் காரோட்டும்

படிப்பகம்

www.padippakam.com



காலத்திலாவது சென்னை சாலைகள் (பாலங்களுடன்) சீரடையுமா என்று வாசந்தி நொந்து கொண்ட மறுநாளே புதிய பாலப் பணிகள் காலக்கெடு நிர்ணயித்து விரைந்து முடிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது கலைஞரின் மின்னல் வேகச் செயல்பாடுகளுக்கு இவை சிறு உதாரணங்கள். இவைபோல் உடனடிக் கவனத்துக்குரிய கோரிக்கைகளாக ஒன்றிரண்டை நாமும் சுட்டக்கூடும்.

சுதா இராமலிங்கம் ஒரு கோரிக்கையை முன் வைத்தார். ஜீவனாம்சத்துக்கான வழக்குகளை, பாதிக்கப்பட்டவர்கள் வாழும் இடங்களிலுள்ள குற்றவியல் நடுவர் நீதி மன்றங்களிலேயே தொடுக்கும்போது, அதிகபட்சமாக ரூ. 500 மட்டுமே ஜீவனாம்சம் பெறமுடியும். மேற்கு வங்கம் இதை ரூ. 2000ஆக மாற்றி சட்டத் திருத்தம் செய்துள்ளது. தமிழ்நாட்டில் மகளிர் சங்கங்களின் பெருமுயற்சியால் 1996இல் ‘முதலும் கடைசியுமாக ஜெயலலிதா ஆட்சியில் செய்த ஒரே வரவேற்கத்தக்க சட்டத்திருத்தம்’ இந்த ரூ. 500 உச்ச வரம்பை நீக்கி, தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப நீதிபதிகள் ஜீவனாம்சம் அளிக்க, சட்டப் பேரவையில் ஒரு மசோதா மூலம் வழி வகுக்கப்பட்டது. இதைச் செயல்படுத்த குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற வேண்டும். அதை இரண்டொரு நாட்களிலேயே பெற்றுவிட முடியும். கடந்த மூன்றாண்டுகளுக்கும் மேலாகக் கிடப்பில் போடப்பட்டுள்ள அந்தச் சட்டத் திருத்தத்தை உயிர்ப்பித்து திக்கற்றவர்களுக்கு முதல்வர் பக்கத்துணையாகலாம்.

மாநிலத்திலுள்ள அனாதைச் சிறுவர் இல்லங்களில் நடைபெறும் சிறைக் கொடுமைகளையும், மனிதாபிமானமற்ற முறைகேடுகளையும் களைந்து அவர்களுக்குப் புதிய நம்பிக்கையை ஊட்டலாம்.

எம்ஜியார் காலத்தில் கைதிகளைப் பொறுப்பும் கடமையுணர்வும் மிக்க நல்ல மனிதர்களாக மாற்றும் முயற்சியில் வெற்றிகரமாய் செயல்படுத்தப்பட்ட சிறைத்துறை சீர்திருத்தங்களை குறைந்தபட்சம் அப்படியே நீடிக்க வகை செய்யலாம்.

கல்வியாளர் வ. சே. குழந்தைசாமி தமிழகப் பல்கலைக் கழகங்களின் அவலங்களையும், அவை வெறும் தேர்வு நடத்தும் நிறுவனங்களாகச் சிறுத்துவிட்டமையும் பற்றி மனம்

படிப்பகம்

www.padippakam.com



நொந்து எழுதுகிறார். நிதிக்குறையே அவற்றின் முதற்குறை யாகிறது ஒரு ஒப்பீடாக, வாரணாசி இந்துப் பல்கலைக் கழகம் ஒன்றிற்கு மட்டும் மைய அரசு கொடுக்கும் (101.9 கோடி) நிதியில் ஐந்தில் ஒரு பங்குதான் தமிழகத்திலுள்ள ஒன்பது பல்கலைக்கழகங்களுக்கும் தமிழக அரசு (20.3கோடி) கொடுக்கிறது. ஆந்திராவின் உஸ்மானியாப் பல்கலைக் கழகம் மட்டும் பெறும் ரூ.46.5 கோடியில் நம் 9 பல்கலைக்கழகங்களும் பெறும் உதவித்தொகை வெறும் 43 சதவீத அளவே. குழந்தைசாமி தன் கட்டுரையை "இது தமிழக முதல்வர்தம் தனிப்பார்வை பட வேண்டிய பிரச்சினை. ஐம்பதாண்டுப் புறக்கணிப்பின் (இதில் 42 ஆண்டுகள் கழகங்களின் ஆட்சிதான்) நலிவை அவர் மட்டுமே புனருத்தாரணம் செய்ய இயலும்" என முடிக்கிறார். தமிழகத்தின் கருத்துச் செல்வத்தையும் சிந்தனை வளத்தையும் பேணிப் பெருக்கும் இன்றியமையாப் பணி இது! இதைச் சரி செய்வதும் முறைப்படுத்துவதும் நல்லாட்சியின் முன்னுரிமைப் பணிகள். ஆனால் கலைஞர் எம்மாதிரியான பணிகளுக்கும் மெச்சுதலுக்கும் முன்னுரிமை தந்து முனைப்பு காட்டுகிறார் என்பதே இங்கே முக்கியமான கேள்வியாகிறது.

காவிரியில் நீரின்றி, தஞ்சையில் பயிர்கள் வாடி, நிலம் வெடித்த கதை, பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு முடிந்த பின்னரே, நீரினுள் அமுக்கி வைக்கப்பட்ட பந்து 'விருட்'டென மேலெழுந்தாற் போல வெளிப்பட்டு நாட்டைக் கலக்கியது. அப்போது, மோகன் குழு அளித்த பயிற்றுமொழி அறிக்கை மீது இரண்டொரு நாளில் முடிவெடுக்கப்படும் எனறு, காவிரியில் குவியும் தமிழார்வலர்களின் கவனத்தை மடை மாற்றி விடுகிறாற்போல அறிவிக்கப்பட்டது. அந்த இரண்டொரு நாட்களில் மழை கொட்டத் தொடங்கி, பெருகிய காவிரி நீரில் பயிற்றுமொழி விஷயமும் அப்போதைக்கு அடித்துச் செல்லப்பட்டது. இடையில் சில அமைச்சர்களின் ஆதரவு தமக்குள்ளதாகக் கிளர்ந்து மகிழ்ந்த ஆங்கில வழிக் கல்வி ஆதரவாளர்கள் இனிப்பு வழங்கி சுற்றறிக்கை விட்டுக் கொண்டதும் நடந்தது.

இப்போது, இதை எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் (நவம்பர்26) அரசின் பயிற்று மொழி ஆணை (அறிவிப்பு) வெளியாகியுள்ளது. 1 முதல் 5 வகுப்புவரை அனைத்துப் பள்ளிகளிலும் மூன்றாண்டுகளுக்குள் படிப்படியாகத் தமிழ் அல்

படிப்பகம்

www.padippakam.com



லது தாய்மொழியே (பழைய குருடி) பயிற்றுமொழியாகும் என்பது அதன் சாரம். இதை வெளியிட்ட அதே நாளில் தமிழ்க் குடிமகன் இன்னொன்றையும் சொல்லியுள்ளார். அதாவது தமிழ்நாட்டில் தற்போது நான்கு துறைகளில் மட்டுமே தமிழில் அரசாணைகள் வெளியிடப்படுகின்றனவாம். 1956இல் வெளியிடப்பட்ட ஆட்சி மொழிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் லட்சணம் இது. கிடப்பிலே போடப்பட்ட எத்தனையோ அரசாணைகள் போலப் பயிற்று மொழிஆணையும் சீந்துவாரற்றுப் போவதற்கான எல்லா குறை அம்சங்களும் அறிவிப்பு நிலையிலேயே துலக்கமாகத் தெரிகின்றன. பயிற்றுமொழித் திட்டத்துக்குச் சட்டப் பாதுகாப்பளிக்க அரசு முன்வரவில்லை என்பது இதில் முதன்மையான புறக்கணிப்பம்சம். அதாவது காவிரிச் சிக்கல்போலவே இதுவும் ஒவ்வோராண்டும் மல்லுக்கு நிற்கவைக்கப்போவது உண்மை. காவிரிச் சிக்கலுக்காவது கர்நாடகம் காரணமாகிறது. ஆனால் பயிற்றுமொழிச் சிக்கலில் கலைஞரைத் தவிர வேறு யாரைக் காரணமாக்க முடியும்? ஆனாலும் கோரிக்கையாளர்கள் அனைவரும் சாரிசாரியாகக் கலைஞருக்கு நன்றி தெரிவிக்கும் சடங்காற்றி தாங்கள் எப்போதும் அவருடைய ரசிகர்கள்தான் என்பதை மீண்டும் ஒருமுறை மெய்ப்பித்து மகிழ்கின்றனர். இந்த ராஜதந்திர சல்லாபங்களை சந்தனமரக்கன்றுகளாக நட்டு வளர்த்துத்தான் தமிழை மணக்க மணக்க எரிப்பார்களாயிருக்கும்.

பல நூறு நலத்திட்டங்களுக்கு நடுவே மக்களும், அதிகார வர்க்கத்தால் கண்டுகொள்ளப்படாத தங்களின் கோரிக்கைகளைக் கவனப்படுத்துவதற்காக சாலை மறியல் நடத்துவதும், அதிகாரிகளையும் அமைச்சர்களையும் மறிப்பதுமாகத் தங்கள் அன்றாட வாழ்க்கை நெறியில் அமைதியின்மையை வளர்த்துக் கொண்டுதான் வருகின்றனர்.

சராசரி அரசியல் தளத்தில் சகலகலா வல்லமை காட்டும் கவர்ச்சி உத்திகள் வகுப்பதில் கலைஞரை மிஞ்சுகிறவர் இனி பிறந்தால்தான் உண்டு என்றொரு காலம் இருந்ததுண்டு. ஆனால் இன்று அந்தத் தளத்திலும் நீண்ட கால அரசியல் உத்திகளோடு 'என் தேசம் என் மக்கள்' என்று பொது வாழ்வின் நவீனத் தலைமைக்கு முன்னுதாரணமாய்த் திகழ முற்படுகிறார் நம் அண்டை மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு.

படிப்பகம்

www.padippakam.com



**கேள்வி: ஒரு மரம் அதன் சகல பரிமாணங்களோடும் விரிந்து வளர்வதெல்லாம் முடிவில் விதை உயிர்க்கும் பூவைத் தனது சிரத்தில் பொருத்திக்கொள்ளத்தான். உங்கள் விமர்சனத்துக்கும் அப்படியொரு மிச்சம் இருக்கும்தானே?**

ஆம். கடந்த பாராளுமன்றத் தேர்தலும் அதையொட்டிய சூழலும் கலைஞர் அரசியலின் அப்பட்டமான புலன் மறுப்பை வெட்டவெளிச்சமாக்கியுள்ளது. நீண்ட ஆட்சியதிகாரத் தேடலின் ஊடாகக் கைவரப்பெற்ற ஆதிக்கவாதத்துக்கும் மேலாக, கலைஞர் தன்னை ஒரு ஆதிக்க சாதியாளராகவும் அடையாளப்படுத்திக்கொள்ள முனைந்துவிட்டார். அவருடைய அரசிலும் அரசியலிலும் முன்னெப்போதையும்விடத் தலித்துகளுக்கு (கூடவே மதச் சிறுபான்மையினருக்கும்) எதிரான அரச வன்முறையும், பொதுமைச் சமுதாயம் வளர்த்துக்கொண்டுள்ள ஒவ்வாமையும் சகிப்பின்மையும் நாகரிக எல்லைகளையெல்லாம் தாண்டிக் கூர்மைப்படுத்தப்பட்ட வன்கொடுமைகளாய் வளர்ந்துள்ளன. நெருக்கடி வரும்போதெல்லாம் தன்னை ஒரு தலித் வீட்டுச் சம்பந்தி என்று சொல்லிக்கொண்டாலும் -அது வாக்கு சேகரிக்கத்தானே தவிர- தன்னை ஒரு அய்யங்கார் அகத்துச் சம்பந்தி என்றோ அல்லது எந்தவொரு ஆதிக்கசாதியின் சம்பந்தி என்றோ அழைத்துக்கொள்வதே அவர் அடிமன வேட்கையாயுள்ளது.

அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து அரை நூற்றாண்டான பின்னும் அது வழங்கும் சமத்துவத்தையும் உரிமைகளையும் அடிநிலை மக்களுக்குப் பெற்றுத்தரத் தவறியமைக்காக அதிகார வர்க்கம் வெட்கப்படவில்லை; மன்னிப்பு கோரவில்லை. ஆனால் அதைச் சுட்டிக்காட்டி உரிமை கோரும் தலித் மக்களை வன்முறையாளர்களாக முத்திரை குத்துவதும், அவர்கள் மேல் வரைமுறையற்ற வன்முறையை ஏவுவதும் அதிகாரவர்க்கத்துக்கு நியாயமாகப்படுகிறது. தலித்துகள் மீதும் சிறுபான்மையினர் மீதும் எவன் குற்றம் சுமத்துகிறானோ, அவனே நியாயம் வழங்குகிறவனாகவும் தன்னை நியமித்துக் கொள்ளும் அடாவடித்தனமே அரசியக்கமாகிவிட்டது.

இந்த நாட்டில் நாடோடிகள், பிச்சைக்காரர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகிய முத்தரப்பினர் இருப்பையும் நியாயப்படுத்துவதற்காகவே அணையாத கோட்டை அடுப்பு மூட்டி

படிப்பகம்

www.padippakam.com



ஓயாத அன்னதானம் செய்யும் பரம்பரையைச் சேர்ந்தவர் மூப்பனார். அவர் தலைமையில் சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் தலித் அமைப்புகளும் சிறுபான்மையினரும் அணி திரண்டது நவீன வாக்குப் பொறுக்கி அரசியலின் முரண்களுக் கோர் எடுத்துக்காட்டு. அரசியலில் நலப்போக்கு இருக்கும் பட்சத்தில் அவர்கள் கலைஞரோடுதான் திரண்டிருக்க வேண் டும். ஆனால், கலைஞர்தான் அவர்களை கலைத்துப் போட் டவரும்.

தலித் அமைப்புகளும் சிறுபான்மையினரும் இப்படித்திரண் டதைச் சாதி அரசியலாக விமர்சித்தவர் கலைஞர். அவர் அடி யொற்றியே தலித் அல்லாத அரசியல் கட்சிகளும், பொதுமைச் சிந்தனையாளர்களும், பத்திரிகையாளர்களும், பிற ஊடகங்க ளும், அவை சார்ந்த கலைஞர்களும், கேலிச் சித்திரக்காரர்க ளும், ஒற்றைத்தேசியவாதிகளும் சொல்லிவைத்தாற்போல மூப் பனார் சாதி அரசியலை ஊக்குவிப்பதாகக் குறை கூறினர். இது, தலித்துகள் பற்றிய அவர்களின் நேர்மையற்ற, நாணய மற்ற, யோக்கியப் பொறுப்பற்ற, ஒழுக்கமற்ற, பித்தலாட்ட மான புரிதலையே காட்டுகிறது. அவர்கள் ஒருங்கிணைப்பை சாதி அரசியலாகவே பெயரிட்டாலும் அதற்கான நியாயமும் தகுதியும் அவர்களுக்கு மட்டுமே உண்டு. காரணம், மீட்சி யற்ற சாதி இழிவுகளைச் சுமந்துகொண்டிருப்பவர்கள் அவர் கள் மட்டுமே. இவ்வுண்மையின் பின்னணியோடு மதிப்பீடு செய்தால், போன தேர்தலில் பொருட்படுத்தும்படியான ஒரே அம்சம், தேர்தல் காலத்தில் மூப்பனார் தனது கூட்டணிக்கு உண்மையாய் இருந்ததும் உண்மையாய்ப் பேசிச் சமாளித்த தும்தான்.

எல்லாத் தரப்பு மக்களுமே நேர்மையற்ற அரசியலுக்கும் கொள்கையற்ற கூட்டணிக்கும் எதிரானவர்களாகவே காட்டிக் கொள்கின்றனர். அது உண்மையானால், அவர்கள் மூப்ப னார் கூட்டணியையே ஆதரித்திருக்க வேண்டும். அவருடைய பரம்பரை பண்ணையார்த்தனத்தையும் பழைய அரசியல் நட வடிக்கையையும் கணக்கில் கொண்டு அப்படியோர் கூட்டணி அமைப்பதில் அவருக்குள்ள தகுதியையும் நம்பகத்தன்மையை யும் பற்றி வேண்டுமானால் கேள்வி எழுப்பியிருக்கலாம். இவற் றில் ஏதொன்றையும் பரிசீலிக்காது பொதுக்கருத்தை உருவாக் கும் ஊடக சக்திகள் அவர் அணியைக் காலால் எத்தக்கூட

படிப்பகம்

www.padippakam.com



அருகதையற்ற பீ துடைத்த கல்லாகப் புறக்கணித்ததோடல்லாமல், முட்டமுட்ட ஏளனமும் செய்தனர். இந்தியப் புனிதப் போர்வைக்குள் புரையோடிச் சீழ் வடியும் கபடமான பொய் முகம் இதைவிடத் தெளிவாய் வெளிப்படுதல் அபூர்வம். ஒரு வேளை மூப்பனாரது பரம்பரை மரபுக்கேற்ப தன்னுடன் பிராமண சங்கங்கள், கோயில் நடைசாத்திகள், குடமுழுக்கு நடத்துனர் ஆகியோரை அணிசேர்த்துக்கொண்டிருந்தால் திக்கெட்டும் வசப்படுத்திடும் நவயுகக் கருப்பனார் ஆகியிருப்பாரோ என்னவோ. இந்த ஐம்பதாண்டு சுதந்திர இந்தியாவில் தலித்துகளுக்கும் சிறுபான்மையினருக்கும் எதிரான பகை மனப் போக்கு லேசர் கதிர்களேந்திய மாயாவிக் குரங்காகவே மூர்க்கம் பெற்றுள்ளது. இன்று எழுந்து நிற்பவன் நேற்று இரந்து வாழ்ந்தவன் அல்லவா என்ற பிணத்தைச் சுமக்கும் மூர்க்கம்.

தலித்துகளுக்குத் தன்னைவிட யார் அதிகம் செய்துவிட முடியும் என்று கலைஞர் கேட்பது, மூடர்களின் ஆதிக்க அரசியலுக்குத் தன்னை முன்னோடியாக்கிக்கொண்டு மானுடச் சீர்மையை அனிச்சையாகக் கை கழுவி விட்டவரின் சுயமெச்சுதலன்றி வேறில்லை. உப்புக்காற்று கல்முகம் கரைக்க ஆயிரம் ஆண்டுகள் போதா. ஆனால் ஊழல் காற்று சமத்துவபுரம் கரைக்க ஓராண்டே அதிகம். செய்தல் பரிமாணங்கள் அவை. கலைஞரின் அதே கேள்வியைக் கேட்கும் இன்னொரு தலைவர் டாக்டர் இராமதாஸ். ஒரு 'நல்ல வாய்' மனிதாபிமானி 'நாற வாய்' அரசியல் மேய்ப்பரானதற்கு அவரே அரிய சித்திரம். ஒரு தலித்தின் பாடைக்குத் தோள்கொடுத்த பெரியாரிய நியாயவாதி எங்கே; இன்று அதையே விலையாக்கி 'ஒரு தலித்எழில்மலை போனால் என்ன, இன்னொரு பொன்னுசாமி கிடைக்காமலா போவான்?' என்று தலித்துகளில் கருப்பு ஆடுகளை உருவாக்கி மகிழும் பாஜக போற்றி எங்கே. 'என்னைக் கட்சிய விட்டு நீக்குறதுன்னு ஐயா முடிவெடுத்திட்டாரு. ஆனா அதை ஒரு பறையன் கையாலதான் செய்யணுமா?' என்பதாக பேராசிரியர் தீரன் புழுங்கியிருக்கக் கூடுமெனில், பாமக பட்டாளத்தில் தலித்துகளுக்கென்ன மரியாதைக் குறைவு நேர்ந்துவிடப் போகிறது?

தலித்துகளுக்கு அதிகம் செய்துவிட்டதாகத் தம்பட்டமடிப்பதே அவர்களைப் பிச்சைக்காரர்களாகப் பார்க்க விழையும் ஆதிக்க மனத்தின் மோசடித்தனமான சாமர்த்தியமே. இந்த

படிப்பகம்

www.padippakam.com



மோசடியின் மூலபுருஷர் சாட்சாத் காந்தி மகாத்மாதான். தலித்துகளுக்கான இரட்டை வாக்குரிமைக்குப் போராடிய அம்பேத்கரை சாகும்வரை உண்ணாவிரதம் தொடங்கிச் சிக்க வைத்து பூனா ஒப்பந்தம் மூலம் தனித்தொகுதிகளைப் பரிசளித்த வள்ளல் அவர்.

இந்தத் தனித் தொகுதிகளின் முகரக்கட்டையில் என்ன எழுதியிருக்கிறது? 'தொகுதியில் நிற்கும் தகுதி பெற ஒருவன் தலித்தாய் அடையாளப்பட வேண்டும்' என்பது தவிர, மற்றபடி நீட்டிய இடத்தில் கைச்சாத்திடுதலும், காட்டிய இடத்தில் சூத்தை மூடிக்கொண்டு அமர்தலும், தலித்துகள் நலம் பற்றி தனிக்கருத்து ஏதுமின்றி, கட்சிக் கொறடாவின் கட்டளைக்குப் பணிந்து கட்டுத்தறி விலங்காய் மௌனம் காத்தலும்தானே?

தமிழக சட்டப்பேரவையில் 44 தலித் சாதி உறுப்பினர்கள் உள்ளனர். அரசியல் கட்சித் தலைமைகளுக்கு தலித்துகளின் மேல் மெய்யான அக்கறை இருக்குமானால் குறைந்தபட்சம் அரசியல் சட்டம் தலித்துகளுக்கு வழங்கும் உரிமைகளையும் சமத்துவங்களையும் மட்டுமே நிறுவும் பொருட்டு அவர்களை ஓரணியில் நிற்க அனுமதிக்கட்டுமே. செய்வார்களா? தனித்தொகுதிகளல்லாமல், பொதுத்தொகுதியில் ஒரு தலித்தை நிறுத்துவதுபற்றி நினைத்துப் பார்க்கக்கூடத் தயாராயில்லாத மனிதர்களெல்லாம் தலித்துகளுக்குப் பெரிதாய்ச் செய்துவிட்டதாகப் பீற்றிக்கொள்வது வெட்கக்கேடான விஷயம். 'தனித் தொகுதிகளில் நிறுத்துவதற்குத் தகுதியுள்ள தலித் வேட்பாளர்கள் கிடைக்கவில்லை' என்று கூறும் உரிமை மட்டும் வழங்கப்பட்டிருக்குமானல் நம் அரசியல் மகாத்மாக்கள் இந்த ஐம்பது ஆண்டுகளில் அம்மக்களை அரசியல் களத்திலிருந்தே வேரடி மண்ணோடு பிடுங்கியெறிந்திருப்பார்கள். இன்றுபோல தலித் இயக்கங்களிடம் தீண்டாமை அனுசரிக்கும் நிர்பந்தம் கலைஞருக்கு நேர்ந்திருக்காது.

தலித்துகள் காந்தியைப் பின்பற்றி அகிம்சை வழியில் போராட வேண்டும் என்கிறார் கலைஞர். அவர்கள் ஆயுதப் போராளிகளோ, தலைமறைவுப் போர்க்குழுக்களோ அல்ல என்னும்போது அகிம்சை என்பது அவரவர்க்கேற்ற பொருள் தருவதாகிறது. அகிம்சையும் போராட்டமும் ஒன்றுக்கொன்று

படிப்பகம்

www.padippakam.com



முரண்பட்டவை. போதகர்கள் அதை ஏற்பதில்லை. அந்த வகையில் காந்தியார் உண்மையிலேயே ஒரு மகாத்மாதான். அவர் அகிம்சையை ஒரு ஆயுதமாகக் கையாளத் தெரிந்த நல்ல தொரு தொழில்முறைக் கலைஞர்தானே தவிர அகிம்சையா கவே ஆகிவிட்டவர் அல்லர். "வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன்" என்றானே ஒரு கவிஞன். கவிஞனாய் அவன் அப்படி ஆனவன்; அல்லது ஆகத் துடித்தவன். காந்தி யாரும் அப்படி ஆகியிருந்தால் அவர் வாழ்நாளிலேயே அவரை நம்பியவர்களால் ஒரே ஒருமுறை எதிர்த்தெழுப்பிய 'ஒழிக' என்னும் முழக்கம் ஒலித்திருக்காது. பகத்சிங் தூக்கிலிடப் பட்டபோது அப்படி முழக்கப்பட்டது. அவர் மனது வைத்தி ருந்தால் அந்தப் படுகொலை தவிர்க்கப்பட்டிருக்கும். அகிம் சையை விதியாக்கியதால் சூழ்ந்த இம்சை அது. இறைவன் என்றொருவன் கருணையாகவும் அறியப்படுவானெனில், "நீ புரிந்த அந்த ஒரு இம்சைக்கு முன்னால் உனது அனைத்து அகிம்சை முயற்சிகளும் சுவடற்றுப் போயின," என்று காந்தி யாருக்கு உணர்த்தியிருப்பான்.

**கேள்வி: அரச வன்முறை என்று எதைச் சொல்கிறீர்கள்?**

அதிகார வர்க்கம் நிகழ்த்தும் வன்முறையை அரசு கண்டு கொள்ளாவிட்டாலோ நியாயப்படுத்தினாலோ அது அரச வன் முறைதான். விபத்துபோலத் தொடங்கி திட்டமிட்டு நிகழ்த் தப்படும் ஒடுக்குதலின் வன்முறை. ஒவ்வொரு தொடர் வன் முறைக்கும் போலத் தலித்துகள் – சிறுபான்மையினருக்கெதி ரான தொடர் வன்முறைக்கும் ஒரு அழிபோக்கான வரலாறு உண்டு. கழக ஆட்சியின் தொடக்க காலத்தில் கலைஞர் கௌரவ டாக்டர் பட்டம் பெற்றபோது உதயகுமார் என்னும் மாணவன் இறந்து போனான். அவனுடைய தந்தை அவனைத் தன் பிள்ளையில்லை என்று சொல்லி அழுதார். கோவையில் முஸ்லிம் இளைஞர்கள் வேட்டையாடிக் கொல்லப்பட்டதோடு, கலைஞரையே கொச்சையாகத் தூற்றிக்கொண்டு காவல்துறை யினர் ஊர்வலம் போனார்கள். அவர்கள் எவ்வாறு கண்டு கொள்ளப்பட்டார்கள் என்று மக்களுக்குச் சொல்லப்பட வில்லை. தாமிரபரணி ஆற்றில் விரட்டியடித்துக் கொல்லப் பட்டவர்களின் 17 உடல்களை மட்டும் கரைசேர்த்து, அம்ம ணமாய் ஆணின்மேல் பெண்ணும் பெண்ணின்மேல் ஆணு மாய்க் கிடத்தி நெஞ்சைப் பிளக்கும்படியான நீசத்தனம் காட்

படிப்பகம்

www.padippakam.com



சியாக்கப்பட்டது. தூசியில் கள்ளச்சாராயத்துக்கெதிரான நடவடிக்கையில் சமரசம் செய்துகொள்ள மறுத்துத் திமிறிய காவல் துறை துணை ஆய்வாளர் அரிதாஸ் ஒரு பைத்தியமென்றும் அவருக்காதரவாக நியாயம் கேட்டுக் கொதித்தெழுந்த 32 ஊர் மக்களும் பைத்தியத்தை மக்கள் நாயகனாக்கிய பைத்தியங்களாகவும் இனங்கண்டு முத்திரை குத்தப்பட்டனர். அதாவது அரசியல் செல்வாக்கோடு சாராயம் விற்கிறவனும் மாமூல் வசூலிக்கிறவனுமே தமிழக அரசில் தெளிந்த புத்தியுள்ளவர்கள் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. தாமிரபரணியில் கொல்லப்பட்டவர்களும், அரிதாசை ஆதரித்தவர்களும் எல்லாருமே தலித்துகள் அல்லர் என்றாலும், தலித்துகளின் பின்னால் போனால் என்ன நடக்கும் என்பது ஐயம்திரிபற, எதிர்க்கட்சித் தலைவர் சோ. பாலகிருஷ்ணனுக்கே அறிவுறுத்தப்பட்டது. அதன் அதிரடிப் பயனாக, ஜாலியன்வாலாபாக் படுகொலைக்கிணையாகச் சொல்லப்பட்ட தாமிரபரணி நதியின் மரணம் தமிழகத்தின் தொண்டைக்குள்ளேயே சிக்கிக் கிடக்கிறது. அண்மைத் தேர்தலில் தோற்றவர்களிலேயே அதிகம் வாக்கு பெற்ற திருமாவளவன் தனது தொகுதிக்குச் சென்று, தனக்கு வாக்களித்ததற்காகவே அடித்து நொறுக்கப்பட்டு, வீடு வாசல்களை இழந்து, குறைச் சருகுகளாய் சிதறுண்டு தவிக்கும் மக்களைப் பார்த்து அமுது ஆறுதல் பெறக்கூட அனுமதிக்கப்படவில்லை. (இதை அச்சு கோர்க்கும்போது நீதிமன்றம் நிபந்தனையோடு அனுமதித்திருக்கிறது.) இவ்வாறெல்லாம் எவ்வித மனஉறுத்தலோ, வரலாறு நகைக்குமே என்னும் திடுக்கீடோ இன்றி, இவ்வளவு வெளிப்படையாகத் தலித்துகளும் சிறுபான்மையினரும் நொறுக்கிச் சிதறடித்திருப்பது இதுவரை நடந்தவற்றின் உச்சம்.

**கேள்வி: அதற்காகக் கலைஞரை ஆதிக்கச் சாதியாளராகப் பார்ப்பது மரபுடைமையாகுமா?**

ஒரு புதிய மரபுக்கான கௌரவமாகவும் பார்க்கப்படலாம். இங்கே 'இந்து, முஸ்லிமாகலாம். முஸ்லிம், கிருத்துவனாகலாம். (வலம்புரி ஜான் நூலிலிருந்து கலைஞர் படித்துக்காட்டியது.) ஆனால் பள்ளர் மறவராக முடியாது. பறையர் வன்னியராக முடியாது. எனினும்கூட அவர்கள் ஆதிக்க சாதிகளாய் ஆக முடியாதா என்ன? அப்படி ஆகிவிடக்கூடாது என்ற அச்சத்தின் வக்கிரப் பதற்றங்கள்தாமே தலித்துகளுக்கெதிரான

படிப்பகம்

www.padippakam.com



வன்முறை! சூழ்திறம் அறிந்து, செய்வகை தெளிந்து, தொய் வின்றி முயன்றால் அடிநிலை மனிதனும் ஆதிக்க சாதியாகலாம் என்பதற்குக் கலைஞரே சாட்சி. 'மதம் மறு உலகிற்கானது; மாறலாம். சாதி இவ்வுலகக் காப்பு; மாற முடியாதது' என்ப தைக் கலைஞர் நம்புவதோடு (ஆனால் மெள்ள மெள்ள வெள் ளாளனாவதுதான் இம்மண்ணில் இயங்கியல் விதி) 'அடக்கும் சாதியையும் அடங்கும் சாதியையும் இடம் மாற்றலாம்' எனும் இயற்கை வகுத்த இயக்க விதியைத்தான் மார்க்ஸ் முன்வைத் தான் என்பதையும் ஸ்டாலினின் தந்தை நம்பிச் செயல்படுகி றார் என்பதற்கும் அவரே முன்னோடி.

பாஜகவுக்கு ஒரே ஒரு சட்டப்பேரவை உறுப்பினர் உள் ளார்- வேலாயுதன் நாயர். அவர் ஒரு அமைச்சருக்குரியமரியா தையோடு நடத்தப்படுவதாக அக்கட்சித்தலைவர் கே. என். இலட்சுமணனே சொல்கிறார். அதேபோல் தலித்துகளுக்கும் தற்போது ஒரே ஒரு உறுப்பினரே உள்ளார் - டாக்டர் கிருஷ் ணசாமி. ஆனால் அவர் ஒரு அடங்காப்பிடாரியாகத்தானே சபிக்கப்படுகிறார்? அவர் ஒன்றும் அமைச்சர் அந்தஸ்தைக் கேட்கவில்லை; தன் மக்களுக்குரிய மனித அந்தஸ்தைத்தான் கேட்கிறார். அதுதான் பிரச்சினையே என்றால் - 'ஆதிக்க சாதிக்குரிய வைப்புமுறை நியதிகளெல்லாம் கலைஞருக்கும் அத்துபடியாகிவிட்டது' என்று அர்த்தம்.

'ஒடுக்கப்பட்டவர்களுக்கே போர் அனுமதிக்கப்பட்டுள்ளது' (திருக்குரான் 22 : 39) என்கிறது இஸ்லாமிய வேதம். பாண் டவர்களும்கூட ஒடுக்கப்பட்டவர்களாய்த்தான் போர்க்களம் புகுந்தார்கள். எனில், 'கற்பி, ஒன்றுசேர், போராடு' என்னும் அம்பேத்கரியத்துக்கு மட்டும் போராட்டம் மறுக்கப்படுவதும், போராளி வன்முறையாளனாக்கப்படுவதும் எப்படி?

சமூக நீதியை முகப்புப் பட்டயமாகவும், இடஒதுக்கீட்டை அதை வென்றெடுக்கும் வழிமுறைகளில் ஒன்றாகவும் கொண்ட தமிழக அரசுக்கு, "(ஒதுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வந்த) கருணாநிதி முதலமைச்சராகியிருப்பது பெருமைக்குரிய காரி யம்" (திருத்தப்பட்ட சொற்கள் கட்டுரையாளருடையவை) என்று பெரியாரே மனந்திறந்து பாராட்டியதுண்டு. அவர் ஆட்சியில்தான் இத்தகைய அலகோலங்கள் அறுவடையாகின் றன. அம்பேத்கரை திட்டித் தீர்த்த அருண்ஷோரியை அமைச்

படிப்பகம்

www.padippakam.com



சராக்குவதும், ஆட்டோ சங்கரை அறிவாளனோடு ஒப்பிட்டு வக்கும் 'சோ' ராமசாமியை நியமன உறுப்பினராக்குவதும் வாஜ்பேயியின் தர்மம். அந்த 'ஜென்டில்மேனை' ஆட்சியதிகாரத்தில் பார்த்து மகிழ்வதற்கென்றே நம்மை 'நன்றி மறவாத் தமிழர்களாக்குவது' இன்றைய கலைஞரின் தர்மம்.

சொந்த மண்ணில் தாங்கள் அந்நியமாக்கப்பட்டதுபோன்றதொரு நெருக்கடிக்காட்பட்ட எல்லா தமிழ்ச் சாதிகளும்– குறிப்பாகத் தலித்துகளும் முஸ்லிம்களும் உதயசூரியனின் சித்திரக் கதிர்களில் தங்கள் விடியலுக்கான நம்பிக்கையை வெகு பாமரத்தனமாகப் புனைந்து கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தங்கள் கட்சியாகவே அடிநாள் முதல் பாவித்து வந்தனர். அந்தப் பொய்யான புனைவை முதலில் உடைத்தவர் டாக்டர் ராமதாஸ். இன்று எல்லாருமே– குறிப்பாக தலித்துகளும் முஸ்லிம்களும் புளியம் பழம் அதன் ஒட்டிலிருந்து கழன்று கொண்டது போல் முழுதுமாகக் கழன்று விட்டனர். தனக்கு மட்டுமே உண்மையாயுள்ள கலைஞரின் தன்மையப் போக்கும், பாஜக வுடனான தன்னூட்டத் தொடர்பும் அதைச் சாத்திச்மாக்கியுள்ளன. வெகுகாலத்துக்குப் பின்னர் மீட்டுருவாக்கப்பட்டுள்ள தமிழ் உளவியல் இது. இனி வருங்காலத்தி அவர்கள் திமுகவுடன் அணி சேரலாம்; வெல்லலாம்; தோற்கலாம். ஆனால் 'இது என் கட்சி' என்ற மயக்கம் கலைந்தது கலைந்ததுதான். கலைஞர் காலமும் கைங்கர்யமும் தமிழர்களின் மேலும் சில மயக்கங்களையும் கலைத்துவிட்டால் நலம். மாற்றங்கள் ஒற்றையாய் மொன்னைப்படுவதில்லை.

ஆயின், தமிழ்?

அது ஒன்றும் கலைஞரின் எச்சிற்கைப் பருக்கைக்காகக் காத்திருக்கும் நொள்ளைக்கண் காக்கையல்ல என்பதே எதிர் கால நம்பிக்கை. "தீதும் நன்றும் பிறர்தர வாரா."

ஒரு காலத்தில் கழகத்தின் ஆஸ்தான பேச்சாளரும் கலைஞரின் அருமைச் சீடருமான திருமாவளவனும் கிருஷ்ணசாமியும் தலித் மக்களை என்செய்ய நினைத்துள்ளார்கள், கலைஞரின் எச்சமாகத் தன்மையக்காரர்களாக ஆவார்களா, அல்லது தலித்மையக்காரர்களாக நீள்வார்களா என்பது தமிழகத்தின் மிச்சமுள்ள தலித்திய புத்தரசியல். ●

படிப்பகம்

www.padippakam.com



ஈழவியின் ஐந்து கவிதைகள்

## 1. குருவியும் காபூலிவாலாவும்

வளர வளர வெட்டுப்படும்
சிட்டுக்குருவியின் சிறகுகள்.
கால்கட்டிப் பறக்க விட்டுச்
சுண்டியிழுக்கும் காலம்.
இனி காற்றின் கதை கேட்க
வர மாட்டான் குட்டித்தோழன்.
வர வர குறுங்கொம்பும் வாயுலகும்
வாலும் விடைபெறும்.
நாலிரண்டில் தரைதட்டும் நடை.
பழக வேண்டும் தோள்சுமை,
'விளையாட்டில் எல்லாம்தான் உண்டு!'
—எளிதாகப் பகர்ந்தார் நகர்ந்தார்.
தெளிந்தும் களைத்திருக்கும் அகம்.
கன்னிப் பெண்ணுக்குச் சின்ன பொம்மை
கொண்டு தரும் அன்பு
கையறுபடும்.
வில்லடியும் கல்லடியுமான வாழ்வில்
சொல்ல வல்லாமல்
இட்ட கோட்டின் இப்புறமாய் சில
காபூலிவாலாக்கள்.

## 2. குறுக்குவெட்டு

குறைவமுத்தக் காற்று மண்டலம்
கண்டத்தில் மையங் கொண்டிருக்கும்.
கண்ட நேரம் விண்டு வீசி
அண்டசராசரங்களையும் அதிரச் செய்யும்.
கதி கலங்கும்; மதியும்.
கடினம்தான் புயல் கடந்து

படிப்பகம்

www.padippakam.com



துயில் அண்டுவது,
இருந்தும் தொடங்க வேண்டும்
இன்றேனும்
உறவைப் பிடுங்கி யெறிய.
அறுவை சிகிச்சைக்குத் தயாராவது
இறப்பினும் கொடிய பரிதவிப்பு.
கத்தி கிளறி யறுக்க
ரத்தக்களறியாய்ப் பெறுவது
சித்திரத் தன்ன என் பித்து மனமாய்
இருக்குமென்கின் றெல்லாம்
கரும்புகை மண்டி கருக்கழியாமல்.
குரல்வளைக் குழி யண்டப்பை
வருடப் பழி கிடக்கும்
உள்நாக்கின் குறுநீளம்
ஊமைக்காயம்.
தாயம் விழுந்தும் வெட்டப்பட்டும்
தட்டுப்பட்ட நேயம்
மாயமாய் மறைய வேண்டும்
'சூ மந்த்ரா காளீ.'

## 3 வராத காலை

தினம் தபால்கள் வந்தபடி..
தவறாமல் வந்து போகிறது வார இறுதி.
வழக்கம் போல் வெற்றுக் கை.
பழக வேண்டும் பசி நாளை முதலேனும்.
பகிர்ந்து கொள்ள முடியாப் பேழையிலிருந்து
அள்ளியள்ளி அழகு பார்க்கும்
ஏழைக் கழித்தலுங் கூட்டலும்
உழக்கு ஓராயிரமாய்...
எந்த வர்த்தகச் சந்தைக்கு தந்து விடலாகாது
ருபியுமில்லை, டாலருமில்லை.

www.padippakam.com


தாபம் கரந்த விழி சுரந்து கிடக்கும்
இருந்தாற் போல் அருகி லுன் தனிமணம் கவிய
தவித்துருகும் கரங் கனிந்து விறைக்கும்.
இது உறைபனிக் காலம்; மறையு மொரு நாள்.
நரை கூடியும் நான் ஆம் அதே ஆள்.
முகம் தேடிப் பதைக்கும் அகம்
நிறைக்கும் தேன்வண்ணம் நாடித்
தன்னிச்சையாய்த் துளைக்கும் வலியை
என் செய்ய ...?
தன்னைத் தான் படித்துய்ய
இன்னொரு பரிட்சை போலும் இவ்வேளை ...
கற்றதும் கல்லாததும் கடலளவாய்.

## 4. விடுபட்ட கண்ணிகள்

மார்சப்பிக் கண்கிறங்கிக் கிடந்த மதலையை
வேரறுத்துத் தார்ச்சாலை வீசியதாய் ...
நிலைமறந்து சிலந்திவலை வனைய லானேனோ?
உயிருறிஞ்சப் படுவதாய் உணர்ந்தனையோ? ஏனோ?
பின்னலும் ஒரு எண்ணமாய்ப் புரியப் புரியும்
பிறவும். இருந்தும்
அலைபாயும் உள்ளில் அச்சிறும் போலும்...
முலையளித்த வள்ளன்மை கோடி பெறும். மேலும்.
எவ்வரைச் சட்டத்தேயும் உறையா நேயம்.
காயமும் மருந்துமாக
தோய்ந்த பால் இன்னமும் வாயோரம் வழிந்தபடி
அழ மறந்து விழித்திருக்கும் பிள்ளை
காலம் அகல
மண்டிய மூட்டங்களூடே மறைந்தோடி விடும்
வண்டி ... வழித் தடமாய் படிந்து.
மண்டும்—
வினாக்களும், விடைகளும் சில.

படிப்பகம்

www.padippakam.com


## 5. மின்மௌனம்

தனிப்பொருள் கனத்த ஒவ்வொரு மௌனம்
தாற்காலிகம் நிரந்தர மிடையுறும்
முதலையகழி போலத் தொடர்புறவும்
அது போல இதுவு மிது போல அதுவும்
சம்மதமல்ல மௌனம் சம்மதம் மட்டுமல்ல
மதம் சினம் பயம் ஊமை அறிதல்
குரூரம் தண்டனை கருணை யில்லாமை யியலாமை
நேர்மௌனம் நிறைமௌனம் குறை மறை
மெய் புனை பூ புயல் முன் பின் இன்
னென்றுமாய் நயம் பல மௌனத்தின்
நிறம் நிறைய நிறைய வான
நிறையான நாமின் நிறைவி லுன்
சொல் போலவே நில் மௌனமு மென்னைக்
கொள்ளு மென்று கொள்கிறேன் கொல்.
வரித்திறம் வசப்படா தினசரி நெரிசலில்
தறிகெட்டோடும் பரிதேடித் திரிந்தபடி
புரிதலின் புரிதலில் நீ பொருளெழுதா
திருக்கலாம் . . .
ஆம் எட்டியும் எட்டாமலும். . .
கெட்ட தாமோ கைப்பெருவிரல்?
சுட்டதோ சட்டியும்?
விட்டு விட்டதோ கால் கட்டில்?
பட்டுப் போகா நம்பிக்கை சற்றே
எட்டிப் போக
அவ்வளவே யார் தெளிவார் எவ்வளவே
புறத்தளவே யாகுமாம் புறம்பற்றி யெனைப் பற்றுமுன்
மௌனம் அகம் தொற்றுவது மாகட்டும் அவ்வளவே
யவ்வளவில் நலிந்ததோ உடல் நலன்?
நலந் தானே நீ யென்?
பரிவுறவில் பதறு முன் மனம் எரிந்தெரியும் புரியும்
மௌனம் சம்மத மில்லை யில்லை சம்மதம்
சொல் தொல்லை யாக 'செல்' இல்லையாக.

படிப்பகம்

www.padippakam.com

முன் அட்டைத் தொடர்ச்சி—

இவ்வளவும் இன்னும் இழந்துவரும் மக்கள்
இதயத்தை இழக்கவில்லை.
இலங்கை அகதிமுகாம் அகதிகள்தாம்
இந்தக் குழந்தையை மீட்டிருக்கிறார்கள்.
காவல் நிலையத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள்.

பவானி சாகர் தாயே, உன்
பாலை என்ன செய்கிறாய்?
வா வந்து கொடு.
நீரானாலும் மண்ணானாலும் நம்
நெஞ்சங்களில் ஆறாதவை இருக்கின்றன.
காடாற்றவும் நம் கதியை ஆற்றவும்
யாராவது கொஞ்சம் பால் தெளிக்க வேண்டும் நாளைக்கு.

கொடுத்து வைத்திருந்தால்தான்
திரும்பப் பெறமுடியும்.
ஈழத்தாய்க்கு நடக்காதது.
இங்குள்ள உனக்கு நடந்துவிடவில்லை.
தருமபுரி, உசிலம்பட்டி
சேலம், திண்டுக்கல்— என்கிறார்கள்.
ஈரோடு—பவானிசாகர் என்று
இன்னும் சேர வேண்டாம்.

தாய்நாடு என்பது
தாயார்களின் நாடு அல்ல.
தாய்மையின் நாடு.
நாய்கள் நம் குழந்தையைக் காப்பாற்றிய செய்தி
நாளேட்டில் படிக்காமல் இருந்திருக்கலாம் நீ.
நாய்கள் நம்மிடமிருந்து கற்றுக் கொள்கின்றனவோ—
நாம் நாய்களிடமிருந்து கற்றுக் கொள்கிறோமோ—
தாய்மை இனிது!

சேயை இவ்வளவுக்குச்
சேய்மைப் படுத்தும் நம் வாழ்நிலை என்றால்
தாயாக வேண்டாம் யாரும் இங்கு.

தாயும் இல்லை.
சேயும் இல்லை.
குப்பையில் எறிதலும் இல்லை!

**பழமலய்**

படிப்பகம்

Kavithaasaran, Oct. to December '95. Regd.No. TN/MSN/740
CREATIVE LITERARY MONTHLY IN TAMIL R. Dis. 5479/90
www.padippakam.com

**தமிழவன்**
எழுதிய
புதிய
**நாவல்**

# ஜி. கே. எழுதிய மர்ம நாவல்

**டெமி 1/8 அளவு, 276 பக்கங்கள், விலை ரூ. 85/-**

ஒரு
புதிய
தேசத்தை
நிர்மானிப்பதற்கு
நடக்கும்
பல
கொலைகளைச்
செய்பவர்

யார் என
எழும் கேள்விக்
குரலுக்கு
இடையில்
ஆங்காங்கே
எழுகிறது ஒரு குரல்
இந்த நாவலை எழுதிய

**ஜி. கே. யார்?**

**விவரங்களுக்கு:**
**பல்கலைப் பதிப்பகம்**
36, தெற்குச் சிவன்கோயில் தெரு
கோடம்பாக்கம், சென்னை-600 024

Printed by Mrs. Kavithasaran at Allwell Press, 31, T.K.S. Nagar, Chennai-600019. Published at 580, T.H. Road, Chennai-600021 & Edited by: Kavithaasaran.

படிப்பகம்